# ஏர்முனை

ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே!
என்றும்நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே! – (ஏர்முனை)

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே – பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரி யினாலே – நாம்
சேமமுற நாள்முழுதும் உழைப்பத னாலே – இந்தத்
தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே! – (ஏர்முனை)

* நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக – அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக
பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுக்கட்டாக – அடிச்சுப்
பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக! – (ஏர்முனை)

வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா? – தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா – இது
வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? – என்
மனைக்கு வரக்காத் திருக்கும் நீஎன் சொத்தம்மா – (ஏர்முனை) *

– மருதகாசி

**பொருள் :** உழவுத்தொழிலுக்கு இணையான தொழில் உலகில் இல்லை என்பதால், நம் வாழ்வில் பஞ்சமில்லை. கதிரவனாலே மழை பொழிந்து நிலத்தில் பயிர்களும் பூத்துக் காய்த்து உள்ளன. நம் உழைப்பால் நாடும் நலம் பெறுகிறது. முத்து முத்தாக வியர்வை சிந்தியதால் கொத்துக்கொத்தாக நெல்மணிகள் விளைந்துள்ளன. நெற்பயிரானது பருவப்பெண்ணைப்போலத் தரையின் பக்கம் தலை சாய்ந்துள்ளது. இது தன்னை வளர்த்துவிட்ட நிலமகளுக்கு நெற்கதிர் தரும் ஆசை முத்தமாக அமைந்துள்ளது. நெற்கதிர்களை அறுத்துக் கட்டுக்கட்டி அடித்துத் தூற்றிப் பதர் நீக்கி வீட்டில் சேர்த்து வைப்போம். இந்த நெற்கதிர்கள் வீடு வந்து சேரவிருக்கின்றன. அவை என் செல்வமாகும்.

**சொற்பொருள்:** மாரி – மழை; சேமம் – நலம்; தேசம் – நாடு; முட்டு – குவியல்; நெத்தி – நெற்றி.



### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | அ. மருதகாசி |
| பிறந்த ஊர் | : | திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு |
| பெற்றோர் | : | அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள். |
| சிறப்பு | : | திரைக்கவித் திலகம் |
| காலம் | : | 13.02.1920–29.11.1989 |

**நூல் குறிப்பு :** 'திரைக்கவித் திலகம் அ. மருதகாசி பாடல்கள்' என்னும் தலைப்பில், திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அதில் உழவும் தொழிலும், தாலாட்டு, சமூகம், தத்துவம், நகைச்சுவை என்னும் தலைப்புகளில் பாடல்கள் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. சமூகம் என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   அ) நிகரற்ற தொழில் ______________ .

   ஆ) உழவர்கள் செல்வமாகக் கருதுவது ______________ .

2. பிரித்து எழுதுக.

   அ) நேரிங்கே ______________ .

   ஆ) சேமமுற ______________ .

   இ) தேசமெல்லாம் ______________ .

   ஈ) பருவப்பெண் ______________ .

### ஆ) குறுவினாக்கள்

1. முத்து முத்தான வியர்வைக்குக் கிடைத்த பயன் என்ன ?
2. உழவர் நெல்லை எவ்வாறு வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர் ?
3. விளைந்த நெற்கதிரைக் கவிஞர் எவ்வாறு உவமிக்கிறார் ?

### இ) சிறுவினா

கவிஞர் மருதகாசி உழவரின் செயல்களாகக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

### செயல் திட்டம்

உழவுத்தொழில் தொடர்பான திரையிசைப்பாடல்களை எழுதி வருக.

## பொங்கல் வழிபாடு

நீ தந்த கனி இது; நீ தந்த கரும்பிது
நீ தந்த நெற்கதிர் இது;
நீ தந்த நீர் இது; நீ தந்த சீர் இது;
நீ தந்த ஒளியும் இஃதே

நீ தந்த சீரும் நீ தந்த திருவும்
நினக்கே நிவேதனம் கதிரவா
கனகப் புரவிமேல் கடுகியே வந்திடு
கதிரவா எங்கள் கோவே!

நீ தந்த செல்வத்தை நிவேதனம்
செய்பிழை யாம் அறிந்தும்
வழிவேறு வணங்க யாம்
அறியாது கூவுகின்றோம்.
கதிரவா கடுகி வருவாய்!

*நீயன்றி மண்ணுண்டோ, விண்ணுண்டோ,
ஒளியுண்டோ, நிலவுமுண்டோ,
நீருண்டோ, என்னிடம் வாழ்த்துப் பொருளுமுண்டோ?
கதிரவா கனிந்து வருவாய்!

கரும்பு மனமும் இனிப்பாம் உயிரும்
நின்னடி படைத்து விட்டோம்
கதிரவா! ஏற்று மகிழ்வாய்
உயர்ந்தவா, உயிரின் முதலே! *

– ந. பிச்சமூர்த்தி

பொருள் : உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்திற்கும் முதல்வனாக விளங்கும் ஞாயிறே! இவ்வுலகில் காணும் கனிவகையும் கரும்பும் நெற்கதிர்களும் உன்னால் விளைந்தவை. இவை அனைத்தும் உன்னில் தோன்றிய நீராலும் கதிரொளியாலும் உருவான சிறப்பினைப் பெற்றவை. கதிரவனே! நீ தந்த அழகிய செல்வப்பொருள்கள் அனைத்தையும் உனக்கே படையலாக்கி வணங்குகிறோம். கதிரவா! எங்கள் தலைவனே! உனக்கு எதைப் படையலாக வைத்து வணங்குவது என்பதை அறியாது, எமக்கு நீ வழங்கிய பொருள்களையே படையலாக்கித் தவற்றைச் செய்துவிட்டோம். ஆயினும், எம் பிழை பொறுத்துப் பொன்னொளி வீசும் குதிரைகள் மீதேறி விரைந்து வருக.

நீயில்லாமல் மண்ணும் விண்ணும் ஒளியும் நிலவும் நீருமில்லை. எல்லாமே உன்னிடமிருந்து பிறந்தவை. எனவே, உன்னைப் புகழ்ந்து போற்ற எம்மிடம் எப்பொருளும் இல்லை. கரும்புபோலும் இனிய மனத்துடனும் இனிதான உயிர்ப்புடனும் உனது திருவடிகளைப் பணிந்து படைத்துவிட்டோம். அனைத்திலும் உயர்ந்த நீ, இவற்றை ஏற்று மகிழ்ந்து அருள் புரிவாயாக!

**சொற்பொருள் :** திரு – செல்வம்; கனகம் – பொன்; கோ – அரசன்; நிவேதனம் – படையலமுது; புரவி – குதிரை; கடுகி – விரைந்து.

**ஆசிரியர் குறிப்பு**



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | ந. வேங்கட மகாலிங்கம் |
| புனைபெயர் | : | ந. பிச்சமூர்த்தி |
| ஊர் | : | தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம் |
| தொழில் | : | 1924 – 1938 வரை வழக்குரைஞர்.<br>1938 – 1954 வரை கோவில் நிருவாக அலுவலர். |
| எழுத்துப்பணி | : | கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள். |
| காலம் | : | 15.08.1900 – 04.12.1976 |

**நூல் குறிப்பு :** ந. பிச்சமூர்த்தியின் கவிதை நூல்கள் இருபதாம் நூற்றாண்டின் தற்கால இலக்கியத் துறைக்குப் புதிய சிறப்புகளைச் சேர்த்திருக்கின்றன. பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை இவரது படைப்புகள். இவரது ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம் பெற்றுள்ள எண்பத்து மூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) கனகம் என்பதன் பொருள் ______________ .

1. செல்வம்    2. பொன்    3. மண்

ஆ) புரவி என்பதன் பொருள் ______________ .

1. பசு    2. குதிரை    3. யானை

2. பிரித்து எழுதுக.

1. நெற்கதிர்    3. மண்ணுண்டோ    5. ஒளியுண்டோ
2. நிலவுமுண்டோ    4. நின்னடி

3. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

கனி, கதிர், கதிரவன், கரும்பு, உயிர்.

### ஆ) குறுவினாக்கள்

1. கதிரவனால் விளைந்த பொருள்கள் எவை?
2. கதிரவனிடமிருந்து பிறந்தவை எவை?

### இ) சிறுவினா

கதிரவனுக்குப் படையலாக்கப்பட்ட பொருள்கள் எவை?

# நெசவு

## ( உரையாடல் )

அருளப்பர் : அம்மா, மலர்விழி! இங்கே வா, பாவு நூலில் ஓரிழை அறுந்துவிட்டது; வந்து அதனைப் பிணைத்துவிடு.

மலர்விழி : அப்பா, நான் படித்துக் கொண்டிருக்கிறேன்; அம்மாவைக் கூப்பிடுங்களேன்.

அருளப்பர் : மலர்விழி, நீ நன்றாகப் படி. ஆனால், படிப்பு மட்டுமே உனக்கு உற்ற துணை ஆகிவிடாது; கைத்தொழிலையும் கற்றுக்கொள்ள வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக் கொள் என்னும் பாடலை நீ கேட்டதில்லையா? வா, அறுந்துவிட்ட இழையை எடுத்துப் பிணைத்துவிடு.

மலர்விழி : சரி அப்பா, இதோ பாவு நூலில் அறுந்த இழையைப் பிணைத்து விட்டேன். (தோழி மங்கை உள்ளே நுழைகிறாள்) ஓ மங்கையா! வா வா! அப்பா, இவள் என் தோழி!

மங்கை : இதுதான் நெசவுக்கூடமா! இவையெல்லாம் என்னென்ன?

மலர்விழி : இதோ! அச்சுமரம், படைமரம், விழுதுகம்பு, குத்துக்கம்பி, ஓடம், ஊடைகுழல், பாவு இவையெல்லாம் தறி நெய்யப் பயன்படும் கருவிகள்.

அருளப்பர் : அருமை அருமை! மலர்விழி! நம் வீட்டு நெசவுக்கூடத்தைப் பற்றி உன் தோழிக்கு நன்றாகவே கூறுகிறாய்.

மங்கை : அங்கே மேலே ஒரு படம் உள்ளதே... அதில் உள்ளவர் யார்?

அருளப்பர் : மங்கை! தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் படம் அது. அவர் படத்தை ஏன் வைத்திருக்கிறேன் தெரியுமா? ஒருமுறை அவரிடம், பூக்களில் சிறந்த பூ எதுவெனக் கேட்டனர். அதற்குத் திரு.வி.க சற்றும் தயங்காமல் பருத்திப்பூ எனக் கூறினார்.

மற்றவையெல்லாம் பூத்துக் காய்த்துக் கனிந்துவிடும். ஆனால், பருத்தி ஒன்று மட்டும்தான் பூத்துக் காய்த்து வெடித்துப் பஞ்சாகி நூலாகி ஆடையாகி, நம் மானம் காத்து நிற்கும்.

மலர்விழி : அப்பா, பருத்தியைப் பிரித்து அடித்துப் பஞ்சாக்கி நெய்வதால் ஆடை உருவாகிவிடுகிறதா?

அருளப்பர் : அது மட்டுமா? ஆடை நெய்த பின்னர் வண்ணமேற்றல், பூ வேலைப்பாடுகள் செய்தல், கரையழகுபடுத்தல், மணமூட்டல், பளபளப்பாக்கல் எனப் பல வேலைகளுக்குப் பின்னரே அழகிய ஆடையாக உருவெடுக்கிறது.

மங்கை : ஆடையைப் பளபளப்பாக்குவார்களா? புதிராக இருக்கிறதே!

அருளப்பர் : நெய்த துணிகளைத் தோய்த்துப் பளபளப்பாக்கத் தேய்ப்புக் கல்லைப் பயன்படுத்துவர். இது பழங்காலத்திலிருந்து தொடர்ந்து வரும் பழக்கம்.

மங்கை : மலர்விழி, தறி மட்டும்தான் நெசவுக்குப் பயன்படுமா?

மலர்விழி : தறி நெசவு, விரல் நெசவு, மேல்நோக்கு நெசவு, கீழ்நோக்கு நெசவு எனப் பலவகை உண்டு. அப்படித்தானே, அப்பா!

அருளப்பர் : ஆமாம் மலர்விழி. பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூல் எண் 10, எண் 20, எண் 60, எண் 80, எண் 100, எண் 120 என அதன் மென்மைத் தன்மைக்கு ஏற்பப் பெயரிட்டு அழைக்கின்றோம். பாவுநூல், ஊடைநூல் இணைந்து கலிங்கம் என்னும் ஆடை உருவாகிறது. சேலை, வேட்டி, சட்டை, துண்டு என நூல் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது.

மங்கை : அப்பா, கைத்தறி நெசவு எங்கெங்கு நடைபெறுகின்றன? நெய்த ஆடைகள் எங்கே அனுப்பப்படுகின்றன?

அருளப்பர் : மங்கை! காஞ்சி, ஆரணி, மதுரை, கோவை, பரமக்குடி, சின்னாளப்பட்டி, ஈரோடு, சென்னிமலை, உறையூர், திருப்புவனம்



முதலிய ஊர்களில் கைத்தறி நெசவு இன்றும் நடைபெறுகிறது நகர்ப்புறங்களில் இயந்திர நெசவு நடைபெறுகிறது. தமிழகத்தில் நெய்யப்படும் ஆடைகள் உலக நாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மங்கை : ஆகா, இப்பொழுதுதான் என் நினைவிற்கு வருகிறது. திருப்பூர்ப் பின்னலாடைகள், மதுரைச் சுங்குடிப்புடவைகள், உறையூர்க் கண்டாங்கிச் சேலைகள், காஞ்சிப்பட்டாடைகள் உலகம் முழுவதும் மக்களால் விரும்பி வாங்கப்படுகின்றன என்பதை நாளிதழ்களில் படித்திருக்கிறேன்.

மலர்விழி : அப்பா! மங்கை, பட்டாடை என்று கூறியதும்தான், அதைப் பற்றி அறிந்துகொள்ளத் தோன்றுகிறது. பட்டாடை உருவாகும் முறை பற்றிச் சொல்லுங்கள் அப்பா, நாங்களும் தெரிந்து கொள்கிறோம்.

அருளப்பர் : பட்டாடையைப் பழங்காலத்திலிருந்தே நம் முன்னோர் அணிந்து வந்துள்ளனர். முதலில் பட்டுப்புழுவை வளர்க்க வேண்டும். அதன் வாயிலிருந்து சுரக்கும் திரவத்தால் பட்டுப்புழு தன்னைச் சுற்றிக் கூடு கட்டிக்கொள்ளும். கூட்டைவிட்டு உரிய காலத்தில் அது வெளியேறும்முன் கொதிக்கும் நீரில் பட்டுப்புழுவின் கூடுகளைப் போடுவார்கள். அப்புழு இறந்துபோனபின், அதன் கூடுகளிலிருந்து எடுக்கும் நூல்தான் பட்டு நூல். அப்பட்டு நூலில் உருவாகும் ஆடையே பட்டாடை.

மலர்விழி : அது சரி அப்பா, இன்று விழாக்களில் பெரியவர்களுக்கு ஆடை போர்த்திச் சிறப்புச் செய்கிறார்களே! இப்பழக்கம் எப்படி ஏற்பட்டது?

அருளப்பர் : பிறப்பு, திருமணம், துறவு, இறப்பு என அனைத்துச் சடங்குகளிலும் பட்டாடை முக்கிய இடம் பெறுகின்றது. கைத்தறி, கதர் ஆடைகளின் சிறப்பை உணர்ந்து அண்ணல் காந்தியடிகள், பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முதலியோர் கைத்தறிஆடைகளை அணிந்தனர்; மேடைகளில் மலர் மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடை போர்த்தும் பழக்கத்தையும் தோற்றுவித்தனர். குளிரில் வாடிய மயிலுக்குப் போர்வை போர்த்திய வள்ளல் பேகன், இதற்கு முன்னோடி. நம் வாழ்வின் தொடக்கம் முதல் இறுதிவரை புத்தாடை இணைந்து நிற்கிறது.

மங்கை : ஆடையில்லா மனிதன் அரை மனிதன், ஆள் பாதி; ஆடை பாதி என்னும் பழமொழிகள் ஆடையின் சிறப்பைக் குறிக்க எழுந்தவை

என்பதை நம் ஆசிரியரும் கூறியுள்ளார். நான் சொல்வது சரிதானே

மலர்விழி : அது மட்டும் இல்லை. செய்யும் தொழிலில் சீர் தூக்கின், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்னும் வழக்காறும் உண்டு.

மங்கை : மலர்விழி! நீ கொடுத்து வைத்தவள். அப்பா, நெசவுத்தொழில் நலிந்து போகாமல் காக்கும் உங்கள் சேவை போற்றுதற்குரியது. உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடி தமிழகம் என்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய செய்தி. நாளை என் பிறந்த நாள். கைத்தறி ஆடையைப் பிறந்த நாள் பரிசாகத் தருமாறு என் தந்தையிடம் கேட்கப் போகிறேன்; சென்று வரட்டுமா!

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) மயிலுக்குப் போர்வை போர்த்திய வள்ளல்

1. பேகன்   2. பாரி   3. ஓரி

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| காஞ்சி | – | சுங்குடிப் புடவைகள் |
| திருப்பூர் | – | கண்டாங்கிச் சேலைகள் |
| மதுரை | – | போர்வைகள் |
| உறையூர் | – | பின்னலாடைகள் |
| சென்னிமலை | – | பட்டாடைகள் |

### ஆ) குறுவினாக்கள்

1. கைத்தறி நெசவுக்குரிய கருவிகள் யாவை ?
2. கைத்தறி நெசவு நடைபெறும் ஊர்கள் நான்கனை எழுதுக.
3. ஆடையின் தேவையைப் பற்றி விளக்கும் பழமொழிகளை எழுதுக.
4. கைத்தறி ஆடைகளின் புகழ் பரப்பியவர் யாவர் ?

### இ) சிறுவினாக்கள்

1. அழகிய ஆடை எவ்வாறு உருவாகிறது ?
2. பட்டுநூல் எவ்வாறு உருவாகிறது ?

### ஈ) நெடுவினா

கைத்தறி நெசவு பற்றி விளக்குக.

# தமிழ் நாடக முன்னோடிகள்

கண்ணுக்கும் காதுக்கும் மனத்துக்கும் இன்பம் பயக்கும் கலை நாடகக்கலை. ஆய கலைகள் அறுபத்து நான்கனுள் நாடகக்கலைக்குத் தனியிடமுண்டு. அதன் பெருமையும் சிறப்பும் உணர்ந்த நம் முன்னோர் முத்தமிழுள் ஒன்றாகப் போற்றி மகிழ்ந்தனர்.

உணர்ச்சியைத் தூண்டி, உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் சிறந்த கலை நாடகம்.

சங்க காலத் தமிழ் வானில், நாடகம் ஒளி வீசித் திகழ்ந்ததாக அறிஞர் கூறுவர். ஆனால், அதனைச் சான்றுடன் நிறுவ ஒரு நாடக நூலும் கிடைக்கவில்லை. சயந்தம், முறுவல், மதிவாணன் நாடகத்தமிழ், செயிற்றியம் முதலிய நாடக இலக்கண நூல்களின் பெயர்கள் மட்டுமே கிடைக்கின்றன. மற்றவை கால வெள்ளத்தில் மூழ்கிவிட்டன போலும். கல்வெட்டுகள் வாயிலாக இடைக்காலச் சோழப் பேரரசர்கள் ஆதரவில் ஆலயங்களில் நாடகங்கள் நடத்தப் பெற்றுள்ளன என அறிகிறோம். பின்னர்ப் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள், கீர்த்தனை நாடகங்கள் என்பன மக்களிடையே நடந்தேறின.

இருபதாம் நூற்றாண்டில் நாடகத்தமிழுக்குப் புத்துயிர் ஊட்ட ஓர் எழுச்சி தோன்றியது. அந்த எழுச்சியை, புரட்சியை, மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மூவர் : பரிதிமாற்கலைஞர், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்தனார் ஆகியோர்.

ஒரே காலகட்டத்தில் தோன்றி, நாடகமுன்னேற்றம் என்னும் ஒரே திசையை நோக்கி வெவ்வேறு பாதையில் நடைபோட்ட இவர்களே இன்றைய தமிழ்நாடக மறுமலர்ச்சியின் முன்னோடிகள்.

### பரிதிமாற்கலைஞர் (1870–1903)

தமிழகம் உரிமை இழந்து ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில் அருந்தமிழைப் போற்றி வளர்த்த அறிஞருள் ஒருவர் பரிதிமாற் கலைஞர்; உயர்தனிச் செம்மொழித் தகுதி தமிழுக்கே உண்டு என அக்காலத்திலேயே முழங்கியவர். சூரிய நாராயண சாஸ்திரி என்னும் தம் பெயரைத் தூய தமிழில் பரிதிமாற்கலைஞன் என மாற்றி அமைத்துக் கொண்டவர். இவர், தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றிக் கொண்டே நாடகத் தொண்டாற்றியவர்.

பரிதிமாற்கலைஞர், செம்மாந்த சீரிய செந்தமிழ் நடையில் நாடகங்களை இயற்றி அரங்கேற்றினார். மேலைநாட்டு நாடக ஆசிரியர்களான சேக்ஸ்பியர், எப்சன், மோலியர்

ஆகியோரைப் போன்று தமிழகத்தில் நாடகாசிரியர்கள் தோன்ற வேண்டும் எனப் பெரிதும் விழைந்தவர். ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்னும் இவரது நாடகங்கள் இந்த ஆர்வத்தின் விளைவாக எழுந்தவை. பரிதிமாற் கலைஞர், தமிழில் நாடக இலக்கண நூல்கள் இல்லையே என்று ஏங்கினார். அதற்காகத் தாமே ஒரு நூலை எழுதினார். இவர் வடமொழி, மேனாட்டு மரபுகளைத் தமிழ் நாடக மரபோடு இணைத்து **நாடகவியல்** என்னும் நூலைப் படைத்தார்.




இவரது **மானவிஜயம்** நாடகம், களவழி நாற்பது என்னும் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது. சேரமான் கணைக்கால் இரும்பொறையுடன் புலவர் பொய்கையாரும் இறந்துபடுகின்றார்; இவ்விருவர் இறப்பிற்கும் தானே காரணம் என்று எண்ணிய சோழன் செங்கணான்,

மானப் பெருமையை மனக்கொண்டு அந்தோ
ஈனப் பாரில் இருத்தல் வேட்டிலை
உன்னும் போழ்தினில் உன்னைக் கொன்றவன்
செங்கணான் எனும்இச் சிறுமதி யுடையான்

என்று புலம்பித் தன்னை மாய்த்துக்கொள்ளும் காட்சி, செந்தமிழ் நடைபயில, அவலச்சுவையை வெளிப்படுத்தும் இடமாகும்.

## சங்கரதாசு சுவாமிகள் (1867–1920)

நாடகத்தமிழ் உலகின் இமயமலை எனப் பாராட்டப்படுபவர் சங்கரதாசு சுவாமிகள் என்பது நாடறிந்த உண்மை. நாடகம் மக்களை மகிழ்விக்கவேண்டும் என்பதே சுவாமிகளின் முதல் நோக்கமாகும். எனவே, பாமர மக்களுக்குத் தெரிந்த பழங்கதைகளை நாடகமாக்கினார். நாடகத்தைச் சமுதாயச் சீர்திருத்தக் கருவியாகவும் கையிலெடுத்த சுவாமிகள், தம் நாடகங்கள் வாயிலாகப் பத்தி, ஒழுக்கம் ஆகியனவற்றை வலியுறுத்தி, மக்களுக்கு நல்லறிவு புகட்டினார்.



நாடகத்தமிழ் நலிந்துபோகாமல் தடுத்துக் காப்பதற்கு ஒழுங்கும், கட்டுப்பாடுமே அடித்தளம் என்பதை அறிந்து, சிறுவர்களைக்கொண்டு நாடகக் குழுக்களைத் தோற்றுவித்தார்.

சங்கரதாசு சுவாமிகள் வள்ளி திருமணம், கோவலன் சரித்திரம், சதி சுலோசனா, இலவகுசா, பக்தப் பிரகலாதா, நல்லதங்காள், சதி அனுசுயா, வீரஅபிமன்யு, பவளக்கொடி முதலிய நாற்பது நாடகங்களை இயற்றியுள்ளார். இவர் நாடகங்கள் சிந்தைக்கு

இனியன; அவற்றிலமைந்த சந்தப்பாடல்கள் செவிக்கு இனியன.

துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம்
சுவைசொட்டும் சந்தநயம் தோய்ந்திருக்கும்

என்று புத்தனேரி சுப்ரமணியம் என்பார் சுவாமிகளைப் புகழ்கின்றார்.

சதி சுலோசனா நாடகத்தில் இந்திரசித்து, தன் நண்பனிடம் பூக்கள் பற்றிக் கேட்க:

பூவின் விவரம் பலகோடி அதனை
எவர் போதிப்பவர் தேடி
அப்பு கலப்பு பதைப்பு கொதிப்பு
செப்பு அருப்பு இருப்பு நெருப்பு
உப்பு உரப்பு கசப்பு புளிப்பு
இத்தனை பூவிற்குமேல் இரவில் கண்விழிப்பு
இயம்பிய மொழியெல்லாம் தமிழ்ப் புத்தகக் குறிப்பு

என அடுக்குமொழி பகர்வது இவரது சந்த நடைக்குச் சான்றாகும்.

இவர் இயற்றிய கோவலன் சரித்திரம் மதுரையில் அரங்கேறியபொழுது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாம். காற்சிலம்பு விற்று வர நகருக்குப் போவதாகக் கோவலன் கூறக் கண்ணகியோ,

மாபாவியோர் கூடி வாழும் மாநகருக்கு
மன்னா போகாதீர்

என்று பாடுவது போன்ற காட்சி.

அந்நகரத்தார் முன்னிலையிலேயே இப்படியொரு பாட்டு! அவை நடுவே கூச்சலும் குழப்பமும் எழுந்தன. ‘எங்கே அந்த நாடகப் புலவன். கொண்டு வா மேடைக்கு’ என்ற ஆரவாரம் கேட்டுச் சுவாமிகள் அமைதியாக, ஆனால், மிடுக்காக வந்து நின்றார். அவையினர் முன்பு, “மா என்பது அலைமகளையும் பா என்பது கலைமகளையும் வி என்பது மலைமகளையும் குறிக்கிறது” என்று திருவிளையாடற் புராணச் சான்று காட்டி விளக்கி, “இப்படி மூன்று தேவியரின் அருளையும் முழுமையாய்ப் பெற்ற நகரில் சிலம்பை யார் வாங்கக் கூடும்? என்று இந்நகரைப் பெருமைப்படுத்தினேன்; அப்படியல்லாமல் சிறுமைபடுத்தவில்லை” என்றார்.

நல்ல உடற்கட்டும் எடுப்பான தோற்றமும் உடைய இவர் எமன், இராவணன், இரணியன் முதலிய வேடங்கள் புனைந்து மேடையில் நிற்கும்போதே பார்ப்பவர்க்குக் கிலி அடிக்கும். இவர் எழுத்துத் திறமையோடு நடிப்புத் திறமையும் பெற்றிருந்தார்.

## பம்மல் சம்பந்தனார் ( 1875–1964)



பம்மல் சம்பந்தனார், 1891ஆம் ஆண்டு தனது பதினெட்டாம் வயதில் சுகுணவிலாச சபையைத் தொடங்கித் தமிழ் மக்களின் சிந்தனையை நாடகக்கலை நோக்கித் திசை திருப்பினார். இவர் தேவையற்ற ஆடல் பாடல்களைக் குறைத்தார்; விடியும்வரை அலுப்புறச் செய்த நிலையை மாற்றினார்; விறுவிறுப்போடு, பல்சுவைகளையும் நிரப்பிக் கலைச்சேவையில் ஈடுபட்டார்.

பம்மல் சம்பந்தனார், கட்டுக்குலையாத நாடகக் குழுவை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்; அதனால், நடிகர்களால், கலைஞர் என மதிக்கப்பட்டார்.

நீதிமன்றத்தில் பணியாற்றிய இவர், மாற்றுப் பணியாக நாடகக்கலையினுள் புகுந்தார். இவர், தொண்ணூற்றுநான்கு நாடகங்களைத் தமிழன்னைக்குப் படைத்தளித்தார். மனோகரா, யயாதி, சிறுத்தொண்டன், கர்ணன், சபாபதி, பொன்விலங்கு என்பன அவற்றுள் சில.

இவர், சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தழுவி 'வாணிபுரத்து வணிகன்,' 'விரும்பிய விதமே,' 'அமலாதித்தியன்' முதலிய தமிழ் நாடகங்களைப் படைத்தார்.

பம்மல் சம்பந்தனார் சிறந்த நாடக இயக்குநராகவும் திறமையான நடிகராகவும் அறிவுமிக்க ஆசிரியராகவும் விளங்கினார்.

இவர், நாடகக் காட்சிக்கேற்பத் திரைச்சீலைகளையும் பொருத்தமான ஓவியங்களை யும் தொங்கவிடுமாறு வற்புறுத்தினார். இவர், கேளிக்கை நாடகம் என்ற வகையினையும் நாடக நையாண்டியினையும் தமிழ் நாடக உலகுக்கு அறிமுகப்படுத்தி ஆக்கம் சேர்த்தார்.

பொட்டும் புனைந்தழகாய்க் கட்டும்
பீதாம்பரமாம் பட்டும்
சோதி செய் பகட்டும்
செயலைக் கண்டு கிட்டும் வருணிக்கும்
பொழுது எனக்கு மட்டும்.

என்ற இவரது அடுக்குமொழிகள், பின்வந்த திரைப்படங்களுக்கு வசனங்களாக மாறின. இவரது படைப்பான சபாபதி நாடகப்பாத்திரம் இன்றளவும் மறக்கமுடியாத நகைச்சுவைப் பாத்திரமாகும்.

சபாபதி ஆங்கில மோகம் பிடித்த இளைஞன். தமிழில் இனிய பயணம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதச் சொல்ல, தாளை எடுத்து விறுவிறுவென எழுதி முடிக்கிறான். ஆசிரியர் பிரித்துப் பார்க்க, தொடர்வண்டி நிலையத்தை விட்டு

சிக்...புக்...சிக்...புக்... என்று ஒரு பக்கம், இரண்டாம் பக்கம் நிறைய, 'கட.....கடா.... கட.... மட.... மட' என்று எழுதி, மூன்றாம் பக்கத்தில் முழுக்க தட.... தடா....தட.....தடாவென்று ஓடியதென எழுதியிருக்கிறான். சபாபதி என்ற இந்நாடகம் படிக்கவும் பார்க்கவும் நகைச்சுவையை ஏற்படுத்தவல்லது.

குறள் வடிவத்தைத் தன் போக்கிற்கேற்ப மாற்றி எழுதியது, நாடகத்தைக் காண்போருக்கு நகைப்பை விளைவிக்கும்.

சூதினும் சூதானது யாதெனில் சூதினும்
சூதே சூதா னது.

பரிதிமாற்கலைஞர், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்தனார் ஆகிய இம்முப்பெரும் கலைஞர்களும் தம் எழுத்துத் திறமையாலும் நடிப்பாற்றலாலும் நாடகத்தமிழ் வளர்ச்சிக்காக உழைத்த சான்றோராவர்.

இம்மூவரும் பிற்கால நாடகக் கலைஞர்களுக்கு வழிகாட்டினார்கள். பரிதிமாற் கலைஞரைத் தமிழ் நாடகப் பேராசிரியர் என்றும், சங்கரதாசு சுவாமிகளைத் தமிழ் நாடகத் தலைமைஆசிரியர் என்றும், பம்மல் சம்பந்தனாரைத் தமிழ் நாடகத் தந்தை என்றும் நாடக உலகம் இன்றளவும் போற்றி வணங்குகிறது.

தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர், கந்தசாமி, என்.எஸ்.கிருஷ்ணன், அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, டி.கே.எஸ். சகோதரர்கள், ஆர். எஸ். மனோகர் முதலியோர் இவர்தம் அடியொற்றி நாடகக்கலை வளர உறுதுணை புரிந்தோராவர்.

இன்று ஓரங்க நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வானொலி நாடகங்கள், மேடை நாடகங்கள் என நாடகக்லை வளர்ந்து வந்தாலும் சின்னத்திரைத் தொலைக்காட்சித் தொடர்கள் நாடக இடத்தினைப் பிடித்துக் கொண்டன.

## மாதிரி வினாக்கள்

### கட்டுரை வினாக்கள்

1. பரிதிமாற் கலைஞர் நாடகத்துறைக்கு ஆற்றிய பணியினை எழுதுக
2. சங்கரதாசு சுவாமிகளின் நாடகத்தொண்டினைப் பற்றிக் கட்டுரை வரைக.
3. தமிழ் நாடகத் தந்தையெனப் போற்றப்படும் பம்மல் சம்பந்தனார் நாடகத் துறைக்கு ஆற்றிய பணியினை விளக்குக.

நாடகம் ஒன்றை அமைத்து வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

# வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். எழினி! முன்வகுப்பில் கற்றதைப்பற்றிச் சொல்.

எழினி : பெயர்ச்சொற்கள் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : நன்று. முகிலன்! பையில் என்ன கொண்டுவந்துள்ளாய்?

முகிலன் : பழுத்த பழம் எடுத்து வந்துள்ளேன், ஐயா.

ஆசிரியர் : (மாணவன் கூறிய தொடரைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களைப் படிக்கச் சொல்லுதல்). பழம் எடுத்து வந்தவன் யார்?

முருகன் : முகிலன், ஐயா.

ஆசிரியர் : என்ன எடுத்து வந்தான்?

முருகன் : பழுத்த பழம் எடுத்து வந்தான், ஐயா.

ஆசிரியர் : இத்தொடரில் வந்துள்ள வினைச்சொற்களைப் பற்றிக் கற்றுக் கொள்வோம். முல்லை! இத்தொடரில் வந்துள்ள வினைச்சொற்களைச் சொல்.

முல்லை : வந்தான், பழுத்த, எடுத்து ஆகியன.

ஆசிரியர் : நன்று. இவற்றுள் 'வந்தான்' என்பது 'செயல்' முற்றுப்பெற்றதை உணர்த்துவதால், இது வினைமுற்று ஆகும். இச்சொல் எந்தக் காலத்தைக் காட்டுகிறது?

சிந்து : இறந்தகாலம் காட்டுகிறது, ஐயா.

ஆசிரியர் : 'வந்தான்' என்னும் இச்சொல் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எவ்வாறு வரும்?

அழகன் : வருகின்றான், வருவான் என வரும், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. இவ்வாறு செயல் முடிந்ததைக் குறிக்கும் சொல்லே வினைமுற்று ஆகும். இது மூன்று காலங்களில் ஒன்றை உணர்த்தும்; திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும். கோபால், அடுத்த சொல்லைப் படி.

கோபால் : 'பழுத்த' என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : பழுத்த என்னும் சொல், முற்றுப்பெறாத வினைச்சொல். இச்சொல் பழம் என்னும் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவுபெறுகிறது. இவ்வாறு ஒரு பெயரைக் கொண்டு முடியும் முற்றுப் பெறாத வினைச்சொல்லே பெயரெச்சம் ஆகும். இது முக்காலத்திலும் வரும். பழுத்த என்னும்சொல் இறந்தகாலத்தில் வந்துள்ளதுபோல், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எவ்வாறுவரும் என்று சொல்லுங்கள்.

இனியன் : பழுக்கின்ற பழம், பழுக்கும் பழம் என வரும், ஐயா.

ஆசிரியர் : மிகவும் நன்று. அடுத்த சொல் என்ன?

இனியன் : எடுத்து என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : எடுத்து என்னும் முற்றுப்பெறாத வினைச்சொல் 'வந்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் முக்காலத்தையும் உணர்த்தும்.

எடுத்து வந்தான் – இஃது இறந்தகால வினையெச்சம். இதைப்போல் நிகழ்கால, எதிர்காலங்களுக்கும் பொருத்திக் கூறுங்கள்.

கோபால் : எடுத்து வருகின்றான் – நிகழ்கால வினையெச்சம். எடுத்து வருவான் – எதிர்கால வினையெச்சம்

பயிற்சி :

1. பின்வரும் தொடரிலுள்ள வினைமுற்றை வட்டமிடுக.

   யாழினி கடுமையாக உழைத்தாள்.

2. பின்வரும் தொடரிலுள்ள பெயரெச்சத்தை வட்டமிடுக.

   நன்கு படித்த மாணவன் முதல் மதிப்பெண் பெற்றான்.

3. பின்வரும் தொடரிலுள்ள வினையெச்சத்தை வட்டமிடுக.

   குழந்தை ஆடிப் பாடி மகிழ்ந்தது.

## மாதிரி வினாக்கள்

அ) கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. வினைமுற்று என்றால் என்ன? சான்று தருக.
2. பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
3. வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

4. அட்டவணையை நிரப்புக.

| வ.எண் | வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|---|
| 1 | படித்தான் | ______ | படித்து |
| 2 | ______ | வந்த | வந்து |
| 3 | கண்டான் | ______ | கண்டு |
| 4 | ______ | கேட்ட | ______ |

ஆ) பின்வரும் பத்தியிலுள்ள வினைமுற்று, பெயரெச்ச, வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.

காலையில் கண் விழித்த செல்வி, படுக்கையைவிட்டு எழுந்தாள்; பல் துலக்கி முகம் கழுவினாள்; வாசல் தெளித்துக் கோலமிட்டாள். அவளின் தாய் அவளின் செயலைக் கண்டு பாராட்டினாள். மனமகிழ்ந்த செல்வி மகிழ்ச்சியில் துள்ளி ஓடினாள்; ஆடிப்பாடி மகிழ்ந்தாள். அன்றைய பாடங்களைப் படித்து முடித்தாள்; பள்ளிக்கு விரைந்து சென்றாள்.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

1. நெசவுத்தொழில் மேம்படுவற்குரிய வழிமுறைகள் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. தொலைக்காட்சி நாடகம் ஒன்றைப் பற்றிக் கலந்துரையாடுக.

### ஆ) படித்தல் திறன்

இந்நாள் அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமின்றி, அவர்வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர்தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிர் உள்ளவையாக்கிட, உறுதிபூணும் நாளாகும். மாலையின் மாண்பு மணத்தில் இருக்கிறது; விளக்கின் பயன் ஒளியில் இருக்கிறது. அதுபோல, விழாக்களின் பயன் நம் செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது.

### இ) எழுதுதல் திறன்

விளம்பரங்கள், அறிவிப்புகளைப் பார்த்துப் புரிந்துகொள்ளுதல்

மதுரையில் தென்னிந்திய நூல் விற்பனையாளர் சங்கம் நடத்தும்

**ஐந்தாவது புத்தகக் கண்காட்சி**

**கழிவு 10 விழுக்காடு**

இடம் : தமுக்கம் மைதானம்,
மதுரை – 625 002.
அனைவரும் வாரீர்!

நாள் : 2.9.2010–11.9.2010
நேரம் : காலை 11 – இரவு 9 மணி
நுழைவுக் கட்டணம் இல்லை!

### வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதைப் பற்றியது ?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது ?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது ?
4. புத்தகம் வாங்குவோருக்கு எத்தனை விழுக்காடு கழிவு தரப்படுகிறது ?
5. புத்தகக் கண்காட்சி நடத்துவோர் யார் ?

### ஈ) படைப்புத்திறன்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு – குறித்து நாடகம் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) மரபுச்சொற்கள்

நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு எனப்படும். மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை. யானைக்கன்று என்பதே மரபுச்சொல். இதனை யானைக்குட்டி எனக் கூறுவது மரபுப்பிழை.

### இளமை மரபுச்சொற்கள்

**தாவரங்கள் : காய்களின் இளமை மரபு**

| | | |
|---|---|---|
| அவரைப்பிஞ்சு | முருங்கைப்பிஞ்சு | கத்தரிப்பிஞ்சு |
| வாழைக்கச்சல் | வெள்ளரிப்பிஞ்சு | கொய்யாப்பிஞ்சு |
| பலாமூசு | தென்னங்குரும்பை | மாவடு |

**விலங்குகள்: இளமை மரபு**

| | | |
|---|---|---|
| குருவிக்குஞ்சு | கோழிக்குஞ்சு | ஆட்டுக்குட்டி |
| கழுதைக்குட்டி | எருமைக்கன்று | குதிரைக்குட்டி |
| பன்றிக்குட்டி | குரங்குக்குட்டி | மான்கன்று |
| நாய்க்குட்டி | பூனைக்குட்டி | யானைக்கன்று |
| சிங்கக்குருளை | புலிப்பறழ் | கீரிப்பிள்ளை |

### ஒலி மரபுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| குயில் கூவும் | மயில் அகவும் | சேவல் கூவும் |
| காகம் கரையும் | கிளி கொஞ்சும் | கூகை குழறும் |
| வானம்பாடி பாடும் | ஆந்தை அலறும் | கோழி கொக்கரிக்கும் |
| குதிரை கனைக்கும் | சிங்கம் முழங்கும்(கர்ச்சிக்கும்) | நரி ஊளையிடும் |
| நாய் குரைக்கும் | பன்றி உறுமும் | யானை பிளிறும். |

### வினைமரபுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அப்பம் தின் | காய்கறி அரி | இலை பறி |
| நெல் தூற்று | களை பறி | பழம் தின் |
| நீர் பாய்ச்சு | பாட்டுப் பாடு | மலர் கொய் |

| | | |
|---|---|---|
| கிளையை ஒடி | மரம் வெட்டு | விதையை விதை |
| நாற்று நடு | படம் வரை | கட்டுரை எழுது |
| தீமூட்டு | விளக்கேற்று | உணவு உண் |

பயிற்சி : பொருத்துக.

1. காகம் – கூவும்
2. குதிரை – கரையும்
3. சிங்கம் – கனைக்கும்
4. நரி – முழங்கும்
5. குயில் – ஊளையிடும்

ஆ) தமிழெண்களைக் கூட்டுக.

1. க+உ = 2. ரு+ரு = 3. சு+ௗ = 4. உ+சு =

இ) கட்டுரை எழுதுதல்: உழவர் திருநாள்

ஈ) அகரவரிசையில் அமைக்க.

சீப்பு, சங்கு, சைதை, செப்பு, சூளை, சேவல், சாவி, சுக்கு, சோலை, சிலை, சொல், சௌமியன், சக்கரம், சீரகம், சென்னை, சாறு, செல்வம், சுண்ணம், சூது, செடி.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

தொடர்வண்டி நிலையத்தில்...

பயணி : டிக்கெட் கவுண்டர் எங்கே இருக்குச் சொல்லுங்கையா?

ஒருவர் : ஸ்டெப்ட்டாபோயி லெப்ட்ல திரும்புங்க. அங்க கார்னர்ல ஒரு போர்டு இருக்கும். அங்கபோயி வாங்குங்க.

பயணி : ஐயா, தாம்பரத்திற்கு ஒரு டிக்கெட் கொடுங்க.

அலுவலர் : செவன் ருப்பீஸ் சேஞ்சா கொடுங்க.

பயணி : இந்தாங்க பத்து ரூபாயா இருக்கு.

அலுவலர் : டிக்கெட் இந்தாங்க. மீதி சேஞ்ச் எடுத்துக்கங்க.

பயணி : ஐயா, தாம்பரம் போற டிரெயின் எந்த பிளாட்பாம்ல வரும்.

ஒருவர் : ஸ்டெப்ஸ் ஏறி அந்த சைடுல எறங்கனீங்கனா பிளாட்பாம் நெம்பர் டூல டிரெயின் வரும். அங்கபோயி ஏறிக்குங்க.

இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களை நீக்கித் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி உரையாடலை அமைக்க.

## வாழ்க்கைத்திறன்

### படைப்பாற்றல் திறன்

நம் வாழ்வில் நாள்தோறும் எதிர்கொள்ளும் சூழல்களுக்குப் பல்வேறு கோணங்களில் இருந்து தீர்வு காண படைப்பாற்றல் திறன் உதவுகிறது.

தண்ணீர் குறைவாக இருந்த குடத்தினுள் கற்களை நிரப்பி, நீரின் அளவை உயரச்செய்து தாகம் தீர்ந்த காகத்தின் கதை படைப்பாற்றல் திறனுக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். நம் மனம் தளர்வடையும்போது, ஆக்கப்பூர்வமான வழிகளில் செலுத்த படைப்பாற்றல் திறன் உதவும். உங்களுடைய வாழ்வில் எந்த ஒரு சூழலிலாவது படைப்பாற்றல் திறனைப் பயன்படுத்தி உள்ளீர்களா ?

எவையெவை படைப்பாற்றல் எனப் பட்டியலிடுங்கள்?

பட்டியலிட்ட படைப்பாற்றல்களில் ஏதாவது ஒன்றில் நீங்கள் திறனோ ஆர்வமோ கொண்டுள்ளீர்களா?

## மதிப்புக்கல்வி

### உயிரிரக்கம்

மன்னர் பிம்பிசாரர் ஒருமுறை மிகப்பெரிய வேள்வி ஒன்றை நடத்தத்திட்டமிட்டார். அதற்காக ஆயிரக்கணக்கில் பலியிடுவதற்காக ஆடுகள் கட்டிப்போடப்பட்டு இருந்தன. அப்போது கௌதம புத்தர், அங்கு வருகை புரிந்தார். உயிர்களைப் பலியிட வேண்டா என்று அவர் கூறியதை யாரும் கேட்கவில்லை. மாறாக, வேள்வியில் பலியிடப்படும் உயிர்கள் மேலுலகத்தில் இன்ப வாழ்வை அடையும் என்று கூறினர். “அப்படியானால் உங்களுக்குப் பிடித்தமானவரையே நீங்கள் பலியிடலாமே, அவர்கள் நிச்சயம் இன்பம் அனுபவிப்பார்கள்” என்றார் புத்தர். ஆனாலும், அவர்கள் வேள்வியைக் கைவிடவில்லை. இறுதியாக, “எனக்கு இந்த உடல் தேவையில்லை; எனக்கு இன்பமும் வேண்டா, இந்த வாயில்லா விலங்குகளை விட்டுவிடுங்கள். என்னையே இந்த வேள்வித்தீயில் போடுங்கள்” என்று கூறிய புத்தர், அதில் விழப்போனார். புத்தரின் அறிவுரையால் ஞானம்பெற்ற பிம்பிசாரர், அவர் கொள்கையை ஏற்று நாடெங்கும் உயிர்ப் பலியைத் தடை செய்தார்.

உயிரிரக்கம் பற்றிய குறள்களை எழுதுக.

வள்ளலார் உயிரிரக்கம் பற்றிக் கூறுவது என்ன?

உயிரைத் துன்புறுத்தும்போதும் கொல்லும்போதும் அதன் நிலையில் நீங்கள் இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள்.

# திருக்குறள்

## கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

பொருள் : நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். கற்றபடி நடக்கவேண்டும்.

சொற்பொருள் : கசடு – குற்றம்; நிற்க – கற்றவாறு நடக்க.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. *

பொருள் : எண்ணும் எழுத்தும் ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு இரு கண்கள் எனக் கூறுவர்.

சொற்பொருள் : எண் – எண்கள், கணிதம்; எழுத்து – இலக்கண இலக்கியங்கள் (வரிவடிவம்)

3. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

பொருள் : கல்வி கற்றவர் கண் உடையவர்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் ஆவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். *

பொருள் : அறிவில் சிறந்த புலவர்களுடன் பேசிப் பழகும்போது மகிழ்ச்சியாக இருப்பதும். அவர்களை விட்டுப்பிரியும்போது, ‘இனி இவரை எப்பொழுது காண்போம்’ என எண்ணிப் பிரிவதும் புலவரின் இயல்பாகும்.

சொற்பொருள் : உவப்ப – மகிழ; தலைக்கூடி – ஒன்றுசேர்ந்து.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

பொருள் : செல்வர்முன் ஏழை இரந்து நிற்பதுபோலக் கற்றவர்முன் பணிந்து கற்பவரே உயர்ந்தவர்; பணிந்து கல்லாதவர் தாழ்ந்தவர்.

சொற்பொருள் : உடையார் – செல்வம் உடையார்; இல்லார் – செல்வம் இல்லாதவர்; ஏக்கற்று – கவலைப்பட்டு; கடையர் – தாழ்ந்தவர்.

6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. *

பொருள் : மணற்பாங்கான இடத்தில் தோண்டத்தோண்ட நீர் சுரக்கும். அதுபோல, மக்கள் நூல்களைக் கற்கக்கற்க அவர்தம் அறிவு வளரும்.

சொற்பொருள் : தொட்டனைத்து – தோண்டும் அளவு; மாந்தர் – மக்கள்.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

பொருள் : கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடாகும்; எந்த ஊரும் தன் ஊராகும். இதனை அறிந்தும் சிலர் சாகும்வரை கற்காமல் இருப்பது ஏன்?

சொற்பொருள் : சாந்துணையும் – சாகும்வரையிலும்.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. *

பொருள் : ஒரு பிறப்பில், தான் கற்றுக்கொள்ளும் நல்லறிவு, இனி எழும் பிறவிகளுக்கும் பாதுகாப்பைத் தரும்.

சொற்பொருள் : ஏமாப்பு – பாதுகாப்பு.

9. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

பொருள் : தாங்கள் இன்பம் அடையும் கல்வியால் உலகம் இன்பம் அடைவதைக் கண்டு, கற்றவர் மேன்மேலும் கற்க விரும்புவர்.

சொற்பொருள் : காமுறுவர் – விரும்புவர்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. *

பொருள் : ஒருவனுக்கு அழியாத செல்வம் கல்வியாகும். கல்வி தவிர, மற்றச் செல்வங்கள் எல்லாம் செல்வங்கள் ஆகமாட்டா.

சொற்பொருள் : விழுச்செல்வம் – சிறந்த செல்வம்; மாடு – செல்வம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) உவப்பத் தலைக்கூடி ______________ பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

ஆ) ஒருமைக்கண் தான்கற்ற ______________ ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

இ) கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை ______________.

2. மாறியுள்ள குறளை முறைப்படுத்தி எழுதுக.

அ) எண்என்ப எழுத்தென்ப ஏனை கண்என்ப
இவ்விரண்டும் வாழும் உயிர்க்கு.

ஆ) தொட்டனைத்து மணற்கேணி ஊறும் மாந்தர்க்குக்
கற்றனைத்து அறிவு ஊறும்.

3. பிரித்து எழுதுக.

அ) கசடற ஆ) எழுத்தென்ப இ) மணற்கேணி
ஈ) கற்றறிந்தார் உ) மாடல்ல

4. சேர்த்து எழுதுக.

அ) எண் + என்ப ஆ) கண் + உடையார்

5. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

அ) எழுத்து ______________
ஆ) முகம் ______________
இ) புலவர் ______________
ஈ) இன்பம் ______________
உ) அறிவு ______________

### ஆ) குறுவினாக்கள்

1. புலவர் தொழிலாக வள்ளுவர் எதைக் கூறுகிறார்?
2. வள்ளுவர் மணற்கேணியோடு அறிவை எவ்வாறு ஒப்பிடுகிறார்?
3. வள்ளுவர் குறிப்பிடும் அழியாச் செல்வம் எது? ஏன்?

### இ) சிறுவினாக்கள்

1. கல்வியின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.
2. சாகும்வரை ஏன் கற்கவேண்டும்?

### ஈ) நெடுவினா

கல்வியதிகாரம் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## முக்கூடற்பள்ளு

### ( நகர்வளம் – இளைய பள்ளி )

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியில் கிடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே.

பொருள் : ஊமத்தம் பூவை விரும்பிச் சூடும் பித்தனாகிய சிவபெருமானுக்கு உரிய ஊர் எங்கள் மருதூர். இவ்வூர், வாய்க்கால்களில் தத்திச்செல்லும் நீரானது முத்துகளால் இடைமறித்து அடைக்கப்படும். சாலை வழியாகக் கொணர்ந்த கருப்பங்கழிகளைக் கரும்பாலைகளில் சாறு பிழிந்துகொண்டிருக்கும் பேரிரைச்சல் சத்தமோ காதுகளைச் செவிடாக்கும். இவ்வூரில் உள்ளோர் பலரும் அடித்துச் செய்யும் உலோக வேலைகளின் ஒலியோ அந்தப் பேரிரைச்சலை மறைக்கும்படியாக மிக்கிருக்கும். நாள்தோறும் விழாக்கள் கொண்டாடுவார்போல, எங்கும் அழகு மிளிரும். இத்தகைய எல்லாச் செல்வங்களும் இவ்வூரிலேயே கிடைக்கும்.

சொற்பொருள் : தத்தும் புனல் – அலையெறியும் நீரும்; முத்தம் அடைக்கும் – முத்துகள் மிக்குப் பெருகி இடையே அடைத்துக்கொண்டு கிடக்கும்; கலிப்புவேலை – கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்; சித்ரம் – சிறப்பான காட்சிகள்; மதோன்மத்தர் – பெரும்பித்தனாகிய சிவபெருமான்.

ஆசிரியர் குறிப்பு : இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர். சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.

நூல் குறிப்பு : நீர் நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் உழவுத்தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரித்துக் கூறுவதாக அமைந்த நூல் பள்ளு.

திருநெல்வேலிக்குச் சற்று வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல். இதற்கு ஆசூர் வடகரை நாடு என்னும் பெயருமுண்டு. தென்பால் உள்ள பகுதி, சீவல மங்கைத் தென்கரை நாடு என வழங்கப் பெறுகின்றது.

தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் ஊர் மருதூர். முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி, மருதூரில் வாழும் பள்ளி இளைய மனைவி. இருவரையும் மணந்து திண்டாடும் பள்ளனின், வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பதுபோலப் பாடப்பட்ட இந்நூல், முக்கூடற்பள்ளு எனப் பெயர் பெற்றது.

நூல் பயன் : முக்கூடற்பள்ளுவைக் கற்பதால், அக்கால மக்களின் உழவுத்தொழில் பற்றியும் அச்சமுதாயத்தைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். காளைகளின் பல்வேறு பெயர்கள், விதைகளின் பெயர்கள், மீன்வகைகள் என மருத நிலவளம் பற்றியும் அறியலாம்.

| ஒன்பது மணிகள் | | | |
|---|---|---|---|
| முத்து | பவளம் | மரகதம் | மாணிக்கம் |
| புட்பராகம் | இரத்தினம் | வைரம் | வைடூரியம் |
| கோமேதகம் | | | |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) மருதூரில் வீற்றிருக்கும் இறைவன் ______________.

ஆ) மூன்று ஆறுகள் சேருமிடம் ______________.

### ஆ) குறுவினாக்கள்

1. வாய்க்கால் நீரை அடைத்தது எது ?
2. மருதூரில் நடைபெற்ற தொழில்கள் யாவை ?
3. முக்கூடல் – குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினா

மருதூரின் பெருமைகளாக முக்கூடற்பள்ளு கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

# இயற்கை வேளாண்மை
## ( நேர்காணல் )

( முகுந்தன், வேலன், கயல்விழி, பேராசிரியர் நெடுமாறன், வேளாண் அலுவலர் சிவா )

**முகுந்தன்** : வேலா! வணக்கம். நாளை நாம் கோவையில் நடைபெறும் வேளாண்மைப் பல்கலைக்கழகக் கண்காட்சிக்குச் செல்ல இருக்கிறோம். நம்முடன் கயல்விழியும் வருவதாகக் கூறியுள்ளாள்.

**வேலன்** : மிக்க மகிழ்ச்சி. அங்கேதான் என் மாமா நெடுமாறன் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்; அவரையும் சந்திக்கலாம்.

**முகுந்தன்** : மிக்க மகிழ்ச்சி.

(மறுநாள் முகுந்தன், வேலன், கயல்விழி ஆகிய மூவரும் கோவைக்குச்சென்று, வேளாண் கண்காட்சியைப் பார்த்து மகிழ்கின்றனர். அப்போது பேராசிரியர் நெடுமாறனைச் சந்தித்து, இயற்கை வேளாண்மை குறித்துக் கேட்கின்றனர்.)

**மூவரும்** : வணக்கம்.

**பேராசிரியர்** : வாங்க, வாங்க வணக்கம்.

**வேலன்** : மாமா! இவர்கள் முகுந்தன், கயல்விழி. என் நண்பர்கள். நாங்கள் கண்காட்சி காண வந்தோம். உங்களையும் பார்த்துப் பேச வந்தோம்.



பேராசிரியர் : அப்படியா ? நல்லது. (மூவரையும் இருக்கையில் உட்காரச் செய்தல்) வேலா! வீட்டில் அம்மா, அப்பா மற்றும் எல்லாரும் நலமா ?

வேலன் : அனைவரும் நலமாக இருக்கிறார்கள், மாமா...

பேராசிரியர் : இங்கே கண்காட்சியை நன்றாகப் பார்த்தீர்களா ? அதில் உங்களை ஈர்த்த பகுதி எது ?

மூவரும் : கண்காட்சியில் இயற்கை வேளாண்மையே எங்களை மிகவும் ஈர்த்தது. இயற்கை வேளாண்மையைப் பற்றி எங்களுக்கு இன்னும் விரிவாகச் சொல்லுங்களேன்.

பேராசிரியர் : ஓ! தாராளமாகச் சொல்லுகிறேன். முதலில் இதைச் சாப்பிடுங்கள்.

(அனைவரும் குளிர்பானம் பருகுதல்)

வேலா! உங்கள் நிலத்தில் அறுவடையெல்லாம் முடிந்ததா ?

வேலன் : இல்லை, மாமா! இந்த ஆண்டு பயிர்களெல்லாம் பூச்சிகள் தாக்கி விளைச்சல் பாதிக்குமேல் குறைந்துவிட்டது; செய்த செலவுகூட வராது என அப்பா கூறினார்.

பேராசிரியர் : என்ன செய்வது ? இன்றைய சூழலில் வாழ்வில் மட்டுமல்லாமல், வேளாண்மையில்கூடச் செயற்கை மோகம் மிகுந்துவிட்டது.

வேலன் : என்ன சொல்கிறீர்கள் ? ஐயா.

பேராசிரியர் : நல்ல விளைச்சல் எடுக்கலாம் என்று நினைத்து தேவைக்கு மேல் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தியதால் மண்ணின் தன்மையையும், நீரின் தன்மையையும் கெடுக்கும் அளவிற்குச் சூழ்நிலை உருவாகிவிட்டது.

கயல்விழி : இதனால் என்னவாகும் ? ஐயா.

பேராசிரியர் : இதனால் நிலம், நீர், காற்று, ஆகாயம் முதலிய வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்படும். பயிர்களுக்கு மட்டுமல்லாமல், மனிதர்களுக்கும் புதிதுபுதிதாக நோய்கள் வரும். வருங்காலத் தலைமுறைக்கு வேளாண்மையின் பயன்பாடுகள் அரிதாகி விடும்போல் இருக்கிறது.

முகுந்தன் : இதற்கு மாற்றுவழியே இல்லையா ? ஐயா.

பேராசிரியர் : உறுதியாக உண்டு. வருமுன் காப்போம் என்னும் முதுமொழிக்கிணங்க, இயற்கை வேளாண்மையை நம் வேளாண் பெருமக்கள் பின்பற்ற வேண்டும் என்பதே எனது கருத்து.

கயல்விழி : இக்காலத்தில் அஃது இயலுமா? ஐயா.

பேராசிரியர் : ஏன் இயலாது? தற்போது வேளாண்துறையில் இயற்கை வேளாண்மைக்கு என்று ஒரு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

வேலன் : இக்கண்காட்சியில் இயற்கை வேளாண்மை, சான்றளிப்புக் குறித்து வேளாண் அலுவலர் சிவா எங்களுக்குப் புதிய கருத்துகளைக் கூறினார்.

பேராசிரியர் : அப்படியா! சிவா என் மாணவன்தான். படிப்பிலும் பணியிலும் சிறந்து விளங்குவதாகக் கேள்விப்பட்டேன். வாருங்கள், நாம் அனைவரும் இயற்கை வேளாண்மைக் கண்காட்சித் திடலுக்குச் செல்வோம்.

சிவா, எப்படி இருக்கிறாய்? உன்னை மாணவனாகப் பார்த்தேன். இப்போது வேளாண்மை அலுவலராகப் பணியாற்றுவதைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைகிறேன். என் மருமகனும் அவனது நண்பர்களும் நீ பேசியது குறித்து என்னிடம் பெருமையாகக் கூறினார்கள். அவர்களுக்கு மேலும் சில கருத்துகளை நீ கூற வேண்டும்.

வே.அலுவலர் : அப்படியே ஆகட்டும், ஐயா.

முகுந்தன் : இயற்கை வேளாண்மைக் கூறுகள் என்றால் என்ன?

வே.அலுவலர் : உழுதல், விதைத்தல், தொழு உரமிடுதல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல், காத்தல் முதலிய கூறுபாடுகளை நன்கு உணர்ந்து, நம் தமிழர் உழவுத்தொழிலை இயற்கை முறையில் சிறப்பாக மேற்கொண்டு உலகத்தார் பசிப்பிணியைப் போக்கி வந்தனர்; வருகின்றனர்.

கயல்விழி : நிலத்தை எப்படி உழவேண்டும்? சொல்லுங்கள், ஐயா.

வே.அலுவலர் : நன்றாகக் கேட்டாய். விதைக்கும்முன் நிலத்தைப் பண்பட உழுதல் வேண்டும். அதாவது, ஒருபலம் எடையுள்ள மண்ணைக் கால் பலம் எடை அளவிற்கு உலரும்வரை உழுதிட வேண்டும். இதனைத்தான் வள்ளுவர் குறளில் கூறுகிறார்.

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

வேலன் : 'அகல உழுவதைவிட ஆழ உழுதல் நன்று' என்பதுபோலவா?

வே.அலுவலர் : ஆம், அப்படியேதான். அப்பொழுதுதான் கீழிருக்கும் மண் மேலும், மேலிருக்கும் மண் கீழும் புரளும். மண்ணிலுள்ள களை விதைகள் முளைக்கும். மீண்டும் மீண்டும் உழவு செய்யும்போது களைகள் நீங்கி, மண் புழுதியாகும்.

கயல்விழி : நன்செய், புன்செய் என்றால் என்ன? ஐயா.

வே.அலுவலர் : நீர்வளமிக்கது நன்செய். இதில் நெல், கரும்பு, வாழை முதலான பயிர்கள் விளையும். நீர்வளம் குறைந்த பகுதி புன்செய். இதனை வானம் பார்த்த பூமி என நம் வேளாண் மக்கள் கூறுவர். இந்நிலத்தில் விளையும் பயிர்கள் பருவமழையை நம்பியே இருக்கும். இதில் கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, துவரை, கொள்ளு, காராமணி முதலிய பயிர்கள் விளையும்.

முகுந்தன் : புன்செய் நிலத்தில் நீர் இல்லாமல் எப்படிப் பயிர் விளையும்? ஐயா.

வே.அலுவலர் : எல்லாம் மழையை நம்பித்தான். பருவத்தே பயிர் செய், ஆடிப்பட்டம் தேடி விதை என்னும் பழமொழிகளுக்கேற்பக் காலத்தே பயிர் செய்து பயன் கண்டனர் நம் முன்னோர்.

வேலன் : இவற்றுக்கெல்லாம் விதைகளை எங்கிருந்து வாங்குவார்கள்?

வே.அலுவலர் : வேளாண் பெருமக்கள் தாங்கள் விளைவித்த பயிர்களிலிருந்து நல்லவிதைகளைத் தேர்வு செய்து, தூய்மைப்படுத்திப் பாதுகாத்துப் பின்பு பயன்படுத்துவர்; அல்லது, சான்று பெற்ற விதைகளை வாங்கிப் பயன்படுத்தலாம்.

கயல்விழி : விதைகளை எவ்வாறு பயன்படுத்துவார்கள்? ஐயா.

வே.அலுவலர் : நெல்விதையை முதலில் நாற்றங்காலில் விதைத்து இருபத்தொரு நாள்முதல் இருபத்தைந்து நாள்வரை வளர்த்துப் பின்னர், அதைப் பறித்துப் பண்படுத்தப்பட்ட சேற்று நிலத்தில் நடுவர். பிறகு, முறையாக நீர் பாய்ச்சிக் களையெடுத்து இயற்கை உரமிட்டுக் காப்பர்.

முகுந்தன் : கரும்பும் வாழையும் அதைப்போன்றே நடுவார்களா? ஐயா.

வே.அலுவலர் : அவையும் அப்படித்தான். கரும்பை வெட்டிக் கணுக்களாகவும், வாழையின் கன்றுகளைக் கிழங்குடனும் வெட்டி எடுத்து நடுவர். எந்தெந்தப் பயிர்க்கு எவ்வளவு இடைவெளி வேண்டுமென்பதை, நம் முன்னோர், நெல்லுக்கு நண்டோட; கரும்புக்கு ஏரோட; வாழைக்கு வண்டியோட; தென்னைக்குத் தேரோட என்று கூறிச் சென்றுள்ளனர். இவ்வாறு இடைவெளி அமையுமானால், பயிரில்

நன்கு காற்றுப் புகும்; பயிர்களும் செழித்து வளரும்; நல்ல பயனும் தரும் என்பர்.

கயல்விழி : அந்தக் காலத்தில் யூரியா, பாஸ்பேட், பொட்டாசு முதலிய உரங்கள் இருந்தனவா ? ஐயா.

வே.அலுவலர் : ஏதம்மா ! தொழு உரங்களையே பயன்படுத்தித் தரமான விளைச்சலைக் கண்டனர் நம் முன்னோர்.

வேலன் : இயற்கை உரங்கள் என்றால் என்ன ? ஐயா...

வே.அலுவலர் : இலை தழைகள், ஆட்டு எரு, மாட்டு எரு, கடலைப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு, இலுப்பம் பிண்ணாக்கு எனப் பல இயற்கை உரங்கள் உள்ளன.

கயல்விழி : இயற்கை வேளாண்மை அல்லது அங்கக வேளாண்மை என்றால் என்ன ?

வே.அலுவலர் : இரண்டும் ஒன்றுதான். அங்கக வேளாண்மை என்பது செயற்கை உரம், பூச்சி – பூஞ்சாணக்கொல்லி மருந்துகளைப் பயிர்களுக்குப் பயன்படுத்தாமல் உணவு உற்பத்தி செய்வது.

வேலன் : அங்ககச் சான்றளிப்பு என்றால் என்ன ?

வே.அலுவலர் : இயற்கை அல்லது அங்ககப் பண்ணையத்திற்குச் சான்று வழங்கும் நிறுவனத்தினர் ஆய்வு செய்து, தகுதியிருப்பின் பண்ணைக்குச் சான்று வழங்குவது.

முகுந்தன் : பஞ்ச கவ்வியம் என்கிறார்களே, அஃது என்ன ஐயா ?

வே.அலுவலர் : ஓ, அதுவா ? பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள் அதாவது கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருள்களைக் கலந்து செய்வதே பஞ்ச கவ்வியம். இதனைப் பயிரில் தெளிப்பதால், புழு, பூச்சிகள் பயிர்களை நெருங்காது. இது தவிர வேப்பம் பிண்ணாக்கு, கடலைப் பிண்ணாக்கு, இலுப்பம் பிண்ணாக்கு முதலியவற்றையும் வயல்களுக்கு உரமாகப் பயன் படுத்துவர். பயிரிடும்முன் சணப்பு, அவுரி, கொளுஞ்சி, தக்கைப்பூண்டு முதலியவற்றை வளர்த்து, அவற்றை அப்படியே உழுது தழையுரமாகப் பயன்படுத்துவர். இதனால், மண்ணின் வளம்கெடாமல் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு பயிர்களும் நன்கு வளரும்.

கயல்விழி : பயிரில் புல் பூண்டுகளும் வளர்ந்துவிடுமே, ஐயா.

வே.அலுவலர் : மனிதருள் தீயோர் இருப்பதைப்போலப் பயிரிலும் வேண்டாத புல் பூண்டுகள் வளரத்தான் செய்யும். இவற்றை உழவர் களைந்துவிடுவர். அதற்குக் களையெடுத்தல் என்று பெயர். இதனையே வான்புகழ் வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

முகுந்தன் : காப்பு என்றால் என்ன அய்யா ?

வே.அலுவலர் : காப்பு என்றால் காத்தல் என்பது பொருள். பயிர்களைப் பூச்சிகள் தாக்காத வகையிலும், ஆடுமாடுகள் மேயாத வகையிலும் தவறாமல் பாதுகாத்து வரவேண்டும். கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ் என்பர் நம் முன்னோர்.

வேலன் : இயற்கை வேளாண்மையின் பயன் குறித்துச் சொல்லுங்களேன் ?

பேராசிரியர் : எண்ணற்ற நன்மைகள் உண்டு. முக்கியமாக நிலம், நீர், காற்று, வான்வெளி இவை சிதைவடையாமல் பாதுகாக்கப்படுகின்றன. மக்களுக்கு உடல்நலத்திற்கேற்ற உணவு கிடைக்கிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். உணவே மருந்து; மருந்தே உணவு என்ற முதுமொழிக்கேற்ப, நம் முன்னோர்களின் உணவுமுறை இருந்து வந்தது. அதனை நாமும் கடைப்பிடிப்போம்.

மூவரும் : நன்றி, ஐயா.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தெரிவு செய்க.

அ) வேளாண் பல்கலைக்கழகம் உள்ள இடம்

1. மதுரை 2. சென்னை 3. கோவை

ஆ) வேளாண்தொழிலில் உள்ள கூறுகள்

1. இரண்டு 2. நான்கு 3. ஆறு

இ) வானம் பார்த்த பூமி என்பது

1. நன்செய் 2. புன்செய் 3. பொன்செய்

ஈ) கேட்காத கடனும் பார்க்காத பயிரும் ______________.

1. பாழ் 2. பால் 3. பாள்

உ) பஞ்சகவ்வியம் என்பது ______________ பொருள்களால் ஆனது.

1. மூன்று 2. நான்கு 3. ஐந்து

2. பொருத்துக.

அ) நெல் – வண்டியோட

ஆ) கரும்பு – நண்டோட

இ) வாழை – தேரோட

ஈ) தென்னை – ஏரோட

## ஆ) குறுவினாக்கள்

1. உரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் ஏன் பயன்படுத்தக் கூடாது?
2. நிலத்தை எவ்வாறு உழவேண்டும்?
3. பயிர்களுக்கு இடைவெளி எவ்வளவு விடவேண்டும்?
4. தொழு உரம் என்றால் என்ன?
5. விதைப்பதற்குரிய காலம் சுட்டும் பழமொழிகளை எழுதுக.

## இ) சிறுவினாக்கள்

1. மண்ணை எவ்வாறு பண்படுத்தவேண்டும்?
2. பஞ்சகவ்வியம் ஆக்குவது எப்படி?
3. பயிர்க்காப்பு செய்வது எவ்வாறு?
4. அங்கக வேளாண்மை என்றால் என்ன?

## ஈ) நெடுவினாக்கள்

1. இயற்கை வேளாண்மையின் தேவையை விளக்குக.
2. உரம், பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் தீமைகளை விவரிக்க.
3. வேளாண்மையில் கவனத்தில் கொள்ளவேண்டியவற்றை விளக்குக.

### படைப்பாற்றல் கல்வி

- இவ்வுரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடினச்சொற்களாகக் கருதுவனவற்றை அடிக்கோடு இடுக.
- கடினச்சொற்களுக்கான பொருளைச் சிறு குழுவில் கலந்துரையாடுக.
- புரிந்துகொண்ட செய்திகளை மனவரைபடமாக வரைக.

# நிலைத்த செல்வம் கல்விச் செல்வம்

ஒற்றையடிப் பாதையின் வழியாக நகை வணிகரும், புலவர் ஒருவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

புலவரைப் பார்த்த நகை வணிகரோ, 'ஐயா என் செல்வமே சிறந்த செல்வம், என்னிடம் தங்கம் மட்டுமில்லாது, வைர நகைகளும் இருக்கின்றன. உங்களிடம் சொல்லிக்கொள்ள அப்படி என்ன இருக்கிறது' என்றார்.

அதனைக் கேட்ட புலவர், 'ஐயா, உங்களிடம் இருக்கின்ற செல்வத்தைவிட, என்னிடம் இருக்கின்ற செல்வமே சிறந்த செல்வம். அதனை யாராலும் களவாட முடியாது; அடுத்தவரிடம் கொடுத்தாலும் குறைந்து போகாது'.

'வீணாக என்னிடம் செல்வம் இருக்கிறது, அஃது இருக்கிறது; இஃது இருக்கிறது என்று பெருமையடித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் செல்வத்தைவிட, என் செல்வமே சிறந்த செல்வம்' என்றார்.

'ஐயா, உங்கள் செல்வத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டி, எந்த நேரமும், ஏதாவது நடந்துவிடக்கூடாதே என்று ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் தவித்துக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், என்னிடம் இருக்கின்ற செல்வத்தைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் கிடையாது. அதனை யாராலும் திருடிச் செல்ல முடியாது என்ற மகிழ்ச்சியோடு இருப்பேன்' என்றார் புலவர்.

ஆனால், வணிகரோ, புலவரின் பேச்சுக்குத் தன் இசைவைத் தெரிவிக்கவில்லை. புலவரின் பேச்சு தவறானது என்று முரண்பட்டுக் கொண்டேயிருந்தார்.

அந்த நேரத்தில் எதிர்பாராதவாறு அந்தப் பாதையில் திபுதிபுவெனத் திருடர்கள் வந்தார்கள்.

புலவரையும் வணிகரையும் சூழ்ந்துகொண்ட அவர்கள், தங்களிடம் இருந்த கத்தியினைக் காட்டி, இருவரிடம் இருக்கின்ற பொருள்களை எல்லாம் கேட்டார்கள்.

கத்தியைக் கண்டதும் வணிகர் பயந்துவிட்டார். தன் உயிருக்கு ஊறு வந்து விடக்கூடும் என்று பயந்து அலறிய அவர், தயங்காமல் தன்னிடம் உள்ள நகைகளை எல்லாம் திருடர்களின் கையில் கொடுத்துவிட்டார்.

திருடர்கள் புலவரின் முன்னே கத்தியைக் காட்டி, அவரிடம் இருக்கின்ற பொருள்களை எல்லாம் கேட்கத் தொடங்கினார்கள்.

திருடர்களைப் பார்த்த புலவர், 'ஐயா, என்னிடம் எந்தப் பொருட்செல்வமும் கிடையாது. கல்விச் செல்வம் ஒன்றுதான் என்னிடம் இருக்கிறது. நான் வேண்டுமானால் ஒரு நாடோடிப் பாட்டுப் பாடுகிறேன், கேளுங்கள்' என்று திருடர்களின் விருப்பத்திற்குத் தகுந்தபடி பாட்டுப்பாடத் தொடங்கினார்.

அந்தப் பாடலைக் கேட்ட திருடர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

புலவரோ, திருடர்களின் விருப்பத்தை மேலும் புரிந்துகொண்டு, அவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றவகையில் மேலும் இனிமையாகப் பாடத் தொடங்கினார்.

புலவரின் பாடல் திருடர்களுக்கு மனப்பாடமானது.

அவர் பாடும் பாடலை அவர்களும் முணுமுணுத்துக்கொண்டு பாடி ஆடத் தொடங்கினார்கள்.

' ஐயா, பல இடத்தில் திருடிக் களைத்துப் போன எங்களுக்கு, உங்கள் பாடல் பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் இரண்டு மூன்று பாடல்களை நீங்கள் பாடினால் இன்னும் கொஞ்சம் மகிழ்வோம்' என்றார்கள்.

புலவர் சளைக்காமல் மிகவும் உற்சாகத்தோடு மீண்டும் புதிய மெட்டில் பாடல்களைப் பாடத் தொடங்கினார்.

அவற்றைக் கேட்ட திருடர்கள் மேலும் உற்சாகமடைந்தார்கள். "ஐயா பாட்டுக்காரரே, "நீர் இனிமையாகப் பாடுகின்றீர். உமது பாட்டைக் கேட்டு மகிழ்ச்சியுடன் ஆடிய நாங்கள் இதோ இந்த நகைகளைப் பரிசாகத் தருகிறோம், வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறியபடி நகை வணிகரிடம் இருந்து வாங்கிய நகைகளைப் புலவருக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்.

புலவர், திருடர்களைப் பார்த்தார். "திருடர்களே அடுத்தவர் பணத்தைத் திருடிப் பிழைக்கின்ற வேளையிலேயே என் பாடல் உங்கள் களைப்பை எல்லாம் போக்கி மகிழ்ச்சிப்படுத்துகிறது என்று கூறுகின்றீர்களே. நீங்கள் உழைத்துச் சம்பாதிக்கும்போது, என் பாடலைக் கேட்டால், இன்னும் எவ்வளவு மகிழ்ச்சியடைவீர்கள். நீங்கள் எல்லாரும் நல்ல கலைநயம் மிக்கவர்களாக இருக்கின்றீர்கள். அதனால், 'உங்கள் செயல் திறனையும் அறிவையும் நல்லவற்றிற்கே பயன்படுத்துங்கள். இனிமேல், இந்தத் திருட்டுத் தொழிலை விட்டுவிடுங்கள்" என்று கூறினார். புலவரின் பேச்சு, திருடர்களைச் சிந்திக்கச் செய்தது.

ஒருவர் முகத்தை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக்கொண்டனர். பின்னர்ப் புலவரைப் பார்த்த அவர்கள். “ஐயா, இதுவரையிலும் நாங்கள் எத்தனையோ இடத்திற்குத் திருடச் சென்றிருக்கிறோம். திருடச் சென்ற இடத்தில் பலதரப்பட்ட மக்களையும் பார்த்திருக்கின்றோம். எல்லாருமே எங்களை வெறுத்து ஒதுக்கினர். எங்களைப் பிடித்துக் காவலர்களிடம் ஒப்படைத்துத் தண்டனை வாங்கிக் கொடுத்தனர். சிலர் எங்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். ஆனால், நீங்கள் மட்டும் நாங்கள் திருந்த வேண்டி, எங்களையும் மனிதர்களாக நினைத்துக்கொண்டு நல்வழியைக் காட்டினீர்கள். நீங்கள் காட்டிய நல்வழியை நாங்கள் என்றுமே மறக்கமாட்டோம். இன்றோடு திருட்டுத் தொழிலை விட்டுவிட்டு, நல்ல வேலையைத் தேடி நாங்கள் செல்கிறோம்” என்று கூறினார்கள்.

பின்னர் அனைவரும் புலவரை வணங்கிவிட்டு விடைபெற்றுச் சென்றனர்.

திருடர்களின் முகத்தில் உண்மை தெரிவதை உணர்ந்த புலவரும் இனிமேல் இவர்கள் திருந்திவிடுவார்கள் என்று உறுதியாக நம்பினார். திருடர்கள் தன்னிடம் கொடுத்த நகைகளை அப்படியே வணிகரிடம் கொடுத்தார் புலவர்.

வணிகரே, ‘இதோ! உமது நகைகள் எல்லாம் உம்மிடமே திரும்பி வந்துவிட்டன. என்னுடைய கல்விச் செல்வத்தின் உதவியால்தான் உம்முடைய பொருட்செல்வத்தினைக் காக்க முடிந்தது. இல்லையென்றால், திருடர்கள் இந்த நகைகளை எல்லாம் எப்போதோ இங்கிருந்து கொண்டுசென்றிருப்பார்கள்’ என்றார் புலவர்.

தன் நகைகளை வாங்கிக்கொண்ட வணிகரோ, புலவரின் கால்களில் விழுந்து, ‘ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். நான் செய்த தவற்றினை இப்போது உணர்ந்து கொண்டேன். என்னதான் நான் தங்கத்தையும் வைரத்தையும் குவித்து வைத்திருந் தாலும், உங்களின் கல்விச்செல்வத்திற்கு நான் தலைவணங்குகிறேன்’ என்று கூறினார்.

நிலைத்த செல்வம் கல்விச் செல்வமே.

நன்றி : பி.எம். முத்து, பண்பை வளர்க்கும் பண்பாட்டுக் கதைகள்
என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் இச்சிறுகதை உணர்த்தும் செய்தியை விவரிக்க..

# வேற்றுமை, அடைமொழி

## வேற்றுமை

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். இன்று காலைவழிபாட்டுக் கூட்டத்தில் பரிசுபெற்றவர் யார்?

மாணவர் : கண்ணன் பரிசு பெற்றான், ஐயா.

ஆசிரியர் : தலைமையாசிரியர், யாரைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்?

மாணவர் : தலைமையாசிரியர்,கண்ணனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார், ஐயா.

ஆசிரியர் : 1. கண்ணன் பரிசு பெற்றான்.

2. தலைமையாசிரியர், கண்ணனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்.

( இத்தொடர்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல். )

முதல் தொடரில் கண்ணன் என்னும் பெயர்ச்சொல் அமைந்துள்ளது. இரண்டாம் தொடரில் அதே பெயர்ச்சொல் கண்ணனை மற்றவர் பாராட்டியதைக் குறிக்கிறது. இதில், கண்ணன் என்னும் பெயர்ச்சொல்லின் பொருள் வேறுபடுகிறது. இவ்வேறுபாட்டுக்குக் காரணம், கண்ணன் என்னும் பெயரோடு சேர்ந்துள்ள ஐ என்னும் உருபு. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது, வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் இறுதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்பர்.

மணி : சற்று விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : இராமன் கண்டான் – இதே தொடர், இராமனைக் கண்டான் என வரும்பொழுது, இரண்டிற்குமுள்ள வேறுபாடு புரிகிறதா?

மணிமொழி: நன்றாகப் புரிகிறது, ஐயா. முதல் தொடரானது இராமன் வேறொருவனைப் பார்த்தான் எனவும், இரண்டாம் தொடரானது வேறொருவன் இராமனைப் பார்த்தான் எனவும் பொருள் வேறுபடுகிறது, ஐயா.

ஆசிரியர் : இச்சிறுமாற்றத்திற்குக் காரணம் என்ன? நன்றாகச் சிந்தித்துக் கூறுங்கள்.

கபிலன் : ஐ என்னும் எழுத்து, ஐயா.

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி. இவ்வாறு பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபுகள் வேற்றுமை எனப்படும். இவ்வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எண்வகைப்படும்.

பாரி : முதல் வேற்றுமை என்றால் என்ன? ஐயா.

ஆசிரியர் : இயல்பான பெயர், (எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது முதல் வேற்றுமை எனவும், எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கப்படும். (இது வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகக் கொண்டு முடியும்.)

(எ–டு) கண்ணன் வந்தான் – வினைப் பயனிலை

அவன் கண்ணன் – பெயர்ப் பயனிலை

அவன் யார்? – வினாப் பயனிலை

எழுவாய் வேற்றுமைக்கு எனத் தனி உருபு இல்லை.

பொன்மணி : ஐயா, இரண்டாம் வேற்றுமைக்கு உருபு உண்டா?

ஆசிரியர் : உண்டு. இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும். வளவன் செய்யுளைப் படித்தான். இத்தொடரில் உள்ள செய்யுள் என்னும் பெயர்ச்சொல் ஐ என்னும் உருபையேற்றுச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்வாறு பெயர்ச்சொல்லினது பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை ஆகும்.

அதியன் : மூன்றாம் வேற்றுமைக்கும் உருபு உண்டா? ஐயா.

ஆசிரியர் : மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் ஆகியன.

(எ–டு) நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது. – ஆல்

தூங்குகையான் ஓங்குநடை. – ஆன்

தாயொடு மகள் வந்தாள். – ஒடு

தந்தையோடு தாய் வந்தாள். – ஓடு

தந்தையுடன் தம்பியும் வந்தான். – உடன்

வைரமணி : நான்காம் வேற்றுமை உருபு என்ன? ஐயா.

ஆசிரியர் : நான்காம் வேற்றுமை உருபு கு. தலைவர் நந்தினிக்குப் பரிசு வழங்கினார். நந்தினி என்னும் சொல் கு என்னும் உருபை ஏற்றுப் பொருள் வேறுபடுத்திக் காட்டுகிறதல்லவா?

காந்தாரி : ஐந்தாம் வேற்றுமை உருபுபற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேன். ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் என்பன.

(எ–டு) கொடையில் சிறந்தவர் பாரி. இந்தியாவின் தெற்கு எல்லை குமரி. இத்தொடர்களில் கொடை, இந்தியா என்னும் சொற்களுடன் இல், இன் என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்து கின்றன.

மாரி : ஆறாம் வேற்றுமைக்கு உருபு உண்டா? ஐயா.

ஆசிரியர் : ஆறாம் வேற்றுமை உருபு அது என்பது. (எ–டு) இராமனது வீடு. எனது புத்தகம். இத்தொடர்களில் இராமன், என் ஆகியபெயர்ச்சொற்களுடன் அது என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து பொருளை வேறுபடுத்துகிறது.

இளம்பிறை : ஏழாம் வேற்றுமை உருபையும் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஏழாம் வேற்றுமைக்குக் கண், உள், மேல், கீழ் என்பன உருபுகளாம்.

(எ–டு) வீட்டின்கண் குழந்தை விளையாடுகிறது.

பெட்டிக்குள் பணம் இருக்கிறது.

கூரையின்மேல் சேவல் உள்ளது.

கட்டிலின்கீழ் நாய் படுத்துள்ளது.

இத்தொடர்களில் வீடு, பெட்டி, கூரை, கட்டில் ஆகிய சொற்களுடன் கண், உள், மேல், கீழ் ஆகிய உருபுகள் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துகின்றன.

எழிலரசு : எட்டாம் வேற்றுமை என்ன? ஐயா.

ஆசிரியர் : எட்டாம் வேற்றுமை உண்டு. ஆனால், அதற்கு உருபு இல்லை. இதனை விளி வேற்றுமை என அழைப்பர்.

(எ–டு) கந்தா வா!

இத்தொடரில் கந்தன் என்னும் சொல்லில் இறுதி (ன்) எழுத்தானது கெட்டு, அதன் அயல் எழுத்து (த – தா என) நீண்டு அழைத்தற் பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவதை விளி வேற்றுமை என்பர்.

பயிற்சி : கோடிட்ட இடத்தில் பொருத்தமான உருபேற்ற சொல்லைத் தேர்ந்தெழுதுக.

1. அமுதா ____________ எழுதினாள்.

அ) பாடத்தை ஆ) பாடத்திற்கு இ) பாடத்தின்

2. முருகன் ____________ உயர்ந்தான்.

அ) உழைப்பை ஆ) உழைப்பால் இ) உழைப்பிற்கு

3. பண்டைய மன்னர்கள் தமிழ் ____________ பாடுபட்டனர்.

அ) வளர்ச்சிக்கு ஆ) வளர்ச்சியை இ) வளர்ச்சியின்கண்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கலைச்செல்வன் __________ முரித்தான். (கிளை)
2. பாடம் __________ படிக்கப்பட்டது. (இராமன்)
3. பாடல் எழுதிய __________ பரிசு கிடைத்தது. (புலவர்)
4. செம்மொழி மாநாடு __________ பெருமையை எடுத்துரைத்தது. (தமிழ்)
5. இது __________ சட்டை. (கபிலன்)
6. __________ இலக்குமி பாடுகிறாள். (மேடை)

### ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுமை என்பது யாது ?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
4. உருபின்றி வரும் வேற்றுமைகள் யாவை ? விளக்குக.

### இ) மனவரைபடம் வரைக.

வேற்றுமை உருபுகளின் வகைகளை நீ புரிந்துகொண்டவாறு மனவரைபடம் வரைக.

## அடைமொழி

மாணவர் : வணக்கம், ஐயா

ஆசிரியர் : வணக்கம். அனைவரும் நலம்தானே! சென்ற வகுப்பில் படித்த பாடங்கள் எளிதாகப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். யாருக்காவது ஐயம் உள்ளதா ?

மாணவர் : நன்றாக விளங்கிற்று, ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. பாண்டியா! இன்று என்ன கிழமை ?

பாண்டியன் : திங்கட்கிழமை, ஐயா.

ஆசிரியர் : திங்கள் என்றால் என்ன பொருள் ?

பாண்டியன் : நிலவு, மாதம் ஐயா.

ஆசிரியர் : நிலவை வெண்ணிலவு என்றும் அழைப்பார்கள் அல்லவா ?

பொன்னி : ஆமாம், ஐயா.

ஆசிரியர் : இதில் வரும் வெண்மை என்னும் சொல் நிலவுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

பொன்னி : அடைமொழி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : பல வகைப்பட்டதாக இருக்கும் ஒரு பொருளைப் பொதுவாகச் சுட்டும்பொழுது அதன் வகை குறித்து ஐயம் ஏற்படலாம். எனவே, அவற்றை இனம்பிரித்துக் காட்டுவதற்குத் தனிச்சொல்லைப் பயன்படுத்துவர். அத்தனிச்சொல் அடைமொழி எனப்படும். சான்றாக, பாடநூல் எனச் சொல்லும்பொழுது, அதன்வகை குறித்து ஐயம் தோன்றும். அதைப்போக்க தமிழ்ப் பாடநூல், ஆங்கிலப் பாடநூல், கணக்குப் பாடநூல் என அடை கொடுத்துக் கூறவேண்டும். இவ்வாறு பொருள்களை இனம்பிரித்தறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழி எனப்படும்.

இளவழகி : ஐயா, இனமுள்ள அடைமொழி உண்டென்றால், இனமில்லா அடைமொழி யென ஒன்று இருக்கிறதா ?

ஆசிரியர் : இருக்கிறது. வெண்ணிலவு, கருங்காக்கை, செங்கதிரோன் இவற்றுக்கெல் லாம் இனமாகக் கூறவேண்டுமானால், கருநிலவு, வெண்காக்கை, கருங்கதிரோன் எனக் கூறவேண்டும். அவ்வாறு ஒன்று இல்லாததால் இவை போன்றவற்றை இனமில்லா அடைமொழிகள் எனக் கூறுவர்.

அறிவுமதி : அடைமொழிகள்பற்றி அறிந்து கொண்டோம், ஐயா.

ஆசிரியர் : அடைமொழிகளின் வகைகளைப் பற்றி நீங்கள் மேல் வகுப்பில் இன்னும் விரிவாகப் படிப்பீர்கள்.

## மாதிரி வினாக்கள்

### அ) குறுவினாக்கள்

1. அடைமொழி என்றால் என்ன ?
2. இனமுள்ள அடைமொழிக்குச் சான்றுகள் தருக.
3. இனமில்லா அடைமொழிக்குச் சான்றுகள் தருக.

### பயிற்சி :

கீழுள்ள தொடர்களை இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழியெனப் பகுத்துக் காட்டுக.

| | | |
|---|---|---|
| 1. செந்தாமரை | 2. பாற்குடம் | 3. உப்பளம் |
| 4. பூமரம் | 5. ஊர்மன்றம் | 6. தோய்தயிர் |
| 7. செஞ்ஞாயிறு | 8. வெள்ளைப்பூனை | 9. செந்தமிழ் |

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் – என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) எழுதுதல் திறன்

பூனையும் எலியும் சந்தித்துக்கொண்டால் என்ன பேசிக்கொள்ளும்? ஒரு பக்கத்திற்கு உரையாடல் வடிவில் எழுதுக.

செயல் திட்டம் :

ஐந்து மூலிகைத் தாவரங்களின் படங்களை ஒட்டி, அவற்றின் பயன்களை எழுதிக் கொணர்க.

## மொழித்திறன் பயிற்சி

அ) பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை அறிவோம்.

| பிறமொழிச் சொல் | – | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | – | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|---|---|
| அனுமதி | – | இசைவு | உபயம் | – | திருப்பணியாளர் கொடை |
| ஆதவன் | – | ஞாயிறு | உஷார் | – | எச்சரிக்கை |
| ஆரம்பம் | – | தொடக்கம் | எதார்த்தம் | – | இயல்பு |
| ஆஸ்தி | – | சொத்து | ஐதிகம் | – | உலக வழக்கு |
| இம்சை | – | துன்பம் | காகிதம் | – | தாள் |
| இருதயம் | – | நெஞ்சகம் | கிரீடம் | – | மணிமுடி |
| ஈசன் | – | இறைவன் | குபேரன் | – | பெருஞ்செல்வன் |
| உபசரித்தல் | – | விருந்தோம்பல் | | | |

பயிற்சி

பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

அ) இந்த வேலையில் சேர என்ன அந்தஸ்து உள்ளது.?

ஆ) கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான்.

இ) ஆகாசத்தில் பட்சி பறந்தது.

ஈ) புஷ்பமின்றி, அபிஷேகம் உண்டா?

உ) குழந்தைக்குக் கண்திருஷ்டி சுற்றிப்போடு.

ஆ) தமிழெண் கூட்டலைப் பொருத்துக.

| கூட்டல் | – | கூடுதல் |
|---|---|---|
| 1. க + க | = | 10 |
| 2. ச + ரு | = | 8 |
| 3. உ + ௩ | = | 2 |
| 4. கூ + க | = | 5 |
| 5. ரு + ௩ | = | 9 |

### இ) கட்டுரை எழுதுதல்

பெண் கல்வி

### ஈ) அகரவரிசையில் அமைக்க.

தை, தீ, தென்னை, தாமரை, தூண், தேன், தட்டு, திண்ணை, துணி, தொட்டி, தோட்டம், தயிர், திரள், தூள், திண்ணன், தோணி, தொடு, தீனி.

## பண்பு

### மறுத்தல்

கண்ணன் ஏழாம் வகுப்பில் படிக்கிறான்.

கண்ணனின் தாயார் மலர்க்கொடி, அவனை வெளியில் எங்காவது அழைத்துச்செல்ல வேண்டுமென்றால் மிகவும் தயங்குவார்.

காரணம், கண்ணனின் செயல்தான்.

யார், எதைக் கொடுத்தாலும் உடனே கைநீட்டி வாங்கிவிடுவான்.

'வேண்டா' என்று அவனுக்குச் சொல்லவே தெரியாது.

மலர்க்கொடி எத்தனையோ முறை அவனிடம் எடுத்துக் கூறிவிட்டாள்; ஆனால், அவளால் திருத்த இயலவில்லை.

### கூடிப்பேசுவோம்

1. கண்ணனைப் போன்று உனக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் உள்ளனரா ?
2. கண்ணனின் செயல் முறையானதா ?
3. கண்ணனின் பழக்கத்தை மாற்றுவதற்கு ஏதேனும் வழி இருந்தால் குறிப்பிடுங்கள்.
4. தொடர்வண்டியில் செல்லும்போது யாராவது, எதையாவது கொடுத்தால் நீங்கள் வாங்கிக் கொள்வீர்களா ?

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் பழகும் திறன்

ஒருவருக்கொருவர் நட்புடன் பழகவும், தொடர்ந்து மகிழ்ச்சியான நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் இத்திறன் தேவை.

மைவிழியும் மான்விழியும் இணைபிரியாத தோழிகள். ஆனால், சில நாளாக மைவிழியின் போக்கு மான்விழிக்குப் பிடிக்கவில்லை.

எப்போதும் பிறரிடம் குறை காண்பதே அவளுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. இதனால் மற்ற நண்பர்கள் இவர்களோடு சேராமல் ஒதுங்கி இருந்தார்கள்.

மான்விழி எடுக்கும் முடிவு என்னவாக இருக்கும் ?

மைவிழியின் நட்பை மான்விழி தொடர்வாளா, விலகிச் செல்வாளா ?

மான்விழி நிலையில் நீயிருந்தால் என்ன முடிவெடுப்பாய் ?

## மதிப்புக்கல்வி

### உதவும் மனப்பான்மை

சென்னையில் ஒரு குழுவினர் பள்ளி ஒன்றை நடத்தி வந்தனர். அப்பள்ளியின் ஆசிரியரான வேமூர் நரசிம்மர் என்பவர், ஏழை மாணவர்க்கு நண்பகல் இலவய உணவு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்.

அதற்காகப் பொருளுதவிபெற அவர் அணுகியவர்களுள் மருத்துவ மாமேதை குருசாமியும் ஒருவர். அத்திட்டத்தின் சிறப்பை உணர்ந்த குருசாமி, மறுநாள் அவரைச் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டார்.

எழும்பூர்க் கென்னத்துச் சாலையில் தமக்கு உரிமையாக இருந்த மாளிகை ஒன்றைப் பள்ளிக்குப் பத்திரம் எழுதிப் பதிவு செய்துகொடுத்தார். அன்னாரின் உதவும் மனப்பான்மை அளவிடற்கரியது.

உதவிக்கு எல்லையில்லை. ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப உதவிகள் வேறுபடும். எனவே, தேவைப்படுவோருக்கு உதவுவதே உதவியாகும். அதுவே, மனிதனுக்குரிய சிறப்புப் பண்பு.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. – குறள், 226

## தனிப்பாடல்

இம்பர்வான் எல்லைஇரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணாநீ என்றாள் பாணி
வம்பதாம்க ளபமென்றேன் பூசும் என்றாள்
மாதங்கம் என்றேன்யாம் வாழ்ந்தே மென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் தின்னு மென்றாள்
பகடென்றேன் உழுமென்றாள் பழனந் தன்னைக்
கம்பமா என்றேன்நற் களியாம் என்றாள்
கைம்மாஎன் றேன்சும்மா கலங்கி னாளே! *

– அந்தககக்கவி வீரராகவர்

பொருள் : பாணன் மனைவியாகிய பாடினி, “பாணரே! இந்நிலவுலகையும் வானுலகையும் தனது புகழுக்கு எல்லையாக உடையவன் இராமன். அவ்வள்ளலைப் பாடி, நீ என்ன பரிசு கொண்டுவந்தாய்?” எனக்கேட்டாள். அதற்குப் பாணன், தான்கொண்டு வந்தது யானை எனக் கூறக் கருதிக் களபம் என்றான். பாடினி, அவன் கூறியதற்குச் சந்தனம் எனப் பொருள்கொண்டு பூசிக்கொள்ளுங்கள் என்றாள். யானையைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகிய மாதங்கம் என்று சொன்னான். அவள், அதற்கு மிகுந்த பொன் எனப் பொருள்கொண்டு, இனி மகிழ்ச்சியாக வாழ்வோம் என்று கூறினாள். அடுத்து, வேழம் எனக் கூறினான். அதற்கு அவள், கரும்பு எனப் பொருள்கொண்டு தின்னுங்கள் என்றாள். அவன் பகடு என்று கூற, அவளோ அதனைக்கொண்டு வயலை உழும் என்று கூறினாள். அவன்கம்பமா என்று கூற, அவளோ கம்பு மாவு எனக் கருதிக்கொண்டு, நல்ல களியாகும் என்றாள். அவன் கைம்மா என்று சொல்ல, அவள் ஒன்றும் பேசாமல் திகைத்து நின்றாள்.

யானைக்குரிய வேறுபெயர்கள் : களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா முதலியன. இச்சொல் ஒவ்வொன்றுக்கும் வேறு பொருளும் உண்டு. களபம் – சந்தனம்; மாதங்கம் – பொன்; வேழம் – கரும்பு; பகடு – எருது; கம்பமா – கம்பு மாவு.

ஆசிரியர் குறிப்பு : அந்தககக்கவி வீரராகவர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பூதூரில் பிறந்து, பொன் விளைந்த களத்தூரில் வாழ்ந்தார். இவர் தந்தையாரின் பெயர் வடுகநாதர். இவர் சீட்டுக்கவி பாடுவதிலும் நகைச்சுவை ததும்பப் பாடல் இயற்றுவதிலும் வல்லவர்; சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

நூற்குறிப்பு : இப்பாடல் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல். இதில் நூற்றுப்பத்துப் புலவர் பாடிய ஆயிரத்து நூற்றுப் பதின்மூன்று பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

பிரித்து எழுதுக.

1. களபமென்றேன் 2. வேழமென்றேன் 3. உழுமென்றாள்

ஆ) குறுவினாக்கள்

1. அந்தகக்கவி வீரராகவர் – குறிப்பு எழுதுக.
2. யானைக்குரிய வேறு பெயர்கள் என்னென்ன?

இ) சிறுவினா

பாணன், பாடினி சொல்விளையாட்டு உரையாடலை விவரிக்க.

### தாலாட்டுப் பாடல்

ஆராரோ ஆராரோ – கண்ணேநீ
ஆரிரரோ ஆராரோ.

கண்ணே நவமணியே – கண்ணேநீ
கானலிலே பிறந்தாயோ ?

என்னநான் சொல்வேனோ – கண்ணேநீ
இந்திரனோ சொல்லிவிடு ?

கொட்டிவைத்த முத்தே – கண்ணேநீ
குவித்துவைத்த ரத்தினமே

கரும்பு ரசமே – கண்ணேநீ
கசக்காத கற்கண்டே

ஆராரோ ஆராரோ – கண்ணேநீ
ஆறுமுகன் பிறந்தானோ ?

மாத்துயர்ந்த பொன்னே – கண்ணேநீ
மண்டலத்து ராசாவோ ?
பூத்த புதுப்பூவே – கண்ணேஉன்
பொக்கிசத்தைப் பார்த்தாயோ ?

மானே மருக்கொழுந்தே – கண்ணேநீ
மலர்விரிந்த மல்லிகைப்பூ

காட்டுக் குயிலே – கண்ணேநீ
கண்டெடுத்த பாட்டுக்குயில்

புள்ளைக்கலி தீர்க்கவந்த – கண்ணேஎன்
பொன்மானே தூங்கம்மா.

**பொருள் :** “குழந்தையே இல்லாமல் கானல்நீராய்ப் போய்விடுமோ என்று எண்ணியிருந்த எனக்குப் பிறந்த உன்னைக் கண்ணென்று சொல்வேனோ? நவமணி என்று சொல்வேனா? இல்லை நீ இந்திரனோ?” எனக்கு அதைச் சொல்வாய்.

“முத்துக்குவியலே! இரத்தினக் குவியலே! கருப்பஞ் சாறே! எனக்குக் கற்கண்டு போன்ற நீ யார்? அழகிய ஆறுமுகன் வந்துதான் பிறந்தானோ? மாற்றுக் குறையாத பொன்னே! நீ எங்கள் பகுதி இராசாவோ? பூப்போலப் பிறந்தவனே? உன் செல்வ வளத்தைப் பார்த்தாயா? மல்லிகைப் பூவாகவும், மருக்கொழுந்தாகவும் மணம் வீச வந்தவனே? காட்டுக் குயிலாக உன்னைக் கண்டெடுத்தேன். பிள்ளை இல்லை என்ற குறைதீர்க்க வந்த என் கண்ணே! நீ கண்ணுறங்கு.” இவ்வாறு தாயொருத்தி, தன் குழந்தையைத் தாலாட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**நூல்குறிப்பு:** மலையருவி (நாடோடிப் பாடல்கள்) என்னும் நூலில், இந்நாட்டுப்பாடல்களைத் தொகுத்தளித்துள்ளார் கி.வா. ஜகந்நாதன். இந்நூலில் தெம்மாங்கு, தங்க ரத்தினமே ராசாத்தி, ஆண் பெண் தர்க்கம், தொழிலாளர் பாட்டு, கள்ளன்பாட்டு, குடும்பம், தாலாட்டு, சிறுவர் உலகம், புலம்பல், கும்மி, தெய்வம், பல கதம்பம் எனப் பதின்மூன்று தலைப்புகளில் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. பாடப்பகுதியாக அமைந்துள்ள பாடல் தாலாட்டு என்னும் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**நூல் பயன் :** மலையருவி நூலைப் படிப்பதன் வாயிலாகத் தமிழகத்திலுள்ள ஊர் மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, குடும்பம், தொழில்கள், தெய்வ வழிபாடு, திருவிழாக்கள் முதலியனவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம். இதிலுள்ள பாடல்கள் கற்போர்க்குச் செவிநுகர் கனிகளாக ஓசைநயத்துடன் இனிமை சேர்க்கும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) கொட்டி வைத்த ______________ .

ஆ) கண்ணே நீ கண்டெடுத்த ______________.

இ) புள்ளைக் ______________ தீர்க்க வந்த கண்ணே.

### ஆ) குறு வினாக்கள்

1. மலையருவி – நூல் குறிப்பு எழுதுக.
2. மலையருவி நூல் பயன்களை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. குழந்தையைத் தாய் எவ்வாறெல்லாம் கற்பனை செய்து பாராட்டுகிறாள்?
2. தாய், குழந்தையைத் தாலாட்டும் பாங்கினை எழுதுக.

# தமிழகத்தின் அன்னிபெசண்ட்



பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்பது வள்ளுவம். இக்கூற்றுக்கு ஒப்பாகப் பல சாதனைகள் புரிந்தவர்; தம் இளமைக்காலம் முதலே, பல சோதனைகளைக் கண்டவர்; தேவதாசி மரபில் பிறந்து, அம்முறையை ஒழிப்பதற்குக் குரல் கொடுத்தவர்; அறிஞர் அண்ணா அவர்களால் தமிழகத்தின் அன்னிபெசண்ட் எனப் புகழப்பட்டவர். அவர்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். இவர் கி.பி. 1883ஆம் ஆண்டு பிறந்தார். இவரை, இவரது பெற்றோர் கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் பழமொழிக்கேற்பக் கேள்வி அறிவில் சிறந்து விளங்கினார்.

## இளமை வாழ்க்கை

தேவதாசிக் குடியில் பிறந்த பெண்களுக்கு ஆடலும் பாடலும் உரியன. ஆனால், இவரது பெற்றோர் அவருக்கு அவற்றைக் கற்றுத்தர மறுத்தனர். இதன் காரணமாக அவரது குடும்பத்தை அவ்வினத்தார் ஒதுக்கி வைத்தனர். இதன் விளைவாகப் பொருளாதாரத்தில் அக்குடும்பம் கடைநிலைக்குத் தள்ளப்பட்டது. இராமாமிர்தம் அம்மையாரின் தந்தை கிருஷ்ணசாமி செய்வதறியாது வாழ்க்கையை வெறுத்து, மனைவி மகளைவிட்டு எங்கோ சென்றுவிட்டார். இந்நிலையில் அம்மையாரின் தாயார், உறவினர் உதவியை நாடலானார். உதவி கிட்டாது போகவே தம் ஐந்து வயது மகளான அம்மையாரைப் பத்து ரூபாய்க்குத் தேவதாசி ஒருத்தியிடம் விற்றுவிட்டார்; உற்ற நோய் நோன்றல் என்னும் குறளுக்குகேற்பத் தன் துயர் பொறுத்துப் பிறர்நலம் பேணுவதில் மிகுந்த நாட்டங்கொண்டிருந்தார் அம்மையார்.

குழந்தை வளர்ந்து குமரியானாள். வளர்ப்புத்தாய் அறுபது வயதுடைய முதியவருக்கு அம்மையாரைத் திருமணம் முடிக்கத் திட்டமிட்டார். இந்நிகழ்ச்சி, அம்மையார் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. பெண்ணுரிமை மறுக்கப்பட்ட காலத்தில், அறுபது வயது முதியவரை மணக்க மறுத்துத் தனக்கு இசையும் நாட்டியமும் கற்றுத்தந்த சுயம்பு என்பவரை மணந்தார். கணவர், அம்மையாரின் அனைத்துப் போராட்டங்களுக்கும் துணையாய் நின்றார். பெண்ணுரிமையை நிலைநாட்டுவதில் நீறுபூத்த நெருப்பாய் இராமல், ஞாயிற்றின் ஒளியாய்ச் சுடர்விட்டார்.

## அரசியல் தொண்டு

அம்மையார், 1917ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் தமது முதல் போராட்டத்தைத் தொடங்கினார். தேவதாசிகளின் இல்லந்தோறும் சென்று தேவதாசிமுறையின் கொடுமைகளைப்பற்றி எடுத்துக்கூறி, அவர்களை ஒருங்கிணைத்து மேடை முழக்கங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இதனை ஏற்காத தலைவர்கள், செல்வர்கள், இளைஞர்கள், நாடகமேடை ஏறி அம்மையாரின் கூந்தலைப் பிடித்து இழுத்ததோடு அறுத்தும் எறிந்தனர். அதனைப் பொருட்படுத்தாது, பொறுமை கடலினும் பெரிது என்று எண்ணித் தம் குறிக்கோளை முழு மூச்சாய்ச் செயல்படுத்தினார்.

அம்மையார் காந்தியத்தின்மீது மிகுந்த ஈடுபாடும் விடுதலை வேட்கையும் கொண்டிருந்தார். பேச்சாளர்கள் எதையும் பேசக்கூடாது என்று ஆங்கிலேயர் கட்டளையிட்டிருந்தனர். அக்கட்டளையை மதிப்பதுபோலக் காட்டித் தமது கொள்கையை நிலைநிறுத்துவதில் அம்மையார் உறுதியோடு இருந்தார். எனவே, தாம் பேச நினைத்த கருத்துகளை எல்லாம் கரும்பலகையில் எழுதி மக்கள் முன்னிலையில் வைத்தார். காந்தியடிகள், இரண்டாவது வட்டமேசை மாநாட்டில்கலந்துகொண்டு இந்தியா திரும்பினார். அவரை ஆங்கிலேயர் கைது செய்தனர். இதனால், சினம் கொண்ட அம்மையார், மூவண்ணக் கொடியை ஆடையாக அணிந்து கொண்டார்; கதராடையை ஊர் ஊராகக் கொண்டுசென்று விற்றார். காந்தியத்தை ஏற்போர் குடிசையில் வாழவேண்டும் என்னும் காந்தியடிகளின் கட்டளையை ஏற்றுத் தாம் இருந்த ஓட்டுவீட்டை விடுத்துக் குடில் அமைத்து வாழ்ந்தார். அக்குடிலின் வெளியில் வியப்பூட்டும் விளம்பரப் பலகை ஒன்று தொங்கியது. அப்பலகையில் கதர் அணிந்தவர்கள், உள்ளே வரவும் என எழுதப்பட்டிருந்தது. ஒரு வழக்கை விசாரிக்க வந்த காவல் உதவி ஆய்வாளர் உள்ளே செல்லாமலேயே விசாரணை நடத்தினார். இத்தகைய கொள்கைப் பிடிப்புமிக்கவராக அம்மையார் திகழ்ந்தார்.

## நடைப்பயணம்

பெரியார், திரு.வி.க., வரதராசுலு, தருமாம்பாள், நீலாம்பிகை, மலர்முகத்தம்மையார், தாமரைக்கண்ணியம்மையார் முதலானோர் மூவலூர் அம்மையாரோடு இணைந்து, தேவதாசி முறையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டனர்.

அம்மையார், சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தார். இவர், 1938ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போர் பேரணியில் உறையூர் (திருச்சி) முதல் சென்னைவரை நாற்பத்திரண்டு நாள், ஐந்நூற்று எழுபத்தேழு மைல் நடைப்பயணம் மேற்கொண்டார். இந்நடைப்பயணத்தின்போது எண்பத்தேழு பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். அப்பேரணியில் நடந்து வந்த ஒரே பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சான்றாய் வாழ்ந்தவர்

அம்மையார், பெண் உரிமைக்குப் பாடுபட்ட விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். தீண்டாமை, தேவதாசிமுறை, குழந்தைத் திருமணம், கைம்மை நோன்பு முதலிய சமூகக் கேடுகளை எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தார். வீடு, நாடு என இரு தரப்பிலும்

சாதனைகள் பல புரிந்தார். பொதுவாழ்வில் ஐம்பதாண்டுகள் ஈடுபட்டுத் தமது எண்பதாம் வயதில் 27.06.1962அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார். இருப்பினும், தம் தொண்டால் தமிழக வரலாற்றில் தமக்கென அழியாப் புகழை நிலைநிறுத்திக் கொண்டார் எனில், அது மிகையாகாது.

1989ஆம் ஆண்டு மூவலூர் அம்மையாரின் நினைவைப் போற்றும்வகையில், அவரது பெயரால் ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித்திட்டத்தினைத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) இராமாமிர்தம் அம்மையார் அண்ணா அவர்களால் ____________ என அழைக்கப்பட்டார்.

ஆ) அம்மையாருக்கு இசையும் நாட்டியமும் கற்றுத் தந்தவர் ____________ .

இ) அம்மையாரின் வீட்டுமுன் எழுதப்பட்டிருந்த சொற்றொடர் ____________ .

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) அம்மையார் முதல் போராட்டத்தைத் தொடங்கிய ஆண்டு

1. 1883   2. 1917   3. 1938

ஆ) கதர் ஆடை என்பது

1. பட்டாடை   2. பருத்தி ஆடை   3. செயற்கையிழை ஆடை

இ) இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டவர்

1. அண்ணா   2. காந்தியடிகள்   3. இராமாமிர்தத்தம்மையார்

### ஆ) குறுவினாக்கள்

1. இராமாமிர்தம் அம்மையாரின் திருமணம் எவ்வாறு நடைபெற்றது?
2. தேவதாசிகளுக்கு விழிப்புணர்வு ஊட்ட அம்மையார் என்ன செய்தார்?
3. கதராடை அணிய அம்மையார் மேற்கொண்ட முயற்சிகளை எழுதுக.
4. எந்தெந்தச் சமூகக் கேடுகளை எதிர்த்து அம்மையார் போராடினார்?

### இ) சிறுவினாக்கள்

1. அம்மையாரின் இளமை வாழ்க்கை எவ்வாறு இருந்தது?
2. காந்தியடிகளின் கொள்கையை அம்மையார் எவ்வாறு பின்பற்றினார்?
3. அம்மையார் எதற்காக நடைப்பயணம் மேற்கொண்டார்?

### ஈ) நெடுவினா

இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி ஒழிப்புமுறைக்காக எவ்வாறு பாடுபட்டார்?

# தூரத்து ஒளி

மாலைப்பொழுதில் வழக்கம்போல் ஆற்றங்கரை ஓரம் மன்னர் அக்பரும் பீர்பாலும் பேசிக்கொண்டே நடந்தனர். பனிக்காலம் அது. குளிர் கடுமையாக இருந்த நேரம். மன்னரின் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. "பீர்பால், இந்தப் பனியிலும் கடுங்குளிரிலும் ஓர் இரவு முழுவதும் இந்த ஆற்றுநீரில் யாராலாவது நிற்க இயலுமா?

பீர்பால் குளிரில் நடுங்கியபடி, "என்னால் இயலாது மன்னா! ஆளை விடுங்கள்" என்றார். "உங்களால் இயலாது என்பது எனக்குத் தெரியும். இரவு முழுவதும் ஆற்றுநீரில் யார் நிற்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று நாளைக்காலை முரசு அறைந்து மக்களுக்குத் தெரிவியுங்கள்" என்றார் மன்னர். "என்ன மன்னா, இதைப் போய்" எனப் பீர்பால் இழுத்தார்.

"முதலில் நான் சொன்னதைச் செய்யுங்கள். பிறகு பார்க்கலாம்" என்றபடி பீர்பாலிடம் கூறிவிட்டுப் புறப்பட்டார் மன்னர். மறுநாள் காலை, மன்னரின் அறிவிப்பைத் தெருவெங்கும் முரசு அறிவித்துக் கூறப்பட்டது. மிகவும் வறுமையில் வாடும் ஏழை ஒருவன், மன்னரின் பரிசைப் பெற்றாவது குடும்பத்தை வாழ வைக்கவேண்டும் என எண்ணினான். எனவே, என்னவானாலும் சரி, போட்டியில் கலந்துகொள்ளலாம் என முடிவெடுத்து மன்னரின் முன்போய் நின்றான். மன்னரும் அவனை அன்றைய இரவுப்பொழுது முழுவதும் ஆற்றுநீரில் நின்று வருமாறு கூறி அனுப்பி வைத்தார். அவனைக் கண்காணிக்க இரு காவலரையும் உடன் அனுப்பி வைத்தார். ஏழை மனிதனும் இரவுப்பொழுது முழுவதும் ஆற்றுக்குள் நின்றான். காவலர்கள், அவனை இரவு முழுவதும் கண்காணித்துக் கொண்டே இருந்தார்கள். காலையில், அவனை அழைத்து வந்து மன்னரிடம் நிறுத்தினார்கள். மன்னர் அவர்களிடம், "என்ன, இரவு முழுவதும் ஆற்றுநீரில் இவர் நின்றிருந்தாரா?" எனக் கேட்டார். "ஆமாம் மன்னா" எனக் காவலர்கள் பதில் கூறினார்கள். சரியென ஏற்றுக்கொண்ட மன்னர், 'உம்மைப் பாராட்டுகிறேன்' என்றார். சரி, இந்தக் குளிரை எப்படித் தாங்கிக்கொண்டு நின்றாய்?" என வியப்புடன் கேட்டார்.

ஏழை, "மன்னா, அஃது ஒன்றும் பெரிய செயலில்லை. இரவு முழுவதும் அரண்மனையில் தெரிந்த வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தேன்" என்றான். "ஆகா, அப்படியென்றால் உமக்குப் பரிசுப்பொருள் இல்லை; நீர் செல்லலாம்" என்றார் மன்னர். மன்னர் இப்படிக் கூறவும் ஏழை அதிர்ச்சியுற்றான். "மன்னா, தாங்கள் இப்படிக் கூறலாமா?" எனக் கண்கள் கலங்கக் கேட்டான். "நீர், இரவு முழுவதும் அரண்மனை விளக்கைப் பார்த்ததினால், அதன் சூட்டில் குளிர் காய்ந்து இருக்கிறீர். அதனால்தான், உமக்குப் பரிசு இல்லை என்றேன். நீர் போகலாம்" என்றதும் மன்னரை எதிர்த்துப் பேச இயலாமல், அவன் வருந்தியபடியே சென்றான். காவலர்கள் அவனுக்காக மனம் இரங்கினார்கள்; எப்படியும் அந்த

ஏழைக்குப் பரிசுப்பொருள் கிடைக்கவேண்டும் என்னும் நல்லெண்ணம் கொண்டார்கள். அதற்காகச் சிறிதும் காலந்தாழ்த்தாமல், நடந்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் பீர்பாலிடம் கூறினார்கள். இனித் தான் பார்த்துக்கொள்வதாகப் பீர்பால் அவர்களிடம் வாக்களித்தார். அன்று காலையிலேயே மன்னர், தம் காவலர்களுடன் வேட்டைக்குக் கிளம்ப ஏற்பாடு செய்தார்; வழக்கம்போல் பீர்பாலையும் அழைத்துவரக் காவலரை அனுப்பினார். பீர்பாலை அழைத்துவரச் சென்ற காவலர் திரும்பினார். “மன்னா, விரைவில் பீர்பால் தங்களுடன் வந்து சேர்ந்துகொள்வதாகக் கூறி என்னை அனுப்பி வைத்தார்” என்றான்.

“சரி, வரட்டும். நாம் செல்வோம்” என்ற மன்னர், தம் பரிவாரங்களுடன் காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். காட்டுப் பகுதியில் அக்பர் சென்று கொண்டிருந்தார். வழியில் பீர்பாலைப் பார்த்ததும் சிரித்துவிட்டார். ஏனென்றால், பீர்பாலின் செயல் மாறுபட்டிருந்ததே அதற்குக் காரணம். அங்கே அவர் சமையல் செய்துகொண்டிருந்தார்.

அடுப்பில் வைக்கவேண்டிய சோற்றுப்பானையை ஐந்தடி உயரத்தில் கட்டித் தொங்கவிட்டிருந்தார்; அதன்கீழே அடுப்பில் சின்னஞ்சிறு குச்சிகள் மெதுவாய் எரிந்து கொண்டிருந்தன. அக்பர், “என்ன பீர்பால், இங்கு உட்கார்ந்துகொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறீர்” என்றார். மன்னரைப் பார்த்ததும் பீர்பால், “வாருங்கள் மன்னா, வணக்கம்! நான், இங்குச் சமையல் செய்துகொண்டிருக்கிறேன்” என்றதும் மன்னரும், மற்றவர்களும் சிரித்தார்கள்.

“ஏன் சிரிக்கிறீர்கள் ?”

“பீர்பால், அடுப்பு எங்கே இருக்கிறது ? சோற்றுப்பானை எங்கே இருக்கிறது ? எப்படி அடுப்பில் இருந்து சூடு ஏறிச் சோறு வேகும் ?” என்று நையாண்டி செய்தார் மன்னர். “உறுதியாகச் சூடு ஏற்றிச் சோறு ஆக்கலாம், மன்னா. எங்கோ இருக்கும் அரண்மனையின் விளக்கொளியைப் பார்த்து, ஒருவருக்குச் சூடு கிடைக்கும்பொழுது, இது மட்டும் ஏன் முடியாது ?” என்றவுடன், அக்பர் தம் தவற்றை உணர்ந்தார். அந்த ஏழையை உடனே வரவழைத்து, அவருக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார் அக்பர். தான் செய்த தவற்றை உணர்த்திய பீர்பாலுக்கு நன்றிகூறிப் பரிசு கொடுத்தார். பீர்பாலும் ஏழைக்குப் பரிசு கிடைத்ததில் மனநிறைவடைந்தார்.

நன்றி : க. கௌ. முத்தழகர், அக்பர் பீர்பால் நகைச்சுவைக் கதைகள் என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

அக்பரின் தவற்றைப் பீர்பால் எவ்வாறு உணர்த்தினார்?

# மூவகைப்போலிகள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : நம் பள்ளி அறிவிப்புப் பலகையில் இன்று ஒரு திருக்குறள் எழுதப் பட்டுள்ளது. அக்குறளை யாரெல்லாம் படித்தீர்கள்? மாதரசி! அக்குறளைச் சொல்.

மாதரசி : அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.

இக்குறளில் 'அகம்' என்பதற்குப் பதில், 'அகன்' எனவும், 'முகம்' என்பதற்குப் பதில் 'முகன்' எனவும் எழுதப்பட்டுள்ளதே, இது பிழையல்லவா? அம்மா.

ஆசிரியர் : அருமையாகக் கேட்டாய். 'அகம், முகம்'என்பதற்குப் பதிலாக 'அகன், முகன்' என எழுதினாலும் பொருள் மாறுபடாது. இவ்வாறு ஒரு சொல்லின் எழுத்து வேறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பதைப் 'போலி' என்பர்.

நன்னன் : ஒரு சொல்லில் இறுதி எழுத்து மட்டும் மாறுபட்டு வருவதுதான் போலியா?

ஆசிரியர் : அப்படியன்று. ஒரு சொல்லில், முதலிலுள்ள எழுத்தோ இடையில் உள்ள எழுத்தோ, இறுதியிலுள்ள எழுத்தோ மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பின், அது போலி எனப்படும். இப்போலி, 1. முதற்போலி, 2. இடைப்போலி, 3. இறுதிப்போலி என மூவகைப்படும். இறுதிப் போலியைக் கடைப்போலி எனவும்கூறுவர்.

கயல்விழி : ஒவ்வொன்றைப் பற்றியும் எடுத்துக்காட்டுகளோடு கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : ஒரு சொல்லின் முதலெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது வருவது முதற்போலி யாகும். (எ–டு) மஞ்சு – மைஞ்சு; மயல் – மையல்.

ஒருசொல்லின் இடையெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது, இடைப்போலி எனப்படும். (எ–டு) முரசு – முரைசு; அரசியல்– அரைசியல்

ஒருசொல்லில் ஈற்றெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது, இறுதிப்போலி (கடைப்போலி) என்பர். (எ–டு) அறம் – அறன்; பந்தல் –பந்தர்

மாறன் : வேறு ஏதாகிலும் போலி உண்டா? அம்மா.

ஆசிரியர் : உண்டு. அஞ்சு ரூபாய் கொடு என்னும் தொடரில், 'அஞ்சு ரூபாய்' என்பது எதைக் குறிக்கிறது.

மாறன் : ஐந்து ரூபாய் என்பதைக் குறிக்கிறது, அம்மா.

ஆசிரியர் : இவ்வாறு அஞ்சு என்னும் சொல்லில் உள்ள அனைத்து எழுத்துகளும் மாறியுள்ளன. இருப்பினும், பொருள் மாறவில்லை. எனவே, இது முற்றுப்போலி எனப்படும்.

மாணவர் : நன்றி, அம்மா. போலிகள் பற்றித் தெளிவாக அறிந்துகொண்டோம்.

பயிற்சி : கீழுள்ள தொடர்களில் காணப்படும் போலிகளை வட்டமிடுக.

1. அஞ்சு பழங்கள் வாங்கி வா.
2. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
3. மல்லிகைப் பந்தரின் கீழே தங்கினான்.

## மாதிரி வினாக்கள்

அ) புறவய வினா

கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான போலிகளை எழுதுக.

1. கலம் – 2. இலஞ்சி – 3. குடல் –

அ) குறுவினாக்கள்

1. போலி என்றால் என்ன?
2. போலி எத்தனை வகைப்படும்?
3. இறுதிப்போலியை விளக்குக.
4. நலன், ஆனை, அரையர் – இவை எவ்வகைப் போலிகளுக்கு எடுத்துக்காட்டுகள்?

படித்து இன்புறுக.

அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக, ஆரியர்க் காக ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு, அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான், அவன் எம்மை அளித்துக் காப்பான்.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

சமுதாயத்தில் நிலவும் மூடநம்பிக்கைகள் – குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) படித்தல் திறன்

நம் மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகனார். அவர் விடுதலை வீரர். நம் நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர். அவர் வேதாந்தி; பழைய தத்துவங்கள் பலவற்றிற்குப் புதிய விளக்கம் தந்தவர். அவர், காலத்தின் சின்னம். ஓர் எழுச்சியின் அடையாளம். மகாத்மா, மறுமலர்ச்சியின் உருவம்.

### இ) எழுதுதல் திறன் (சிறுகதை எழுதுதல்)

கதை, கட்டுரை, கவிதை முதலியன மொழியின் உயர்நிலைத் திறன்களாகும். மாணவர்களின் படைப்பாற்றல் திறனை ஊக்குவிக்க, இவற்றை எழுதச் செய்யலாம். கதைப்பகுதியின் தொடக்கத்தைக் கொடுத்து முடிக்கச் செய்யலாம். முடிவு மாணவரின் கற்பனைத் திறனைப் பொருத்து அமையலாம்.

பயிற்சி : சிறுகதை ஒன்றின் தொடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அக்கதையினை எழுதி முடிக்க.

அரையாண்டுத் தேர்வுகள் முடிந்து, பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. மாணவர் மகிழ்ச்சியுடன் தத்தம் வீட்டிற்குச் சென்றனர். முகிலனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. விடுமுறையில் சுற்றுலா செல்ல அவனுடைய தந்தை முதலிலேயே ஏற்பாடுகளைச் செய்திருந்தார். வீட்டிற்குச் சென்றதும் பயணத்திற்குத் தேவையானவற்றைச் செய்யலாம் என்று ஆர்வத்துடன் வீட்டிற்கு விரைந்து சென்றான் முகிலன். "என்ன இது ? எல்லாரும் நம் வீட்டின்முன் கூட்டமாக நிற்கின்றனரே ? என்னவென்று தெரியவில்லையே ? குழப்பத்துடன் வீட்டைநோக்கி ஓடினான் முகிலன். அங்கே....

## மொழித்திறன் பயிற்சி

### அ) தொகைச்சொற்களை விரித்தெழுதுதல்

பேசும்போது இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட பொருள்களைத் தொகுத்து ஒரு சொல்லாகக் கூறுவதுண்டு. அதனைத் தொகைச்சொல் என்பர். இத்தகைய தொகைச்சொற்கள் தமிழ்மொழியில் மட்டுமே உண்டு.

முக்கனி என்னும் தொகைச்சொல் மா, பலா, வாழை ஆகிய மூன்றையும் குறிக்கும். அதுபோல், சில தொகைச்சொற்களையும் அவற்றின் விரிவையும் காண்போம்.

| வ.எண் | தொகைச்சொல் | விரிவு |
|---|---|---|
| 1 | இருவினை | நல்வினை, தீவினை |
| 2 | இருதிணை | உயர்திணை, அஃறிணை |
| 3 | முத்தமிழ் | இயல், இசை, நாடகம் |
| 4 | மூவிடம் | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| 5 | நானிலம் | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| 6 | நாற்றிசை | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| 7 | ஐம்பொறி | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| 8 | ஐந்திலக்கணம் | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| 9 | அறுசுவை | இனிப்பு, கசப்பு, புளிப்பு, கரிப்பு, துவர்ப்பு, கார்ப்பு |
| 10 | எண்சுவை | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை. |

பயிற்சி : கீழ்க்காணும் தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

1. ஐந்திலக்கணம்
2. பஞ்சபூதம்
3. நானிலம்

4. மூவிடம் ____________________

5. இருதிணை ____________________

### ஆ) தமிழெண்களைக் கூட்டுக.

1. ௧ + ௬ = .....  2. ௨ + ௫ = .....  3. ௭ + ௮ = .....
4. ௪ + ௧ = .....  5. ௨ + ௯ = .....

### இ) கட்டுரை எழுதுதல்: சமுதாயத்தொண்டு

குறிப்புகள்: முன்னுரை, சமுதாயத்தொண்டு – விளக்கம், மாணவரின் பங்கு, முடிவுரை

### ஈ) அகரவரிசையில் அமைத்தல்

**கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் அமைக்க.**

நூறு, நிலவு, நலன், நாடு, நுங்கு, நைந்து, நொடி, நீதி, நேற்று, நோன்பு, நெற்றி, நண்டு, நுட்பம், நோய், நூல், நெல், நின்று, நான்.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

### ஊடகங்களில்...

தொலைக்காட்சியில் நேயர் விருப்பம் நிகழ்ச்சி. தொகுப்பாளர், தொலைப்பேசிமூலம் நேயர்களுடன் உரையாடுகிறார். அவ்வுரையாடல் பின்வருமாறு:

தொகுப்பாளர் : வணக்கம், சார். உங்கள் நேம் என்ன ?

நேயர் : வணக்கம் மேடம். என் பெயர் கணேஷ்.

தொகுப்பாளர் : சொல்லுங்கள் மிஸ்டர் கணேஷ். எங்கே இருந்து கால் பண்றீங்க.

நேயர் : மேடம் நான் சேலத்திலிருந்து பேசறேன்.

தொகுப்பாளர் : சேலமா ? அப்ப உங்களைப் பாக்க வந்தா நெறையா மேங்கோ தருவீங்களா ?

நேயர் : ஓ, ஸ்யூர்ஆ தரேன்.

தொகுப்பாளர் : ஓ. கே. கணேஷ், உங்களுக்குப் பிடிச்ச சாங் எது சொல்லுங்க ?

நேயர் : மொழி பில்ம்லேருந்து எந்த சாங் வேணும்னாலும் போடுங்க.

தொகுப்பாளர் : ஓ ஐ லைக் இட் ஆல் சோ. சாங்க யாருக்கு டெடிகேட் பண்ணப் போறீங்க ?

நேயர் : சென்னையில் இருக்கிற என் பிரெண்ட் ரமேஷ்க்கு டெடிகேட் பண்றேன்.

தொகுப்பாளர் : ஓ.கே. கணேஷ். உங்க பேமிலி பத்தி சொல்லுங்க.

நேயர் : எங்க வீட்ல நான், எங்க பாதர், மதர், சிஸ்டர்னு போர் மெம்பர்ஸ் இருக்கோம்.

தொகுப்பாளர் : உங்க சிஸ்டர் என்ன பண்றாங்க ?

நேயர் : எய்த் ஸ்டேண்டர்டு படிக்கிறாங்க.

தொகுப்பாளர் : ஓ. கே. கணேஷ், நீங்க கேட்ட சாங் வந்துகிட்டே இருக்கு. கேட்டு என்ஜாய் பண்ணுங்க.

நேயர் : தேங்க் யூ மேடம்.

ஊடகங்கள் என்பவை செய்தியை மட்டுமே தராமல் மொழியையும் கருத்திற்கொண்டு செயல்படும்போதுதான் தமிழ் வளரும். ஏனெனில், ஊடகம் என்பது மக்கள் விரும்பும் பெரியதொரு

மொழி பரவும் இடம். ஆகவே, ஊடக நிறுவனத்தினரும், நேயர்களும் தாய்மொழியைக் கருத்திற்கொண்டு செயல்பட்டால் தமிழ் மேம்படும்; தேமதுரத் தமிழோசை தெருவெங்கும் பரவும் செயலை ஊடகங்கள் மேற்கொள்ளும் நாளே மொழி வளரும் நாள். இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை அறிந்து பயன்படுத்துவோமாக.

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப்பார்த்தல்

மற்றவருடைய நிலையில் அல்லது சூழலில் தன்னை வைத்துப் பார்த்து, அவர்களுக்காக வருந்தும் நிலையே பிறர் நிலையில் தன்னை வைத்துப்பார்த்தல் திறனாகும். மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் நம்மிடமிருந்து வேறுபட்டவர்களை (மாற்றுத் திறனாளிகளை) ஏற்றுக் கொள்ளவும் இத்திறன் உதவும். கபிலன் நன்றாகப் படம் வரைவான். அவனுடைய கையெழுத்தும் மிக அழகாக இருக்கும். நண்பர்கள் அவனிடம் தங்களுக்கும் படம் வரைந்து தரச் சொல்லிக் கேட்கும்போது மறுக்காமல் வரைந்து தருவான். ஆனால், அவனிடமும் ஒரு குறை இருந்தது. சிறு வயதில் ஏற்பட்ட கடுமையான காய்ச்சல், அவனது காது கேட்கும் திறனைப் பாதித்தது. அதனால், சிலர் அவனைக் கேலியும், கிண்டலும் செய்வர். அந்தச் சமயத்தில் அவன் மிகவும் மனம் வருந்துவான்.

கபிலன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

கபிலனுடன் படிப்பவர்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

## மதிப்புக்கல்வி

### பொதுநலம்

மகாத்மா காந்தி ஒருமுறை ஒருபள்ளிக்குச் சென்றிருந்தார். சட்டை அணியாமலிருந்த காந்தியைப் பார்த்து, "பாபு, நீங்கள் சட்டை போட்டுக்கொள்ள மாட்டீர்களா? என் அம்மா அழகாகச் சட்டை தைத்துத் தருவாள். நான் கொண்டு வந்து தரட்டுமா?" என்றான் ஒரு மாணவன். காந்தி சிரித்தவாறே கூறினார், 'ஓ போட்டுக் கொள்கிறேனே! ஆனால், ஒரு நிபந்தனை. எனக்கு நாற்பது கோடி உடன்பிறப்புகள் இருக்கிறார்கள். அனைவருக்கும் சட்டை தைத்துத் தர உன் அம்மாவினால் முடியுமா? அப்படியானால் நானும் சட்டை போட்டுக் கொள்வேன்' என்றார். காந்தியடிகளின் சிந்தனையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தேவைகளை எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்துக்கொண்டு வாழ்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு பொதுநலம் சிறக்கும். பகட்டான வாழ்வு தனக்கும் பிறர்க்கும் துன்பம் தரும்.

## அம்மானை

வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான்
பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை,
பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில்
ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை,
அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை.

– சுவாமிநாத தேசிகர்

**பொருள் :** ஒளிபொருந்திய நெடிய வேலை ஏந்திய வீரனும் பெருமை பொருந்திய திருச்செந்தூரில் விளங்குபவனும் ஆகிய முருகப்பெருமான், உலகிலுள்ள உயிர்களை எல்லாம் படைத்தனன். உலகிலுள்ள உயிர்களை எல்லாம் படைத்தவனேயானாலும் அவன், நான்கு மறைகளையும் அறிவானோ? அவன், இவற்றை யெல்லாம் அறிந்தே நான்முகனைச் சிறையிலிட்டனன்.

**சிறப்பு நயம் :** அம்மானை – ஒருவகைக் காய் விளையாட்டு. இது பெண்கள் விளையாடுதற்குரியது. பெண்கள் மூவர் வட்டமாக உட்கார்ந்துகொண்டு கல்லை மேலெறிந்து பிடித்தாடுவது அம்மானை விளையாட்டு. அங்ஙனம், ஆடுங்கால் முதலாமவர், இரண்டாமவரிடம் ஒரு கருத்தைக்கூறித் தொடங்க, இரண்டாமவர் மூன்றாமவரை அதுபற்றி வினவ, மூன்றாமவர் அதற்கு விடைகூறி முடிப்பதாக அமைந்த ஒரு சுவையான உரையாடல் விளையாட்டு. இவ்விளையாட்டைத் தமிழக மகளிர் பண்டுதொட்டே ஆடி வருகின்றனர்.

நான்முகன் மறைகளைப் படைத்தவனாகவும், மறையை அறிந்தவனாகவும் இருந்தும் பிரணவப் பொருளைப்பற்றித் தெரியாததால், முருகப்பெருமான் நான்முகனைச் சிறையில் அடைத்த செய்தியை இவ்வம்மானை கூறுகிறது. முருகப் பெருமான் சிறந்தவன்; யாவும் அறிந்தவன் என்பது இப்பாடலில் உணர்த்தப் பெறுகிறது.

**ஆசிரியர் குறிப்பு :** திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாததேசிகர் ஆவார். ஈசான தேசிகர் என்பது அவரது சிறப்புப் பெயராகும். தாண்டவமூர்த்தி என்பார்க்கு மகனாகப் பிறந்தார். இவர் மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றார். இவர், திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்குத் தொண்டராய் இருந்தார்; ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

**நூல் குறிப்பு :** திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று. கலம்பகம் = கலம் + பகம் எனப் பிரியும். கலம் – பன்னிரண்டு; பகம் – ஆறு ஆகப் பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது. மேலும், பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது. பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி ஈண்டுப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) அம்மானை என்பது ______________ விளையாடும் விளையாட்டு.

1. ஆண்கள் 2. பெண்கள் 3. குழந்தைகள்

ஆ) அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம்

1. சிவன் 2. நான்முகன் 3. முருகன்

இ) முருகனால் சிறையிலிடப்பட்டவன்

1. நான்முகன் 2. சிவன் 3. திருமால்

ஆ) குறுவினாக்கள்

1. திருச்செந்திற்கலம்பகம் – நூல் குறிப்பு எழுதுக.
2. அம்மானை – விளக்குக.

இ) சிறுவினா

முருகப்பெருமானின் சிறப்புகளை எழுதுக.

### சீவகசிந்தாமணி

வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு
ஊழ்ந்து தோலுரிப் பனபோல் ஒத்த மற்றவற் றருவி
தாழ்ந்து வீழ்ந்தவை முழவின் ததும்பின் மதுகரம் பாடச்
சூழ்ந்து மாமயி லாடி நாடகம் துளக்குறுத் தனவே.

– திருத்தக்கதேவர்

பொருள் : மலையின்மீது வெண்மேகங்கள் தவழ்ந்து செல்கின்றன. அவ்வாறு மலையைவிட்டு வெண்மேகம் நகர்வது பாம்பு தோலுரிப்பதைப் போன்று இருக்கிறது. மேகம் நகர்ந்துவிட்டபின், அம் மலையானது தோலுரிக்கப்பட்ட பாம்புபோல் இருக்கிறது. அங்கே வீழ்கின்ற அருவியின் ஒலி, மத்தளம்போன்று ஒலிக்கின்றது; வண்டுகள் பாடுகின்றன; மயில்கள் ஆடுகின்றன. ஆகையால், இக்காட்சி ஒரு நாடகம் நடப்பது போன்று இருக்கிறது..

சொற்பொருள்: விண் – வானம்; வரை – மலை; முழவு – மத்தளம்; மதுகரம் – தேன் உண்ணும் வண்டு.

ஆசிரியர் குறிப்பு : திருத்தக்கதேவர் சோழர்குலத்தில் பிறந்தவர். இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர். இவர் பாடிய மற்றொரு நூல் நரி விருத்தம் ஆகும்

நூல் குறிப்பு : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி. இந்நூலின் கதைத் தலைவன் சீவகன். அவன் பெயரை இணைத்துச் சீவகசிந்தாமணி எனப் பெயர் பெற்றது என்பர். இந்நூலுக்கு மணநூல் என்னும் வேறு பெயரும் உண்டு.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

திருத்தக்கதேவர் இயற்றிய வேறு நூல்

அ) கரி விருத்தம் ஆ) நரி விருத்தம் இ) பரி விருத்தம்

### ஆ) குறுவினாக்கள்

1. சீவகசிந்தாமணி – குறிப்பு எழுதுக.
2. திருத்தக்கதேவர் – குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினா

சீவகசிந்தாமணிப் பாடலின் நாடகக் காட்சியை விளக்குக.

நான் கேட்ட நாட்டுப்புறப் பாடல்

# தமிழக விளையாட்டுகள்

விளையாட்டுகள், ஓரினத்தின் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன. விளையாட்டில் சிறுவர், சிறுமியர், இளையோர், முதியோர் என எல்லா நிலையில் உள்ளோரும் ஈடுபடுகின்றனர். உடல்திறன் வளர்க்க, உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த, மனம் மகிழ்ச்சியில் திளைக்க விளையாட்டுகள் துணை புரிகின்றன.

விளையாட்டின் அடிப்படை நோக்கம் போட்டியிடுதலாகும். உடல், உள்ள ஆற்றல்களை வெளியிடவும், எதிர்பாராத தோல்விகளை எதிர்கொள்ளவும் மனப்பான்மை மேம்படவும் விளையாட்டு உதவுகிறது. விளையாட்டு வழியாகப் பட்டறிவும், போராட்டத்திற்கு விடை காணும் திறனும் பெற முடிகிறது.

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா ...
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

என்று பாரதி, விளையாட்டின் மேன்மையறிந்து அதைப் பழக்கமாக்கிக் கொள்ள வலியுறுத்துகிறார்.

விளையாட்டுகள் பால் அடிப்படையிலும், தன்மை அடிப்படையிலும் பல்வேறு வகையினவாக அமைகின்றன. மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலும் அக விளையாட்டுகளாகவும், ஆடவர் விளையாட்டுகள் புற விளையாட்டுகளாகவும் உள்ளன.





பம்பரம், கிளித்தட்டு, உப்பு விளையாட்டு, கள்ளன் காவலன், கோலி, கிட்டிப்புள், காற்றாடி, பந்துவிளையாட்டு, ஒற்றையா இரட்டையா, நீச்சல் முதலியன சிறுவர் விளையாடுவன. பூப்பறித்தல், கரகரவண்டி, தட்டாங்கல், பல்லாங்குழி, ஊஞ்சல், தாயம் என்பன சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள். இன்று சடுகுடு (கபடி), மட்டைப்பந்து, கால்பந்து, கைப்பந்து, எறிபந்து, இறகுப்பந்து, ஓட்டம், தடைதாண்டி ஓட்டம் எனப் பலவகை விளையாட்டுகள் போட்டி ஆட்டங்களாக விளையாடப் படுகின்றன.

பண்டைக் காலத்தில் தமிழர் விளையாடினரா? அதற்கு அவர்களுக்கு நேரமிருந்ததா? என்னவெல்லாம் விளையாடினார்கள்? எப்படி விளையாட்டு வளர்ந்தது என்பதைப்பற்றி அறிந்து கொள்வோமா?

வீர விளையாட்டுகளில் என்றும் பெருவிருப்பமுடையவர் பழந்தமிழர். மற்போரிடல், ஏறுதழுவுதல், வேட்டையாடுதல், மூழ்கி மணல் எடுத்தல் என்பன பழைமை வாய்ந்த ஆடவர் விளையாட்டுகள். முற்காலத்தில் மற்போரில் வல்ல மல்லர், மன்னர்களால் மதிக்கப் பெற்றனர். களத்தில் பல்லாயிரவர் சூழ்ந்து நிற்க, தருக்கும் செருக்கும் நிரம்பிய ஆமூர் மல்லனுக்கும் வீரமும் தீரமும் வாய்ந்த நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீர விளையாட்டைப் புறநானூறு என்னும் சங்க இலக்கிய நூல் வருணிக்கின்றது.

முல்லை நிலத்தில் ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டு நடைபெற்றது. முரசு அதிர, பம்பை முழங்க தொழுவிலிருந்து கொழுமைமிக்க காளைகள் ஒவ்வொன்றாக வெளியே ஓடிவரும். கொம்பிலே உள்ளது காளையின் தெம்பு என்றறிந்த வீரர்கள் காளையின் கொம்பைப் பிடித்து அதன் கொட்டத்தை அடக்குவர். வாலைப் பிடித்தல் தாழ்வு என்பது தமிழர் கொள்கை. பல்லோர் சூழ்ந்து நிற்க கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் எடுத்து வருதல் ஒருவகை வீர விளையாட்டாகக் கருதப்பட்டது.

பண்டைய நாளில் பெண்கள் வட்டாடுதல், கழங்கு, அம்மானை, பந்தாடுதல், ஊஞ்சல், ஓரையாடுதல் எனப் பல விளையாட்டுகளில் இனிதே பொழுது போக்கினார்கள். அரங்கு இழைத்து (கட்டம் வரைந்து) நெல்லிக்காய்களை வைத்து



நகர்த்தி ஆடும் ஆட்டம் வட்டாடுதலாகும். நண்டு, ஆமை ஆகியவற்றைக் கோல்கொண்டு அலைத்து ஓரையாட்டம் ஆடி மகிழ்ந்தனர் அக்கால மகளிர். சிறுவர், சிறுதேர் உருட்டி விளையாடி மகிழ்ந்தனர். சிறுமியர் முத்துகளைக் கிளிஞ்சல்களின் உள்ளே இட்டு ஆட்டிக் களிப்புற்றனர்.

இங்ஙனம், வீர விளையாட்டுகள் ஆடுவதில் விருப்புற்று விளங்கிய தமிழர் விலங்குப்போர் காண்பதிலும் வேட்கையுற்று விளங்கினர்.

அரசர் வாழும் தலைநகரங்களில் யானைப்போர் நடைபெறுவதற்கும், அதனைக் காண்பதற்கும் தனியிடங்கள் இருந்தன. மதுரையில் திருமலை நாயக்கர் கட்டிய மண்டபம் தமுக்கம் மண்டபம் ஆகும். இது யானைப்போர் காண்பதற்கான திடலாகும்.

ஆட்டுக்கிடாய்ப் போர், சேவற்போர், கடுமையான காடைப்போர் என்பனவற்றைத் தமிழர் கண்டு மகிழ்ந்தனர். சோழநாட்டின் பழைய தலைநகரமான உறந்தையூரில் வீரக்கோழிகள் சிறந்திருந்தமையால் கோழியூர் என்னும் பெயரும் அதற்கமைந்தது என்பர்.

காலம் செல்லச்செல்ல அதற்கேற்ப விளையாட்டுகளின் தன்மையும் போக்கும் மாறியுள்ளன. பண்டைய ஏறுதழுவுதல் விளையாட்டு இன்று சல்லிக்கட்டாகவும், மஞ்சுவிரட்டாகவும் அறியப்படுகின்றன. அன்று ஏறுதழுவியவரையே மகளிர் விரும்பி மணந்தனர். இன்று அவ்விளையாட்டானது பணமுடிப்பு, பரிசுப்பொருள்கள் பெறுதல், பலர் சேர்ந்து மாடு விரட்டல் என மாறிவிட்டது.

தமிழரின் தற்காப்புக் கலை விளையாட்டுகளில் ஒன்றாகச் சிலம்பாட்டம் வளர்ந்து வருகிறது. நிலத்திலிருந்து ஓர் ஆளின் நெற்றி உயரம் வரை இருக்கும் தடியைச் சுழற்றி ஆடும் ஆட்டமே சிலம்பாட்டமாகும். குச்சி விளையாட்டு, கம்பு விளையாட்டு எனச் சிற்றூர்களில் அறியப்படும் சிலம்பாட்டம் இன்றும் ஊர் விழாக்களில் நடைபெறுகிறது.

உலக அரங்கில் தமிழரின் வீர விளையாட்டான கபடி (சடுகுடு)க்குத் தனியிடம் கிடைத்துள்ளது. கபடி விளையாடும்போது பாடிக் கொண்டேவிளையாடுவது நம் மூதாதையர் வழக்கம்.

ஆனால், கபடிப் போட்டியில் பாடும் மரபு மறைந்து விட்டது. ஊர்த்திருவிழாக் காலங்களில் வழுக்குமரம் ஏறுதல், உறியடித்தல், மஞ்சள் நீர் ஊற்றுதல் ஆகிய விளையாட்டுகளை இன்றைக்கும் சிற்றூர்களில் காணலாம்.

விளையாட்டு, குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் உள்ள மகிழ்ச்சிக்கும் வழி வகுக்கின்றது. இது, நம் சமுதாயத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் மரபையும் விளக்கவல்லது. தமிழக அரசு, விளையாட்டின் பெருமையும் பயனும் மக்களைச் சென்றடைய விளையாட்டுத்துறையை ஏற்படுத்தி ஊக்கமளித்து வருகிறது. விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் தருவதோடு கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அரசு முன்னுரிமை அளிக்கின்றது. இயந்திரக் காலத்தாலும் புதுமைப் போக்காலும் சமுதாய மாற்றத்தாலும் விளையாட்டுகள் குறைந்துகொண்டும் மாறியும் வருகின்றன. விளையாட்டுகளின் மேன்மைகண்ட நாம், மேன்மேலும் அதை வளர்ப்போம்! எந்நாளும் காப்போம்! புகழில் உயர்ந்து நிற்போம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) விளையாட்டின் அடிப்படை நோக்கம் ______________ ஆகும்.

ஆ) தமிழரின் தற்காப்புக் கலைகளுள் ஒன்று ______________

இ) முல்லை நிலத்தில் ______________ என்னும் வீர விளையாட்டு நடைபெற்றது.

2. பொருத்துக.

| விளையாடுவோர் | – | விளையாட்டு |
|---|---|---|
| அ) ஆடவர் | – | ஓரையாடுதல் |
| ஆ) மகளிர் | – | பூப்பறித்தல் |
| இ) சிறுவர் | – | ஏறு தழுவுதல் |
| ஈ) சிறுமியர் | – | கிட்டிப்புள் |

### ஆ) குறுவினாக்கள்

1. பாரதியார் விளையாட்டின் இன்றியமையாமையைப்பற்றிக் கூறியது யாது?
2. சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள் யாவை?
3. புறநானூறு கூறும் வீர விளையாட்டுகள் யாவை?

### இ) சிறுவினா

பண்டைக் காலத்தில் நடைபெற்ற விலங்குப்போர்பற்றி விளக்குக.

### ஈ) நெடுவினா

தமிழர்களின் விளையாட்டுகள்பற்றிக் கட்டுரை வரைக.

### படைப்பாற்றல் கல்வி

- தமிழர்கள் விளையாட்டுகள்பற்றிச் சிறு குழுவில் கலந்துரையாடுக.
- தமிழர் விளையாட்டுகளைப்பற்றி மனவரைபடம் வரைக.

# நண்பன்

மரியாதைராமன் நீதிபதியாயிருந்த அந்த நகரத்தில் வரதன், சோமு என்ற இருவர் அடுத்தடுத்துப் பல்பொருள் அங்காடி வைத்து நடத்தி வந்தனர். இருவருக்கும் விற்பனை நன்றாகவே நடந்து வந்தது. ஆனாலும் வரதன்மீதும், அவன் வணிகத்தின்மீதும் சோமுவுக்குப் பொறாமையாகவே இருக்கும்.

எப்பொழுதும் வரதனின் கடைக்கு யார் வருகிறார்கள், போகிறார்கள் என்ன நடக்கிறது என்பதையே உற்றுநோக்கிக் கொண்டிருப்பான்.

சில நாளில் வரதனின் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பெருகிற்று. வணிகம் நன்கு சூடுபிடிப்பதைக் கண்டு சோமு மிகுந்த பொறாமை கொண்டான். தன்னுடைய கடையிலும் அவ்வாறு வணிகம் நடைபெறவில்லையே என எண்ணி மேலும் பொறாமைப்பட்டான்.

தான் எதிலும் வரதனைவிட உயர்வாகவே இருக்கவேண்டும் என ஆசைப்படுவான். ஆனால், இப்பொழுதோ அவனைவிடக் குறைவாகவே வணிகம் நடைபெறுவதை நினைத்துப் பெருமூச்சுவிட்டான். அவனது பொறாமையை அதிகமாக்குவது போலத்தான் ஒரு நிகழ்வு நடைபெற்றது.

அரசாங்க வீரன் ஒருவன் வந்து வரதனை மரியாதைராமன் அழைத்துவரச் சொன்னதாக அழைத்துப் போனான்.

உடனே சோமு, “அடேயப்பா நீதிபதி கூப்பிடும் அளவிற்கு இவன் மிகவும் உயர்ந்துவிட்டானா? எவ்வளவு பெரும்பேறு இவனுக்கு” என வியந்தான்.

அடுத்த வாரமும் வரதனை அழைத்துச் செல்ல அரசாங்க வீரன் வந்தான்; அதையும் சோமு கவனித்தான். அவன் மனத்தில், நீதிபதி இந்த வரதனை மட்டும் கூப்பிட்டுப் பேசுகிறாரே, என்னை ஏன் கூப்பிடவில்லை. நானும் அவனைப்போல் ஒரு பெரிய வணிகன்தானே. அவனைவிட, நான் எந்த விதத்தில் தாழ்ந்துவிட்டேன் என எண்ணிக் குமுறினான்.

அதற்கடுத்த நாள் சோமு வரதனை அணுகி, “ஆமாம் மரியாதைராமன் உம்மை அடிக்கடி அழைத்து வரச் சொல்கிறாரே என்ன காரணம்?” என்று கேட்டான்.

அதற்கு வரதன், ‘எனக்கும் அவருக்கும் ஆயிரம் இருக்கும். அதை எல்லாம் உன்னிடம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது’ என்று கூறி அனுப்பினான். அதைக் கேட்டதும் சோமுவுக்கு உலகமே சுழல்வதுபோல இருந்தது.

பொறுக்குமா அவன் மனம்? வரதனிடம் நீதிபதி பேசுகிறார் என்றால், நீதிபதி அவனிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்பது தெரிகிறது. அதைப்போன்ற மதிப்பு தனக்கும் கிடைக்காதா என்று சோமு ஏங்கினான்.

அவன், தன் மனைவியிடம் தனது எண்ணத்தைக் கூறினான். அவளும், “அப்படியா, வரதனுக்கு நீதிபதியிடம் அவ்வளவு செல்வாக்கு இருக்கிறதா? அப்படியானால், ‘அவருடன் நீங்கள் நட்புக்கொண்டால் நமக்கு நல்லது” என்றாள்.

மறுநாள், வரதனின் வீட்டிற்குச் சோமு பரிசுப்பொருளுடன் சென்றான். பின்பு, அதையே பழக்கமாகக் கொண்டான். போகும்போதெல்லாம் பழங்கள் தின்பண்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுசென்றான்.

வரதன், ‘இதெல்லாம் எதற்கு வாங்கி வருகிறாய்’ என்று முதலில் மறுத்தான். பிறகு ஏற்றுக்கொள்ளலானான். தனக்கு வரதனின் தயவு இருப்பதால், அரசாங்கத்தில் எதையும் இனித் தனக்கு வாய்ப்பாகச் செய்துகொள்ள முடியும் என்று எண்ணினான்.

நாள்கள் சென்றன. ஒருநாள் அரசாங்க அலுவலர் ஒருவர் சோமுவின் கடைக்கு வந்து வரியைக் கட்டும்படி கூறினார். அதுபற்றிச் சோமு கவலைப்படவில்லை. செய்தியை வரதனிடம் சொன்னால், ஒருநொடியில் சரி செய்துவிடலாம் என எண்ணினான். எனவே, வரியைக் கட்டாமல் இருந்துவிட்டான்.

ஒரு மாதமாயிற்று. ஓர் அரசாங்க அலுவலர் சோமுவிடம் வந்து நீதிபதி அழைத்துவரச் சொன்னதாகக் கூறி அழைத்துப் போனார். அதற்குள் சோமு, தானே செய்தியைத் தெரிந்துகொண்டு வரதன் நீதிபதியிடம் பேசி இருக்கிறான். அதனால்தான், நீதிபதி நம்மை அழைத்துள்ளார் என எண்ணி மகிழ்ந்தவாறே அரண்மனையை அடைந்தான் சோமு.

நீதிபதி அவனைப் பார்த்ததுமே, “நான் உன்னை ஏன் அழைத்தேன் தெரியுமா? நீ என் தோட்டத்திற்கு ஒரு நாளைக்கு நூறு குடம்வீதம் பத்து நாள் தண்ணீர் இறைத்து ஊற்ற வேண்டும். ஏனென்றால், நீ வரி செலுத்தத் தவறிவிட்டாய். எனவே, நீ இந்தத் தண்டனையை ஏற்றுக்கொண்டு பத்து நாளுக்குள் வரி செலுத்தவேண்டும். இல்லையென்றால், உன் கடையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்” என்று கூறினார்.

மேலும், வரதன் வரி செலுத்தாததன் காரணமாகத்தான் வாரா வாரம் என் அரண்மனையின் ஒரு பகுதியைப் பெருக்கிவந்தான். வரி செலுத்தாமல் தப்பிக்க நினைக்கும் வணிகர்களுக்கு இதுதான் தண்டனை என்றார்.

‘இதுதான் அவனுக்குக் கிடைத்த அரச மரியாதையா? எனக்கும் அது கிடைத்ததே’ என விதியை நொந்துகொண்டு நாள்தோறும் சோமு நீர் இறைத்துத் தோட்டத்திற்கு ஊற்றினான். அதன்பின் சோமு மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதில்லை.

நன்றி : ஓவியர் ராம்கி, மரியாதைராமன் கதைகள்
கதைத்தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டது.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

‘நண்பன்’ என்னும் கதையின் வாயிலாக அறியும் நீதியை விளக்குக.

# சொல்

## பகாப்பதம், பகுபதம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். எல்லாரும் வந்துவிட்டார்களா?

சாந்தா : கண்ணன் இன்று வரவில்லை, ஐயா. நேற்று வயிற்றுவலியால் துடித்துவிட்டான். மருத்துவமனைக்குச் சென்றுவந்தபின் இல்லத்திலேயே ஓய்வில் இருக்கிறான்.

ஆசிரியர் : உடல்நலம் பேணுவதுதான் முதன்மையானது. மற்றவையெல்லாம் அதன்பின்னர்தான். சுவரில்லாமல் சித்திரம் ஏது? நலமாகி வரட்டும்.

மயில்வண்ணன் : முன் வகுப்பில் ஓரெழுத்துத் தனித்து நின்றும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து நின்றும் பொருள் தந்தால், அது சொல் எனப்படும் என்று கூறினீர்கள், ஐயா.

மேலும், அதனைப் பெயர், வினை, இடை, உரியென வகைப் படுத்தினீர்கள். ஐயா, சென்ற வகுப்பில் கணித ஆசிரியர் பகு எண், பகா எண் என எண்களை வகைப்படுத்திக் காட்டினார். அதைப்போலத் தமிழ்ச்சொற்களிலும் உண்டா? எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய் மயில்வண்ணா! கணிதத்தைப் போலவே தமிழிலும் சொற்களைப் பகுபதம், பகாப்பதம் என இருவகையாகப் பிரிக்கலாம்.

அன்பு : பதம் என்றால் என்ன? ஐயா.

ஆசிரியர் : பதம் என்றாலும் சொல் என்றாலும் ஒன்றே. மொழி, கிளவி என்பன அதன் வேறு பெயர்கள். ஓரெழுத்தானது தனித்து நின்று பொருள்தந்தால், அஃது ஓரெழுத்து ஒருமொழி எனப்படும். இவை நாற்பத்திரண்டு உள்ளன. சிலவற்றை இங்குக் கூறுகிறேன். (எ–டு) தை, பை, கை, பூ, தீ, வை, தா, ஈ, பூ .... முதலியன.

எழுத்துகள் பல தொடர்ந்து நின்று பொருள் தந்தால், அஃது எழுத்துத் தொடர்மொழி எனப்படும்.

(எ–டு) நூல், எழுதுகோல், வீடு, மகன், சந்தை, மாடு...முதலியன.

இளவழகி : பகாப்பதம் என்றால் என்ன? ஐயா.

ஆசிரியர் : பகுத்தல் என்றால் பிரித்தல் என்பது பொருள். பகா என்றால் பிரிக்க இயலாதது என்பது பொருள். பிரிக்கவியலாத சொல் பகாப்பதம் எனப்படும். (எ–டு) மண், கல், பொன் இவை பெயர்ப்பகாப்பதங்கள். நட, வா, போ, செய், நில் – இவை வினைப் பகாப்பதங்கள்.

மாணவர் : பகுபதம் பற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : பகுக்க இயலும் சொற்களைப் பகுபதம் என்பர். அவ்வாறு பகுக்கும்போது இரண்டுமுதல் ஆறு உறுப்புகளாக அச்சொல்லைப் பிரிக்கலாம். அவ்வுறுப்புகளின் பெயர்களாவன: பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

மாணவர் : சொற்களைக்கூடப் பிரிக்கலாம் என்பது பற்றியும் அச்சொற்களில் ஆறு உறுப்புகள் உள்ளன என்பது பற்றியும் அறிந்துகொண்டோம், ஐயா. மிக்க நன்றி.

பயிற்சி : 1. பின்வரும் தொடரிலுள்ள பகாப்பதங்களைத் தேர்ந்தெழுதுக.

பாரதி மலர் தூவி இறைவனை வழிபட்டாள்.

2. பின்வரும் தொடரிலுள்ள பகுபதங்களைத் தேர்ந்தெழுதுக.

அன்பரசி பாட்டுப் பாடிப் பரிசு பெற்றாள்.

## மாதிரி வினாக்கள்

### சிறுவினாக்கள்

1. பகுபதம் என்றால் என்ன?
2. பகாப்பதம் என்றால் என்ன?
3. ஓரெழுத்து ஒருமொழிக்குச் சான்றுகள் ஐந்து தருக.
4. பகாப்பதத்தை எத்தனை உறுப்புகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

பின்வரும் பாடலை உரிய ஓசையுடன் படித்துக் காட்டுக.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை;

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொல் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

### இ) எழுதுதல் திறன்

#### உரைநடைப்பகுதியைச் சுருக்கி வரையும் திறன் பெறுதல் – எடுத்துக்காட்டு

மக்களாய்ப் பிறந்தவர் அறிவைத் தேடிப்பெறுதல் வேண்டும். அறிஞர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தேடிச்சென்று அவர்களிடத்திலிருந்து அறிவுச் செல்வத்தைப்பெற்று உயரவேண்டும். அறிஞர்கள் எழுதிய நூல்கள் உலகின் பல்வேறு மொழிகளில் இருக்கலாம்; உலகின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கப்பெறலாம். அப்படிப்பட்ட நூல்களை எல்லாம் வரவழைத்து அவற்றைப் பாதுகாத்துப் படிக்கவேண்டும். அத்தகைய நூல்களின் வாயிலாக அறிவுச் செல்வத்தைப்பெற்று உயரவேண்டும்.

#### உரைநடைப்பகுதியின் சுருக்கம்

மக்களாய்ப் பிறந்தவர்கள் அறிஞர்களைத் தேடிச்சென்று அறிவைப் பெறவேண்டும். பல்வேறு மொழிகளில் அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படித்து அறிவுச்செல்வத்தைப் பெற்று உயரவேண்டும்.

பயிற்சி : கீழுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுக.

உலகில் கோடிக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. இவ்வுயிர்களில் மனிதன் மட்டுமே தனது சிந்தனை ஆற்றலால் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகிறான். மனிதன், தான்பெற்ற அனுபவங்களைப் பிறர்க்கு எடுத்துரைக்கவும், பிறர் பெற்ற அனுபவங்களைத் தான் அறிவதற்கும் கருவியாக விளங்குவது மொழியே.

மனிதன் நாகரிகம் அடைவதற்கு முதற் கருவியாக விளங்கியது மொழியே. மொழியின் சீரிய பயன்பாடு ஒருவரோடு மற்றொருவர் தொடர்புகொள்வதே. இத்தொடர்பு சீராகவும் கருத்து மாறுபாடு ஏற்படாத வண்ணமும் அமையவேண்டும்.

ஈ) செயல் திட்டம் : நீ விரும்பும் விளையாட்டு வீரரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்க.

## மொழித்திறன் பயிற்சி

### அ) சொற்றொடர் வகைகள்

சொற்றொடர் உணர்த்தும் பொருளைக்கொண்டு செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத்தொடர், உணர்ச்சித்தொடர் என வகைப்படுத்தலாம்.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் நடைபெற்றது.– செய்தித்தொடர்.

உன் இருப்பிடம் எங்குள்ளது ? – வினாத்தொடர்

இளமையில் கல். – கட்டளைத்தொடர்

என்னே, இந்த ஓவியத்தின் அழகு! – உணர்ச்சித்தொடர்

கீழுள்ள சொற்றொடரை வகைப்படுத்துக.

1. காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராடினார்.
2. உன்னிடம் திருக்குறள் புத்தகம் இருக்கிறதா?
3. தொல்காப்பியன் வீட்டுக்கு வந்திலன்.
4. என்னே தாஜ்மகாலின் அழகு!
5. வீட்டைத் தூய்மையாக வைத்திரு.

சொற்றொடர் மாற்றங்கள்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்.

(எ–டு) முயன்றால் முடியாதது உண்டோ? இவ்வினாத்தொடரை

முயன்றால் அனைத்தும் முடியும், எனச் செய்தித்தொடராக்கலாம்.

நாள்தோறும் உடற்பயிற்சி செய். – கட்டளைத்தொடர்

நாள்தோறும் உடற்பயிற்சி செய்யவேண்டும். – செய்தித்தொடர்.

பயிற்சி : கீழுள்ள சொற்றொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. மாற்றுத் திறனாளிகளை மதிக்கவேண்டும். (கட்டளைத் தொடராக்குக.)
2. உழைப்பின்றி ஊதியம் இல்லை. (உடன்பாட்டுத் தொடராக்குக.)
3. நான் திருக்குறள் படித்தேன். (வினாத்தொடராக்குக.)
4. அந்தோ, குழந்தை கீழே விழுந்துவிட்டதே. (செய்தித் தொடராக்குக.)
5. உன் கையெழுத்து மிகவும் அழகாக உள்ளது. (உணர்ச்சித் தொடராக்குக.)

ஆ) தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுதல்

மரபுத்தொடர், பழமொழித்தொடர், உவமைத்தொடர் முதலிய தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுவதன்மூலம் கருத்தை எளிதில் விளங்கச் செய்யலாம்.

(எ–டு) தாய், தன் குழந்தையைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தாள்.

அண்ணா தங்குதடையின்றிப் பேசும் ஆற்றல் உடையவர்.

பயிற்சி : கீழுள்ள தொடர்களைச் சொற்றொடரில் அமைத்தெழுதுக.

| | | |
|---|---|---|
| 1. பழக்கவழக்கம் | 3. ஊணுறக்கமின்றி | 5. பேரும்புகழும் |
| 2. தொன்றுதொட்டு | 4. அல்லும்பகலும் | 6. மேடும்பள்ளமும் |

இ) தமிழெண்களை வரிசையில் அமைக்க.

க, ௬, ௯, ௫, எ, ௮, உ, ௪, க0, ௲

ஈ) கட்டுரை எழுதுதல்

உங்கள் ஊர்ப்பொங்கல் திருவிழாவில் நடைபெற்ற விளையாட்டுகள்.

உ) கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

பின்னல், பாட்டு, பீடம், பட்டு, பூட்டு, பையன், பேரன், பௌவம், போர், பெண், புளி, பொன், பூனை, பால், பிட்டு, பனை, பீர்க்கம், பெட்டி, பானை.

## பண்பு

### மதிப்பளித்தல்

சண்முகம் தாத்தா வீடு, எது என்று கேட்டால் சிறு குழந்தையும் அடையாளம் காட்டும். அந்த அளவிற்கு அனைவருக்கும் தெரிந்தவர் அவர். யாரைப் பார்த்தாலும் வாங்க, போங்க என மரியாதையாகத்தான் பேசுவார். ஒரு வயதுடைய குழந்தையோ தொண்ணூறு வயதுடைய முதியவரோ யாராக இருந்தாலும் அவர்களுக்கு மரியாதை தருவார்.

கூடிப்பேசுவோம் :

1. சண்முகம் தாத்தா தன்னைவிட வயதில் இளையவருக்கு மரியாதை கொடுக்கிறார், ஏன்?
2. உங்களைவிட வயதில் சிறியவர்களை, நீங்கள் எவ்வாறு அழைக்கிறீர்கள்?

## வாழ்க்கைத்திறன்

### மன எழுச்சிகளை எதிர்கொள்ளல்

நம்முடைய உணர்வு, எண்ணம் போன்றவற்றை உரிய முறையிலும் உரிய அளவிலும் வெளிப்படுத்த இத்திறன் உதவுகிறது. எல்லா மனவெழுச்சிகளும் நல்லனவும் அல்ல; தீயனவும் அல்ல. அவற்றை எவ்வாறு வெளிப்படுத்துகிறோம் என்பதே இன்றியமையாதது. மட்டைப்பந்து ஆட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. 'அ ' அணி சார்பாக ஆடும் வெற்றிச் செல்வன் நன்றாக ஆடவில்லையென்று அந்த அணியின் தலைவன் தமிழ்ச்செல்வன் குறை சொல்கிறான். இருவருக்குள்ளும் சண்டை ஏற்படுகிறது. சினத்தைக் கட்டுப்படுத்த இயலாத தமிழ்ச்செல்வன், வெற்றிச்செல்வனைஅடிக்கக் கை ஓங்குகிறான். தமிழ்ச்செல்வன் செய்தது சரியா ?

சினம் வந்தால் எவ்வாறு கட்டுப்படுத்துவது ?

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். – குறள், 305

## மதிப்புக்கல்வி

### பரிவு

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெருந்தகையாளருள் மு.வரதராசனாரும் ஒருவராவார். 'வலக்கை தருவது இடக்கைக்குத் தெரியக் கூடாது' என்பது முதுமொழி. அதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் மு.வரதராசனார். ஒருமுறை கல்லூரிக் கட்டணம், விடுதிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் போன்றவற்றைச் செலுத்த இயலாமல் மாணவர் துன்பப்படுவதைக் கண்டார். அவர்களுக்குத் தேவையான அனைத்துக் கட்டணங்களையும் தாமே கட்டினார். அதுமட்டுமன்றித் தமது வீட்டையே விடுதியாக்கி, மாணவர் தங்கிப் படிக்கவும் வழிசெய்தார். இயலாதோர்க்கு இரங்குவதும் உதவுவதும் பரிவு ஆகும்.

இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
– ஔவையார்

## எங்கள் தமிழ்

* இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்
கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் – தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே – வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் – இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு – நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு! (இனிமைத்) *

– பாரதிதாசன்

பொருள்: இனிமை, இன்பம், அமுது, கனிச்சாறெனத் திகட்டும் சுவைமிக்கது எம் தமிழ். இத்தமிழ்ச்சொல்லினும் சுவைமிக்க சொல் வேறெங்கும் இல்லை. அச்சுவை மிக்க மொழியின்மீது தமிழ் மக்களுக்குக் காதல் மிக உண்டு. ஆதலால், தமிழ் எங்கள்

உயிரென்பதாலே எவரையும் வெல்லுந்திறமுண்டு இப்புவி மேலே. எம் தமிழ் எங்கள் விழியாதலால் அதன் ஒளி குன்றினால் நாடே இருளில் மூழ்கிவிடும். எனவே, தமிழிருக்கும்வரையே தமிழ் மக்களும் இருப்பர். ஆதலால், நாளும் அதற்குத் தொண்டுசெய்வோம். நம் வாழ்வு தமிழென்று தோள்தட்டி ஆடுவோம்; அது தரணியில் நாளும் வெற்றிபெறப் பாடுபடுவோம்.

**சொற்பொருள்:** கதி – துணை; பேறு – செல்வம்; நனி – மிகுதி ( மிக்க ); தரம் – தகுதி; புவி – உலகம்.



**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | கனக சுப்புரத்தினம். பாரதியார்மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் என மாற்றி அமைத்துக்கொண்டார். |
| பெற்றோர் | : | கனகசபை – இலக்குமியம்மாள் |
| கல்வி | : | தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். |
| இயற்றியவை | : | குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேர தாண்டவம், இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குறிஞ்சித் திட்டு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம் முதலியன. |
| காலம் | : | 29.04.1891 – 21.04.1964. |
| நூல்குறிப்பு | : | இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   அ) தமிழ் எங்கள் ________.

   ஆ) இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல ________.

2. பொருள் தருக.


   கதி, பேறு, நனி.

### ஆ) குறுவினா

பாரதிதாசன் – குறிப்பு எழுதுக.

### இ) சிறுவினா

தமிழின் சிறப்பைப் பாரதிதாசன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?



## உழவின் சிறப்பு

மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை
ஆழி தரித்தே அருளும்கை – சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி
காக்கும்கை காராளர் கை. *

– கம்பர்

**பொருள் :** உழவ! நின் கைகள், ஏர் பிடித்து உழவு செய்கின்ற கைகளாம்; வேற்படையைக் கையிலே பிடித்துள்ள மன்னர்களும் ஆர்வத்தோடு நோக்குகின்ற கைகளாம்; மோதிரம் அணிந்துள்ள உன் கைகள், வருபவர்க்கு எல்லாம் வரையாது வழங்கும் கைகளாம். ஏழை மக்களின் வறுமைத் துன்பமாகிய பசிப்பிணியைப் போக்கும் கைகளாம்; என்றும் உழும் தொழிலே உலகில் நிலையானது; வேளாண் செய்வோரின் கைகளே என்றென்றும் உயிர்களுக்கு அடைக்கலம் அளிக்கின்ற கைகளாம்.

**சொற்பொருள்:** மேழி – கலப்பை, ஏர்; வேந்தர் – மன்னர்; ஆழி – மோதிரம்; சூழ்விளை – உண்டாகும் வறுமைத் துன்பம்; காராளர் – மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்.



### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | கம்பர் |
| பிறந்த ஊர் | : | தேரழுந்தூர், மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ளது. |
| தந்தை பெயர் | : | ஆதித்தன் |
| போற்றியவர் | : | சடையப்ப வள்ளல் |
| இயற்றிய நூல்கள் | : | கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம். |
| சிறப்பு | : | கல்வியில் பெரியர் கம்பர், கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். |
| காலம் | : | பன்னிரண்டாம் நூற்றாண்டு. |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) வேந்தர் என்பதன் பொருள்

1. அமைச்சர் 2. வள்ளல் 3. மன்னர்

ஆ) ஆழி என்பதன் பொருள்

1. சிலம்பு 2. தோடு 3. மோதிரம்

### ஆ) குறுவினா

கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?

### இ) சிறுவினா

உழவனின் கைகளைக் கம்பர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார்?

# ஓவியக்கலை

எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களைக் கொள்ளைகொண்டு வியக்க வைக்கும் விந்தை மொழி ஓவியம். காண்பவரைக் கவர்ந்திழுத்து உள்ளங்களைத் தன்வயப்படுத்தும் உயர்ந்தகலை ஓவியக்கலை. ஓவியம் பேசும் செய்திகள் பல; உணர்த்தும் கருத்துகளோ மிகப்பல.

தமிழகத்தில் தொன்றுதொட்டு விளங்கிவந்த பாரம்பரியக் கலைகள் பல. அவற்றுள் பல, காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு அழிந்துபோயின. எஞ்சிய சில, தமிழர்களின் கலைத்திறன்களையும் கலை நுட்ப அறிவையும் உலகோர்க்கு எடுத்துக்காட்டும் ஒளி விளக்குகளாகத் திகழ்கின்றன. தமிழர் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் ஓவியக்கலை முன்னணியில் நிற்கிறது.

பழங்கால மக்கள் தம் உள்ளக் கருத்துகளைப் புலப்படுத்த பாறைகளிலும் குகைகளிலும் கீறி எழுதினர். தம் எண்ணத்தைச் சித்திரம் வரைந்து வெளிப்படுத்தினர். இவற்றைத் தொல்பொருள் ஆய்வுகளாலும் இலக்கியச் சான்றுகளாலும் அறிந்துகொள்ள முடிகிறது.

கி.மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் இனக்குழுக்களாக வாழ்ந்தனர். தாம் தங்கிய மலைக்குகைகளிலும் பாறைகளிலும் கோட்டோவியங்கள் வரைந்தனர். அதனைத் தற்காலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கண்டுபிடித்து வெளிக் கொணர்ந்துள்ளனர்.

தமிழகத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் ( மான், போர் செய்தல், விலங்கு வேட்டை ஆகியனவற்றைக் குறிக்கும்) குகைஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன. தாம் வரைந்த ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்றே வழங்கியுள்ளனர். தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் இருந்ததனைப் பரிபாடல், குறுந்தொகை செய்யுள் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. சீனமொழியிலும் எழுத்துகள் உருவங்களாக உள்ளன. எனவே, பழங்கால மக்கள் சித்திர எழுத்துகளால் கருத்துகளைப் புலப்படுத்தினர். அவையே நாளடைவில் மொழிக்குறியீடுகளாக வளர்ந்துள்ளன.

ஓவியம் வரைதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியன அடிப்படையாகும். இவ்வாறு வரையப்படுபவை கோட்டோவியங்கள் எனப்படும். அவ்வரைகோடுகள்மேல் சிவப்பு, கருப்பு, மஞ்சள், நீலம் முதலிய வண்ணங்கள் பூச, அழகிய ஓவியங்களாக உருவெடுக்கும்.



நடுகல் சிற்பங்கள்

தொல்காப்பியம் நடுகல் வணக்கம் பற்றிக் கூறுகிறது. நடுகல்லில் போரில் வீரமரணம் எய்திய வீரனது உருவம், பெயர், பெருமைக்குரிய செயல் முதலியனவற்றைப் பொறிக்கும் பழக்கம் இருந்தது. சிற்பி, தான் செதுக்கவிருக்கும் உருவத்தை முதலில் வரைந்து பார்த்த பின்னரே, அவ்வோவியத்தைக்கொண்டு கல்லில் உருவம் அமைத்தல் மரபு. இதன்படி ஆராய்ந்து நோக்கினால் செதுக்குவதற்கு ஓவியம் துணை புரிந்ததையும், ஓவியம் முன்னரே வளர்ந்திருந்ததையும் உணர முடிகின்றது.

ஓவியக்கலை ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி எனப் பல பெயர்களால் வழங்கப்பெற்றது. ஓவியக் கலைஞர் ஓவியர், ஓவியப்புலவன், கண்ணுள் வினைஞன், சித்திரகாரர், வித்தக வினைஞன், வித்தகர், கிளவி வல்லோன் என அழைக்கப்பட்டார். ஓவியர் எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு எழுதுவோராதலின் கண்ணுள் வினைஞர் எனப் புகழப்பெற்றார். நச்சினார்க்கினியர் தம் உரையில் ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' என இலக்கணம் வகுத்திருப்பது எத்துணைப் பொருத்தம் பார்த்தீர்களா? ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்ற ஆசிரியர் ஓவியப் புலவன் எனப் போற்றப்பட்டார். ஓவியக் கலைஞர் குழுவை ஓவிய மாக்கள் என்றழைத்தனர். ஆண் ஓவியர் சித்திராங்கதன் எனவும், பெண் ஓவியர் சித்திரசேனா எனவும் பெயர் பெற்றிருந்தனர்.



தஞ்சைப் பெரியகோவில் சுவரோவியங்கள்

ஆடல் மகள் மாதவி, 'ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்' எனச் சிலம்பு பகர்கிறது. இதிலிருந்து ஓவியக் கலைக்கெனத் தனி இலக்கண நூல்கள் இருந்தன என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

### வரைகருவிகள்

பல்வகைக் காட்சிகள், உருவங்கள் வரைய ஓவியர் அக்காலத்தில் பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். வண்ணந்தீட்டும் கோல் தூரிகை, துகிலிகை, வட்டிகை எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு வட்டிகைப் பலகை எனப் பெயரிட்டிருந்தனர்.

### வரைவிடங்கள்

அக்காலத்தில் ஓவியங்கள் வரைவதற்கென்று தனியே இடங்கள் அமைந் திருந்தன. இங்ஙனம் ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம் என வழங்கப்பட்டன. இறை நடனம் புரிவதற்கே சித்திர சபை ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். இதிலிருந்து ஓவியக்கலையில் தமிழர்க்கு இருந்த ஈடுபாட்டையும், கண்ணுகர் விருப்ப உணர்வையும், மக்களிடம் அதற்கிருந்த செல்வாக்கையும் மேன்மையையும் அறியலாம்.

அரசர் வாழும் அரண்மனை அந்தப்புரங்கள், செல்வர் வாழும் வளமனைகள், மாளிகைகள், ஆடலரங்குகள், கோவில் மண்டபங்கள், பொதுமன்றங்கள் முதலிய இடங்களில் கட்டடச் சுவர்கள், மேற்கூரைகள், தூண்களில் ஓவியங்களை வரைந்தனர். ஓவியத்தால் மக்கள் வீடுகளை அலங்கரித்தனர்.

வளங்கொழித்த மக்களின் இல்லங்களில் அழகிய ஓவியங்கள் பல தீட்டப்பட்டிருந்தன. புறநானூற்றில், ஓவத்தனைய இடனுடை வனப்பு என வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார். சுடுமண் சுவர்மீது வெண்சுதை (சுண்ணாம்பு) பூசிச் செஞ்சாந்துகொண்டு ஓவியங்கள் தீட்டினர்.

அதுமட்டுமன்றி மரப்பலகை, துணிச்சீலை, திரைச்சீலைகளில் ஓவியம் எழுதினர். நாடகமேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கினவற்றை 'ஓவிய எழினி' கொண்டு அறிகிறோம். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் என்னும் பழமொழி இவ்வாறுதான் உருவாயிற்று.

வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதைப் புனையா ஓவியம் என்றழைத்தனர். இன்றும், இது மென்கோட்டு ஓவியமாக நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இனி, எவ்வெவற்றை ஓவியங்களாக்கிக் கண்டு மகிழ்ந்தனர் என்பதைக் காண்போமா?

இயற்கைக் காட்சிகள், கற்பனைக் காட்சிகள், சமுதாய வாழ்க்கை முறைமை, இதிகாச புராணக்கதைகள் என்பன ஓவியத்திற்குரிய கருப்பொருள்களாயின. ஓவியர்கள் சோதிடக்கலை, வானநூல், கதைகள் முதலியவற்றைக் கற்றுணர்ந்து



செவ்வனே சித்திரம் தீட்டினர். ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும், விண்மீன்களையும் வரைந்த செய்தி, நெடுநல்வாடை என்னும் சங்க நூல் தரும் அரிய செய்தியாகும். ஓவியங்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆகிய மனித இயல்புகளையும் வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை முதலிய மெய்ப்பாடுகளையும் உத்தமம், மத்திமம், அதமம் மற்றும் தசதாளம், நவதாளம், பஞ்சதாளம் முதலிய அளவுகளையும் வலியுறுத்துவது தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளாக விளங்குகின்றன.

இங்ஙனம், சங்க காலத்தில் செழித்திருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்துபோகத் தொடங்கியது. மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் பல்லவப் பேரரசர்களாவர்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன், கலையார்வம் மிக்கவன். மகேந்திரவர்மன் காலத்தில் ஓவியக்கலை எழுச்சியுற்று உயர்நிலையை எட்டியது. இம்மன்னனே சிறந்த ஓவியனாகப் புகழ்பெற்றிருந்தான். கல்வெட்டுகள் இம்மன்னனைச் சித்திரகாரப்புலி எனப் புகழ்கின்றன. தட்சிணசித்திரம் என்னும் ஓவிய நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான். இச்செய்தியிலிருந்து மகேந்திரவர்மனின் ஓவியக்கலையின்மீது கொண்டிருந்த பற்றினையும் ஆர்வத்தையும் உள்ளக் கிடக்கையையும் ஊகித்தறியலாம்.

### சித்தன்னவாசல்

மகேந்திரவர்மன் காலத்திற்குப் பின்னர்த் தமிழகத்தில் ஆட்சி புரிந்த அரசர்கள் ஓவியக்கலையை வளர்த்து வந்துள்ளார்கள். பல்லவர் கால ஓவியங்கள், பனமலை, திருமலை, மாமல்லபுரக் குகைக்கோவில், மாமண்டூர், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலிய இடங்களில் ஓவியங்கள் சிதைந்த தோற்றத்தோடு காணப்படுகின்றன. பார்வதி உருவம், கின்னரர், கின்னரி, கந்தர்வர் ஓவியங்கள் காண்போரை மயக்குவன. திருநந்திக்கரையில் சேரர் கால ஓவியங்கள்

கிடைத்துள்ளன. புதுக்கோட்டைக்கு அருகே சித்தன்னவாசல் என்னும் குகைக்கோவில் ஓவியங்கள் ஓவியக் கருவூலங்களாக வைத்துப் போற்றத்தகுந்தன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் அவனிப சேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில், மதுரை ஆசிரியர் இளம்கௌதமன் இவ்வோவியங்களை வரைந்தார் என்று கல்வெட்டுச் செய்தி அறிவிக்கின்றது. அங்குள்ள தாமரைத்தடாகம், ஆடல் அணங்குகள், அரசன், அரசி ஓவியங்கள் நம் கண்ணைக் கவர்வன.

சித்தன்னவாசல் ஓவியம்



சோழர்கால வனப்புமிக்க ஓவியங்களைத் தஞ்சைப் பெரியகோவிலில் கண்டு மகிழலாம். அதிலுள்ள கவின்மிகு கயிலைக்காட்சி கண்களுக்கு விருந்தளிப்பன. சேரமான், சுந்தரர் கயிலைசெல்லும் காட்சி, சிவபெருமான் முப்புரம் எரித்த காட்சி, சுந்தரரைத் தடுத்தாளும் கோலம், நாட்டிய மகளிர், மாமன்னன் இராசராசன், கருவூர்த்தேவர் முதலிய ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவன.

திருவரங்கம், திருப்பதி, தில்லை, திருவாரூர், குடந்தை, மதுரை, காஞ்சி முதலிய பல இடங்களில் விசயநகர, நாயக்க மன்னர்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி பெற்றது. ஓலைகளிலும், கண்ணாடிகளிலும், தந்தங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. வண்ணங்களின் வனப்புக்கேற்ப இரத்தினங்கள் பதிக்கப்பெற்றன. ஓவியர்களின் கைவண்ணங்களை இன்றும் கோவில் கூரைகளிலும் சுவர்களிலும் மரச்சிற்பங்களிலும் காணலாம்.

ஈராயிரம் ஆண்டுகளாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு, வளர்ந்து வரும் கலையாக ஓவியக்கலை உள்ளது. தமிழர் ஓவிய மரபு, காலம் பல கடந்து எதிர்காலத் தலைமுறையினரான உங்கள் கையிலும் தவழ்ந்து கொண்டிருக்கின்றது என்று நம்பலாம்தானே! என்ன, எங்கே கிளம்பிவிட்டீர்கள்! தூரிகை கொண்டு ஓவியம் வரைவதற்குத்தானே ?

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) சங்ககாலத்தில் ஓவியங்களை ________________ என அழைத்தனர்.

ஆ) தொல்காப்பியம் ________________ வணக்கம் பற்றிக் கூறுகிறது.

இ) இறை நடனம் புரிவதற்கு ஏற்படுத்தப்பட்டது ________________ சபை.

ஈ) கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதை ________________ என்றழைத்தனர்.

உ) சித்திரகாரப் புலி என அழைக்கப்பட்டவன் ________________.

### ஆ) குறுவினாக்கள்

1. ஓவியக்கலை எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டது ?
2. கோட்டோவியங்கள் என்றால் என்ன ?
3. வரைகருவிகள் எவையெவை ?
4. சோழர்கால ஓவியங்கள் எங்குக் காணப்படுகின்றன ?
5. நாயக்கர் கால ஓவியங்கள் எங்கெங்கு உள்ளன ?

### இ) சிறுவினாக்கள்

1. பழங்கால ஓவியங்களாகக் கண்டெடுக்கப்பட்டவை எவை ?
2. ஓவிய வரைவிடங்களாகத் திகழ்ந்தவை எவை ?
3. தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளை எவ்வாறு கண்டறிவது ?

### ஈ) நெடுவினாக்கள்

1. சித்தன்னவாசல் ஓவியங்களைப் பற்றி விவரிக்க.
2. அன்றுதொட்டு இன்றுவரை தமிழர்கள் ஓவியக்கலையில் ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

### படைப்பாற்றல் கல்வி

- உரைநடைப் பகுதியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களாக நீ கருதுவனவற்றை அடிக்கோடிடுக.
- அருஞ்சொற்களுக்கு அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிக.
- பாடப்பொருளைச் சிறுகுழுவில் கலந்துரையாடி மனவரைபடம் வரைக.

# கொடைக்குணம்

( கர்ண மகாராசாவின் கொடைத்திறனைப்பற்றிப் பல வாய்மொழிப் புராண மரபுக் கதைகள் உள்ளன. அத்தகைய கதைகளில் ஒன்றை இப்போது உங்களுக்குக் கூறப்போகிறேன் என்று பாட்டி கதையைக் கூறத் தொடங்கினார். பாட்டியைச் சுற்றி உட்கார்ந்திருந்த குழந்தைகள் ஆர்வத்துடன் கதை கேட்க ஆயத்தமாயினர். கர்ண மகாராசாவின் கொடைத்திறம் பற்றிய செய்திகள் புதிதுபுதிதாக நாளும் வந்துகொண்டே இருக்கின்றன. )

கர்ண மகாராசாவின் புகழ் பரவிக்கொண்டே இருந்தது. கர்ண மகாராசா ஒரு சிற்றரசன்தான். அவனுக்கு அந்த நாட்டைக் கொடையாகக் கொடுத்தான் துரியோதனன். ஒருநாள் அமைச்சன் ஒருவன் துரியோதனனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, "மகாபிரபுவே, நீங்கள்தான் இந்த நாட்டின் சக்கரவர்த்தி. தங்களிடம் எல்லாவிதமான அதிகாரங்களும், செல்வமும், படையும் உள்ளன. தாங்கள் தானமாகக் கொடுத்த அங்கதேசம் என்ற சிறிய நாட்டைத்தான் கர்ணன் ஆளுகிறான். கர்ணனும் உங்கள் ஆளுகைக்கு உட்பட்டவன்தான், ஆனால், இந்த நாட்டில் இப்போது, உங்களுக்கு இல்லாத புகழ் கர்ணனுக்குத்தான் இருக்கிறது, அது எப்படி நியாயமாகும்?" என்று குதர்க்கமாக வினவினான் அமைச்சன்.

துரியோதனனுக்கு அமைச்சன் கூறுவது முறையாகவே தோன்றியது. எனவே, துரியோதனன் மந்திரியிடம், "நானும், கர்ணன் மாதிரி புகழ் பெற நீர்தான் யோசனை கூற வேண்டும்" என்று கூறினான். அமைச்சன், "மகாபிரபுவே, நாளை முதல் தாங்களும் கர்ணனைப்போல் கொடை கொடுக்கத் தொடங்கிவிடுங்கள். உங்களுக்குக் கொடைவள்ளல் என்ற புகழ் கிடைத்துவிடும்' என்று கூறினான். துரியோதனன் "சரி, அப்படியே செய்கிறேன்". என்றான். உடனே அமைச்சன், "மகாபிரபுவே, இப்படி ஓர் அருமையான யோசனை கூறிய எனக்குக் கொடையாக ஏதாவது கொடுக்கக் கூடாதா?" என்று கேட்டான்.

அதற்குத் துரியோதனன், "இப்படி யோசனை சொல்வதற்காகத்தான் உமக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கிறேனே, தனியே வேறு கேட்கிறீரோ! முதலில் இடத்தைக் காலி பண்ணும்" என்றான் துரியோதனன். அமைச்சன் அப்போதுதான் நினைத்தான். கொடை கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும். பிறவிக்குணம் இல்லாமல் கொடை கொடுக்கிற மனம் தானாக வாராது என்று நினைத்துக் கொண்டான்.

மறுநாள், "துரியோதன மகாராசாவும் கொடை கொடுப்பார்" என்று அமைச்சன் அறிவித்தான். அந்த அறிவிப்பைக் கேள்விப்பட்ட கண்ணன் தள்ளாத முதியவர்போல், தன் உருவத்தை மாற்றிக்கொண்டு துரியோதனனிடம் வந்து, "ஐயா, எனக்கு ஒரு பொருள் தானமாக வேண்டும்" என்று கேட்டார். துரியோதனன் பெரியவரே, 'உமக்கு என்ன வேண்டும் என்று கேளும் தருகிறேன்' என்றார். அதற்கு அந்தப் பெரியவர் வேடத்தில்

வந்த கண்ணன், “இன்னும் ஒரு மாதம் கழித்து இதே நாளில் வந்து, நான் விரும்பும் பொருளைக் கேட்டுப் பெற்றுக்கொள்கிறேன்” என்றார். துரியோதனன், ‘சரி எப்போது வேண்டுமானாலும், என்ன பொருள் வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் என்று வாக்குக் கொடுத்தான். துரியோதனனிடம் வாக்குப் பெற்றுக்கொண்டு சென்ற கண்ணன், அன்றுமாலையே, மழைக்கடவுளை அழைத்து, “நாளைமுதல் ஒரு மாதக்காலத்திற்கு அடைமழை பெய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார். அன்றுமுதல் ஒரு மாதக்காலமாகத் துரியோதனனின் நாடெங்கும் அடைமழை பெய்தது. கண்ணன் ஒரு மாத காலம் கழித்து முதியவர்போல வேடமிட்டுத் துரியோதனனைக் காண வந்தார். துரியோதனன், அந்த முதியவரைப் பார்த்து, ‘யார் நீ?’ மழையில் நனைந்து கொண்டு, இந்த நேரத்தில் என்றான்.

“நான் உங்களை முன்பே சந்தித்துள்ளேன்; எனக்குக் கொடையாக ஒரு பொருளைத் தரவேண்டும் என்று ஒருமாதத்திற்கு முன்பு கேட்டிருந்தேன். தாங்களும் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்துள்ளீர்கள், நினைவிருக்கிறதா?” என்று கேட்டார்.

துரியோதனனுக்கு அப்போதுதான், அந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது. அமைச்சனும் உடன் இருந்தான். அவனும், ‘ஆமாம் மகாராசா. தாங்கள் வாக்குக் கொடுத்தீர்கள்’ என்று நினைவூட்டினான். “அதற்கென்ன இப்போது? என்ன வேண்டுமோ கேட்டுப் பெற்றுக்கொண்டு செல்லும்” என்று மிகவும் அலட்சியமாகக் கூறினான். முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன், “மகாபிரபுவே, கொடைவள்ளலே, எனக்கு இப்போதே ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகுவேண்டும். என் மகளின் திருமண நிகழ்ச்சிக்கு அடுப்பெரிக்க காய்ந்த விறகு தேவையாக இருக்கிறது” என்றான்.

துரியோதனன் சினத்துடன், முதியவர் வேடத்தில் இருக்கும் கண்ணனைப் பார்த்து, “உமக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா! இங்கு ஒரு மாதகாலமாக மழை பெய்து கொண்டே இருக்கிறது. இங்கு, நாங்கள் அரண்மனை பயன்பாட்டிற்கே விறகு இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் நீர் வந்து காய்ந்த விறகு கேட்கிறீரே! பொன் பொருள் ஏதாவது தேவை என்றால் கேளும் தருகிறேன். விறகு மட்டும் கேட்காதீர்” என்று கூறினான். முதியவர் தயங்கியபடியே “ கொடைவள்ளலே, தாங்கள் எனக்குக் கொடுத்த வாக்கு என்னாவது?” என்று கேட்டார். முதியவர் கூறியதைக் கேட்ட துரியோதனன் மீண்டும் சினத்துடன் “வாக்காவது போக்காவது இடத்தைக் காலி பண்ணும்” என்றான். அமைச்சன், “நம் நாட்டில் கர்ணன் என்று ஒரு வள்ளல் இருக்கிறான்; அவனிடம் போய்க் கேள், தருவான் உமக்கு” என்றான். அமைச்சன் சொன்னதைக் கேட்ட முதியவர், “நீர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கர்ண மகாராசாவைத் தான் பார்க்கப் போகிறேன்” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு நேரே, கர்ண மகாராசாவின் அரண்மனைக்குச் சென்றார், முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன்.

முதியவர், ஒருவர் தன்முன் மழையில் நனைந்துகொண்டு வந்து நிற்பதைப் பார்த்த கர்ண மகாராசா, முதலில் முதியவருக்கு உடுத்திக்கொள்ள மாற்று உடையும் தலையைத் துவட்டிக்கொள்ள துண்டும் கொடுக்க உத்தரவிட்டார். முதியவரும் அதன்படியே உலர்ந்த ஆடைகளை உடுத்திக்கொண்டார். அவருக்குக் குளிருக்கு இதமாகப் பருகுவதற்குச்

சூடாகப் பாலும் கொடுக்கப்பட்டது. தன்னை இளைப்பாற்றிக்கொண்ட பெரியவர்:

"ஐயா, கர்ண மகாராசாவே நாளைக்குக் காலையில் என் மகளுக்குத் திருமணம் நடைபெற உள்ளது. அதற்குச் சமையல் செய்ய ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகு வேண்டும்; காய்ந்த விறகைக் கொடையாகக் கேட்கவே நான் இங்கு வந்துள்ளேன்" என்றார். கர்ண மகாராசா, தன் அரண்மனைப் பணியாளர்களை அழைத்து, 'நம் நாட்டுக் காட்டில் அரண்மனை ஒன்றுள்ளது. அது முழுவதும் பாழடைந்திருக்கிறது. அந்த அரண்மனையில் நிறைய தூண்களும் உத்திரங்களும் உள்ளன. அவை மழையில் நனையாமல் காய்ந்த நிலையில் உள்ளன. நீங்கள் ஒரு வண்டி நிறைய அவற்றை எடுத்து ஏற்றி, அவை நனையாமல் இருக்க அவற்றின்மேல் ஓலைகளைக் கூரைபோல் வேய்ந்து, பெரியவரின் ஊருக்கு அனுப்பி வையுங்கள்' என்று ஆணையிட்டார்.

கர்ண மகாராசா சொன்னபடியே பணியாளர்களும் காட்டு அரண்மனையில் உள்ள தூண்களையும் உத்திரங்களையும் பெயர்த்து எடுத்து, ஒரு வண்டியில் ஏற்றி, அவை நனையாமல் இருக்க பனை ஓலையால் கூரையும் வேய்ந்து வண்டியைத் துரியோதனனின் மாளிகை இருக்கும் தெருவழியே ஓட்டிச் சென்றனர்.

"பெரியவரே காய்ந்த விறகு கிடைத்துவிட்டது போலிருக்கே" என்று அமைச்சன் கேட்க, முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன், 'ஆமாம், காய்ந்த விறகு கிடைத்துவிட்டது. கொடைவள்ளல் கர்ண மகாராசாதான் கொடுத்தார்' என்று உரக்கக் கூறினார். கொடைவள்ளல் என்ற சொல்லைப் பெரியவர் வேண்டுமென்றே அழுத்தி உச்சரித்துக் கூறினார்.

அமைச்சனுக்கு அப்போதுதான், கொடைகொடுக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது; கொடை உள்ளமும் கூர்த்த அறிவும் வேண்டும் என்ற உண்மை புரிந்தது. சிரித்துக் கொண்டே நடந்தார் முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன். "இப்போது புரிகிறதா குழந்தைகளே, கர்ண மகாராசாவின் கொடைத்திறம்!" என்று கூறிக் கதையை முடித்தார் பாட்டி.

நன்றி : கழனியூரனின் 'தாத்தா பாட்டி சொன்ன கதைகள்' என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது.

## மாதிரி வினா

### கட்டுரை வினா

கொடைக்குணம் கதையைச் சுருக்கி எழுதுக.

# அணியிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், அனைவரும் உட்காருங்கள். எல்லாரும் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடினீர்களா?

முத்தழகு : ஆம், ஐயா. பொங்கலன்று வீட்டைத் தூய்மை செய்து, நாங்களும் புத்தாடை புனைந்து, பொங்கலிட்டுக் கதிரவனை வணங்கி வழிபட்டு விருந்துண்டோம்.

ஆசிரியர் : எவ்வாறு நம்மை நாம் புத்தாடைகளாலும் அணிகலன்களாலும் அழகு செய்து கொள்கிறோமோ, அதுபோலப் புலவர்களும் தாங்கள் எழுதும் பாடல்களைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவர் என்பதை அறிந்திருக்கிறீர்களா?

பூவிழி : அப்படியா ஐயா! பாடல்களுக்கு அணிகளா? அதுபற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஆம். அணி என்றால் அழகு என்பது பொருள். புலவர்கள் செய்யுளை அழகுபடுத்துவதை, 'அணி' என்றே வழங்கினர். அவ்வாறான அணிகள் இயல்பு நவிற்சி', ' உயர்வு நவிற்சி முதலியன.

செழியன் : இயல்பு நவிற்சியணி என்றால் என்ன? ஐயா.

ஆசிரியர் : ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறு கூறுவது இயல்பு நவிற்சியணி எனப்படும்.

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவார்.

இப்பாடலில் தயிர் கடையும் ஆய மங்கையரின் தன்மை உள்ளவாறே அழகுபடச் சொல்லப்படுவதைக் காணலாம்.

மங்கை : உயர்வுநவிற்சியணி பற்றியும் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஒருபொருளின் தன்மையை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி எனப்படும். உயரமான மலையை 'விண்ணைத் தொடும் மலை என வருணித்தல்; உயரமான வைக்கோல் போரை 'வானை முட்டும் வைக்கோல்போர்' என உயர்த்திக் கூறுதல்.

மாணவர் : நன்றி, ஐயா.

பயிற்சி

கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள அணிகளை எடுத்தெழுதுக.

1. தமிழ்மொழி இனிமையானது. ____________________
2. வான்புகழ்கொண்ட தமிழ்நாடு ____________________
3. தென்னை மரம் உயரமானது. ____________________

## மாதிரி வினாக்கள்

### அ) குறுவினாக்கள்

1. அணி என்றால் என்ன?
2. இயல்பு நவிற்சியணி என்றால் என்ன? விளக்கம் தருக.
3. உயர்வு நவிற்சியணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

நீ கண்டுகளித்த இன்பச் சுற்றுலாவைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

**ஆ) எழுதுதல் திறன் :** ஒரு கதையை உரையாடலாகவோ செய்தியாகவோ நாடகமாகவோ மாற்றி எழுதுதல்.

ஒரு நிகழ்வைக் கதையாகவோ நாடகமாகவோ மாற்றி எழுதுவதால் மொழியாற்றலும் படைப்பாற்றலும் பெருகும்.

(எ–டு) நரியின் சாயம் வெளுத்த கதை உனக்குத் தெரிந்திருக்கும். இந்தக் கதையை உரையாடலாக எழுதுவோம்.

**சிங்கம்** : யார் நீ, உன்னை இதற்குமுன் பார்த்ததில்லையே ?

**நரி** : நான், இறைவனால் அனுப்பப்பட்ட இந்தக் காட்டின் அரசன்.

**சிங்கம்** : நீ சொல்வது உண்மைதானா ?

**நரி** : ஆமாம், உங்களை யெல்லாம் ஆளவந்திருக்கும் அரசன். என் ஆளுமைக்கு நீங்கள் எல்லாம் அடிபணியவேண்டும்.

**சிங்கம்** : அப்படியே செய்கிறேன்.

**நரி** : எனக்குப் பசிக்கிறது. உணவுக்கு உடனே ஏற்பாடு செய்.

**சிங்கம்** : இப்பொழுதே செய்கிறேன்.

நாள்கள் நகர்ந்தன. ஒருநாள் மழைபெய்த பொழுது காட்டிலிருந்த நரிகள் ஊளையிட்டன.

அதைக்கேட்ட நரியரசன், தன் இனப்பற்று மற்றும் பழக்கம் காரணமாகத் தானும் ஊளையிடத் தொடங்கியது. நரி ஊளையிட்டதைக் கேட்ட சிங்கம், நரியை அடையாளங் கண்டு துரத்தியது. நரி, தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடி மறைந்தது.

பயிற்சி : தமிழுக்குத் தலைகொடுத்த குமணன் கதையை உங்கள் ஆசிரியரிடம் கேட்டறிந்து, அதனை உரையாடல் வடிவில் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) நிறுத்தக்குறிகள்

செய்யுளையோ உரைநடையையோ படிக்கும்போது, பொருளைத் தெளிவாகப் புரிந்து படிக்கவும், உரிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் பயன்படுத்துவது நிறுத்தக் குறிகளாகும். நிறுத்தக்குறிகளுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**1. முற்றுப்புள்ளி ( . )**

ஒரு தொடர் முற்றுப்பெற்றதைக் குறிக்க முற்றுப்புள்ளி இடவேண்டும்.

(எ–டு) கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்றது.

**2. காற்புள்ளி ( , )**

பல பொருள்களைத் தொடர்ந்து சொல்லும்போது, ஒவ்வொன்றின் பின்னும் காற்புள்ளி இடவேண்டும். (கடைசிச் சொல்லுக்குப்பின் காற்புள்ளி தேவையில்லை)

(எ–டு) மா, பலா, வாழை முக்கனிகள்.

**3. அரைப்புள்ளி ( ; )**

ஓர் எழுவாய், பல பயனிலைகளைக் ( வினைமுற்றுகளை ) கொண்டு முடியும்பொழுது, ஒவ்வொரு பயனிலைக்குப் பின்னரும் அரைப்புள்ளி இடவேண்டும்.

(எ–டு) சிந்தனைச்செல்வன் நன்றாகப் படித்தான்; முதல் மதிப்பெண் பெற்றான்; பரிசு பெற்றான்.

**4. வினாக்குறி ( ? )**

ஒரு வினாத்தொடரின் இறுதியில் வினாக்குறி இடவேண்டும்.

(எ–டு) பொற்கொடி பாடம் படித்துவிட்டாயா ?

**5. உணர்ச்சிக் குறி ( ! )**

ஒரு செய்தியை உணர்ச்சியாகக் கூறும்போது உணர்ச்சிக் குறியிடவேண்டும்.

(எ–டு) என்னே, இப்பூவின் மணம்!

**6. ஒற்றை மேற்கோள் குறி ('...')**

ஓர் எழுத்து அல்லது சொல் அல்லது சொற்றொடரையேனும் தனியே குறிக்கும் இடத்திலும், ஒரு சொற்றொடரில் நூலின் பெயர், பழமொழி முதலியன வருமிடத்திலும் ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும். எழில் என்றால் அழகு என்பது பொருள்.

பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' மிகச் சிறந்த படைப்பு. 'சுத்தம் சோறு போடும்' என்பது பழமொழி. வண்ணமிடும்போதும், தடித்த எழுத்துகளில் எழுதும்போதும், அடிக்கோடு இடும்போதும் இக்குறி இடத் தேவையில்லை.

### 7. இரட்டை மேற்கோள் குறி ( "..." ) :

ஒருவர் கூறியதை நேர்க்கூற்றாகக் கூறும்போதும், ஒரு தொடரை மேற்கோளாகக் கூறும்போதும் இரட்டை மேற்கோள் குறியிடவேண்டும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றார் ஔவையார்.

### பயிற்சி

**பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.**

1. உன் பெயர் என்ன
2. என்னே இமயமலையின் உயரம்
3. இயல் இசை நாடகம் முத்தமிழாகும்
4. எழிலி என்னும் சொல் மேகம் என்னும் பொருளில் வரும்
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது பழமொழி
6. இயல் இசை நாடகம் எனத் தமிழ் மூவகைப்படும்
7. திருக்குறளை இயற்றியவர் யார்
8 தமிழ்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி
9 உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ
10 அந்தோ இஃது என்ன கொடுமை

### ஆ) தமிழெண்களை நினைவு கூர்க.

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | ____ | 6 | ____ |
| 2 | ____ | 7 | ____ |
| 3 | ____ | 8 | ____ |
| 4 | ____ | 9 | ____ |
| 5 | ____ | 10 | ____ |

### இ) கட்டுரை எழுதுதல் : சுற்றுப்புறத் தூய்மை

### ஈ) அகரவரிசையில் அமைத்தல்

**கீழுள்ள சொற்களை அகர வரிசையில் அமைக்க.**

மீன், மண், முன், மான், மூடி, மையல், மெல்ல, மௌவல், மோர், மேடு, மொட்டு, மிளகு.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

### இல்லத்தில் தந்தை–மகன் உரையாடல்

மகன் : டாடி, எனக்கு இந்த லெஸன் புரியல. எனக்குச் சொல்லிக் குடுங்க.

தந்தை : எந்த லெஸன் புரியல? புக்கெ கொண்டுவா பாக்கலாம்.

மகன் : இந்தாங்க டாடி.

தந்தை : கன்ஸ்யூமர் அவேர்னஸா?

மகன் : டீச்சர் இந்த லெஸன் நடத்தன அன்னிக்கு நான் லீவு போட்டுட்டேன். நாளைக்கு இந்த லெஸன்லெ டெஸ்ட் வைக்கிறாங்க.

தந்தை : அப்படியா, நான் சொல்லித் தறேன். நீ எதாவது திங்ஸ் வாங்க ஷாப்புக்குப் போறேன்னு வைத்துக்கொள். பார் எக்ஸாம்பிள், மம்மி உங்கிட்ட பணங்குடுத்து, பிரெட் பாக்கெட் வாங்கிட்டு வரச் சொல்றாங்க. நீ எப்படி வாங்குவே?

மகன் : என்ன டாடி இது? ஷாப்ல பிரெட் இருக்கான்னு கேப்பேன். அவங்க குடுத்தவுடன் உடனே எவ்வளவு ருப்பீஸ்னு கேட்டுக் குடுத்திட்டு வருவேன்.

தந்தை : வேறென்ன செய்வாய்?

மகன் : வேறெதுவுமில்லெ.

தந்தை : பிரட் பாக்கெட்டெ கையிலெ வாங்கன ஒடனே என்ன செய்வே?

மகன் : வீட்டுக்கு வந்துடுவேன்.

தந்தை : இட்ஸ் ராங். மொதல்ல அந்த பிரட் பாக்கெட்ல சரியான எடை இருக்கான்னு பாக்கனும். நெக்ஸ்ட் அந்தப் பாக்கெட்ல மேனுபாக்சரிங் டேட், எக்ஸ்பயரி டேட், எம்.ஆர்.பி. ரேட் என்ன போட்டிருக்காங்கனு பார்க்கனும்.

மகன் : இதெ எல்லாம் ஏம் பாக்கனும். பாக்கலின்னா என்ன மிஸ்டேக் ஆகும்?

தந்தை : சில மேனுபாக்சரிங் கம்பெனிங்க வெயிட் குறைவாகூடப் பேக் பண்ணியிருப்பாங்க. அந்த பிரெட் எக்ஸ்பயரி டேட் முடிஞ்சிருக்கலாம்., எம்.ஆர்.பி. ரேட்டெவிட அதிகமா பணம் குடுத்து நாம வாங்கியிருக்கலாம். அதனால இதெல்லாம் கேர்புல்லா பாத்து வாங்கணும்.

தமிழர்களாகப் பிறந்த நாம், நம் இல்லத்திலேயே அன்றாட வாழ்க்கையில் பெரும்பகுதி ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுகிறோம் என்பதற்கு இவ்வுரையாடலைச் சான்றாகக் காட்டலாம். ஆங்கிலச்சொற்களைக் கலக்காமல் பேசுவதுதான் தமிழர்களாகிய நமக்கும் நம்மொழிக்கும் பெருமை.

இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை அறிந்து கொண்டு நல்ல தமிழிலேயே பேசுக. இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதி உரையாடல் அமைக்க.

## வாழ்க்கைத்திறன்

### மன அழுத்தங்களை எதிர்கொள்ளல்

பொருந்தாத எண்ணம், செயல், சிந்தனை ஆகியவற்றால் ஏற்படும் மனநிலையே மன அழுத்தமாகும். மன அழுத்தத்தை மேலாண்மை செய்யாவிடில் தீமையே பயக்கும். மனத்தை நல்வழியில் செலுத்துதல், படைப்பாற்றலில் ஈடுபடுத்துதல், சமுதாய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல் முதலிய செயல்கள் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவும்.

ஏழாம் வகுப்பில் படித்து வரும் கனிமொழி, அன்று காலையிலிருந்தே யாருடனும் பேசாமல் வருத்தத்துடன் இருந்தாள். அவள் நிலையைக் கண்ட அவள் தோழி தனம், காரணம் அறிய விரும்பினாள். கனிமொழியின் தந்தைக்குத் திடீரென்று வந்த பணி மாறுதல் காரணமாக உடனடியாகத் தாங்கள் வேற்றூர்க்குச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதைக் கூறுகிறாள். நண்பர்களை விட்டுப்பிரிந்து செல்வதை நினைத்துத் தனக்கு வருத்தமாக இருக்கிறது என்றாள்.

கனிமொழி, தன் மன அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வாள் ?

இத்தகைய சூழலில் நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### நட்புறவு

வீட்டைவிட்டு வெளியுலகிற்கு வரும்பொழுது நாம் சந்திக்கும் மனிதர்கள் தாம் எத்தனை வகையினர் ? எத்தகைய பண்பினர் ? என்னென்ன பழக்கத்தினர் ? பார்த்தாலே வியப்பாக இருக்கிறது அல்லவா ? இவர்கள் எல்லாரும் நல்லவர்களா ? தீயவர்களா ? எவ்வாறு அறிந்து நட்புக்கொள்வது ?

அவரவர் வளர்ந்த சூழல்களால் நல்லவராகவும், தீயவராகவும் அறியப்படுகிறார்கள். எனவே, பள்ளியில் பழகும்பொழுது ஒருவனுடைய நல்ல குணங்களையும், பழக்கங்களையும் அறிந்தபின்னால் அவனை நண்பனாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவற்றையெல்லாம் ஆராயாமல், அருகில் உட்கார்ந்தவுடன் நம்முடன் முதன்முதலாகப் பேசியவன் என்ற வகையிலும் நட்புத் தொடங்கும். நாள் செல்லச்செல்ல அவனிடம் குற்றங்கள், குறைகள் தென்படும். அத்தகைய நேரங்களில் நட்புக் கொண்டவனிடமுள்ள குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி நம்மிடமுள்ள அன்பாலும், பொறுமைப் பண்பாலும் அவனைத் திருத்த முயற்சி செய்யலாம்.

இல்லையென்றால், அவன் நட்பை வேண்டாமென்று விட்டுவிடலாம். சரிதானே!

யாரிடமும் நட்புக் கொள்வதற்குமுன் நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு, நட்பு ஆகிய திருக்குறள் அதிகாரங்களைக் கற்று நட்புக் கொள்ளவேண்டும்.

கூடிப் பிரியேல் என்பது ஆன்றோர் வாக்கு.

# அரும்பு

கையெழுத்து இதழ் (மாதிரி)

திருவள்ளுவர் ஆண்டு ஆனி மாதம்
செப்டம்பர் – 2010

ஏழாம் வகுப்பு


அரசுப் பெண்கள் மேனிலைப் பள்ளி
திருவள்ளூர்,
திருவள்ளூர் மாவட்டம்



மணிக்கொடி

கதராடை நெய்து
மூவண்ணம் கலந்து
முக்கருத்து உணர்த்தி
நற்சக்கரம் பொறித்து
நானிலம் போற்றும்
மணிக்கொடியே!
பளிச்சிடுவதில் பாகுபாடில்லை.
பாமரனின் சட்டையில் ஒளிர்வாய்
பாராளுமன்றத்தில் பறந்திடுவாய்
பாக்களால் உன்னைத்
தொழுதிடுவோம்!
பாரதம் முழுவதும்
வணங்கிடுவோம்!

– மு. நந்தினி
ஏழாம் வகுப்பு



பா. இரம்யா
ஏழாம் வகுப்பு

## காந்தித் தாத்தா

பொய்யறியாத் தாத்தா
பொக்கைவாய்த் தாத்தா
அகிம்சைவழி விடுதலையைப்
பெற்றுத் தந்த தாத்தா
அவர் பெருமை போற்றுவோம்
அகிலமெங்கும் நாட்டுவோம்

க. புனிதா,
ஏழாம் வகுப்பு



தி. மாரியம்மாள்
ஏழாம் வகுப்பு

## நேரு மாமா

மாமாவாம் எங்கள் நேரு!
இவருக்கு இணை வேறு யாரு!
அகிலம் போற்றும் ஆசிய சோதி
மனிதருள் நீயே மாணிக்கம்!
ரோசா சூடிய ராசா – உன்னால்
ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சி
பஞ்சசீலக் கொள்கையில் மலர்ச்சி!
உங்கள் பிறந்த நாளே – என்றும்
எங்கள் மகிழ்ச்சி நாளே!

– இரா. தென்றல்
ஏழாம் வகுப்பு

## ஒலிப்புப் பயிற்சி

